விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சிறப்பு சலுகை
January 31ஆம் திகதி வரை மட்டுமே
ஆரோக்கியா
பல் வைத்தியசாலையின்
விசேட கட்டண சலுகையை
பெற்றுக்கொள்ள
இன்றே விரைந்திடுங்கள்.
Petrol Shed Lane, Nelliyady.
074 070 2241, 075 975 9828
(5389)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 18 ஞாயிற்றுக்கிழமை (31.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 043

## சாவகச்சேரியில் காவலாளி சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - மட்டுவில் பகுதியில் உள்ள தவறணை ஒன்றில் காவலாளியாக பணி புரிபவர் நேற்று சனிக்கிழமை காலை தவறணையில் இருந்து சடலமாக மீட்கப் பட்டுள்ளார். ▷15

## வடக்கில் நேற்று ஒருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று 247 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட் டுள்ளதாக பணிப் பாளர் த.சத்திய ▷15

## தனியார் காணிகளை ஆக்கிரமித்து

# 100 அடி உயரத்தில் தையிட்டியில் விகாரை

## இராணுவத் தளபதி அடிக்கல் நாட்டினார்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு காங்கேசன்துறை தையிட்டியில் ஒரு பகுதி தனியார் காணியையும் அபகரித்து 100 அடி உயரத்தில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா விகாரைக்கு நேற்று அடிக்கல் நாட்டினார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் நேற்று 2997 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கோவிட் - 19 தடுப்பூசி செலுத்தும் செயற்றிட்டத்தின் முதலாவது நாளாகிய நேற்றைய தினம் வடக்கு மாகாணத்தில் 2997 பேருக்கு தடுப்பூசி செலுத்தப் பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 1586 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் 448 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 360 பேருக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 313 பேருக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 290 பேருக்கும் இவ்வாறு செலுத்தப்பட் ▷15

## தடுப்பூசி ஏற்றப்பட்ட சிலருக்கு காய்ச்சல்

### வைத்திய நிபுணர் ஆனந்த

(கொழும்பு)

நாட்டில் நேற்று கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்ட பின்னர் எவருக்கும் ▷15

## முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராஜா

### தமிழரசுக் கட்சி தீர்மானம்

(வவுனியா)

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவை களமிறக்க வேண்டும் என தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக்குழு நேற்று சனிக்கிழமை ▷15

### தமிழர்கள் வெறும் பேச்சோடு நின்றுவிடாமல்

## அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு மக்கள் ஆதரவை திரட்ட வேண்டும்

### நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் வெறுமனே பேச்சோடு மட்டும் நின்றுவிடாமல் அரசியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு மக்கள் ஆதரவைத் திரட்ட வேண் ▷15

## யாழ்.நகர்ப் பகுதியில் பொலிஸ் திடீர் சோதனை



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் பகுதியில் பொலிஸார் திடீர் வீதி மறியல் சோதனையை நேற்று மேற்கொண்டனர்.

நாட்டில் ஏற்பட் ▷15

## குருந்தூர்மலை விவகாரம்; நீதிமன்றத்தில் வழக்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமலாக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாள ▷15

## கொரோனாவால் 8 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் கொரோ ▷15

## வாய்ப்புக்களை பயன்படுத்தி அனைவரும் தடுப்பூசி போட வேண்டும்

ஐ.நா பொதுச் செயலாளர்

14ஆம் பக்கம் பார்க்க

## கோட்டா அரசுக்கு உள்ளிருந்தே எதிர்ப்பு

### அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையில் பத்து கட்சிகள் ஓரணியில் திரள்வு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தின் உரிமையை சமரசம் செய்வதற்கான எந்த வொருநடவடிக்கையை ▷15

### 32 ஆயிரத்துக்கு மேற்பட்டோருக்கு


## நாடு முழுவதும் நேற்று தடுப்பூசி செலுத்தப்பட்டது

(கொழும்பு)

நாடு முழுவதும் நேற்று 32 ஆயிரத்திற்கும் அதிகமானவர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற் ▷15

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## சிற்றம்பலம் இராசநாயகம்

(முன்னாள் தலைவர் – கருணையம்பதி ச.ச.நிலையம்,
உடுப்பிட்டி ப.நோ. கூ. சங்கம்)

**திதி : திருத்தியை (31.01.2021)**

எம் அன்புக்குரிய தந்தையே
ஆல மரம் ஒன்று மண்ணில் புதைந்து இன்றுடன்
ஆண்டுகள் இரண்டு.
தந்தையே நீங்கள் ஓய்வுபெற்றும்
ஓய்வு தேடியதில்லை – அதனால்
உமக்கு ஆண்டவர் நிரந்தர ஓய்வு கொடுத்துவிட்டார் போலும்.

(C-1309)

பத்மவாசம்,
கரணவாய் மத்தி, கரவெட்டி. 071 558 4004

குடும்பத்தினர்

---

# Samugam Media இல்
## வேலை வாய்ப்பு

- Translator
- Area Reporters
- News Presenter
- Social Media Executivate
- Video Editor

குறைந்தது 2 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வயது எல்லை – (21–45 வயதிற்கு உட்பட்டோர்)

(5474)

**Contact No:- +94 76 245 5533**
**+94 77 149 7888**
**Mail ID:- hr.samugam@gmail.com**

---

# புளோரன்ஸ் நைற்றிங்கேல் தாதியர் பயிற்சி பாடசாலை

தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு

ஒரு வருட பயிற்சிப் பாடநெறி

பின் வைத்தியசாலைகளில்
நிரந்தர வேலை வாய்ப்புக்கள்



தகைமை : சாதாரண தரத்தில் ஆறு பாடம் சித்தி ( O/L 6 பாடம் )
வயது : 18 - 35


(5472)

077 718 6438

கே.கே.எஸ் றோட், மருதனார்மடம்.
கிளை - குஞ்சர் கடையடி, நெல்லியடி.

---

# முதலாம் ஆண்டு
## நினைவஞ்சலி



பிறப்பு 1944.05.09

இறப்பு 2020.01.27

(C-1315)

அமரர்

## பஸ்தியாம்பிள்ளை அம்புறோஸ் இராஜேந்திரா

நேசமாமா நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் இனிய பேச்சும்
எமை மகிழ்விக்கும் புன்னகையும்
நம்பிக்கை தரும் வார்த்தைகளும்
எங்கள் மனதை விட்டு
மறையவில்லையே மாமா!

இல. 23, கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
யோகேந்திரன் குடும்பத்தினர்

---

# நன்றி நவிலலும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



அமரர்

## காங்கேசமூர்த்தி ஞானமூர்த்தி

மலர்வு 04.02.1967

உதிர்வு 02.01.2021

கடந்த 02.01.2021 அன்று காலமாகிய என் அன்புத் தம்பி காங்கேசமூர்த்தி ஞானமூர்த்தி அவர்களின் மரணச் செய்தி அறிந்து அவரது ஈமக் கிரியைகளில் கலந்து துயரை பகிர்ந்து கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மேலும் தொடர்பாடல் மூலம் தங்கள் அனுதாபங்களையும் உணர்வினையும் வெளிப்படுத்தி நின்ற உள்ளூர், புலம்பெயர் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் துயர செய்தி அறிந்து பதாதை, சுவரொட்டிகள் மூலம் துயர் பகிர்ந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (01.02.2021) திங்கட்கிழமை காலை அந்தியேட்டிக் கிரியையும் அதனைத் தொடர்ந்து அன்னாரின் ஊறணி இல்லத்தில் வீட்டு சபிண்டீகரணம், மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஊறணி,
வல்வெட்டித்துறை.

(C-1297)

அண்ணா குடும்பத்தினர்
முருகுப்பிள்ளை
(குமார் மேத்திரி)

# தற்போது வழங்கப்படும் கொரோனா தடுப்பூசி திறன் மிக்கதும் பாதுகாப்பானதுமாகும்



## தொற்று நோய் வைத்திய நிபுணர்

**(யாழ்ப்பாணம்)**

**தற்போது வழங்கப்படும் கொரோனாத் தடுப்பூசி திறன் மிக்க தடுப்பூசியாகும். அனைவரும் பெற்றுக் கொள்ள வேண்டும் என தொற்று நோய் வைத்திய நிபுணர் வைத்தியர் கே.கேசவன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தடுப்பூசி போடும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை முழுவதும் கொரோனாத் தடுப்பூசி போடுதல் ஆரம்பிக்கப்பட்டு வடக்கு மாகாணத்தில் தடுப்பூசி போடும் திட்டம் நேற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு பாதுகாப்பான தடுப்பூசியாகும். இதனால் பக்க விளைவுகள் ஏற்படாது, பக்க விளைவுகள் மிக மிக குறைவு. இது மிகவும் திறன்மிக்க தடுப்பூசி. எனவே பொதுமக்கள் அனைவரும் போட்டுக் கொள்ள வேண்டும். நான் என்னை நேசிக்கின்றேன், எனது குடும்பத்தை நேசிக்கின்றேன், எனது சமூகத்தை நேசிக்கின்றேன், எனது நாட்டை நேசிக்கிறேன். அதனால் நான் தடுப்பூசி போடுகின்றேன். எனவே அனைவரும் இந்த தடுப்பூசியினை போட்டுக்கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-33)

# மாகாணசபை, உள்ளூராட்சி மன்ற வாக்களிப்பு அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும்

## தேர்தல் ஆணைக்குழு தெரிவிப்பு




(கொழும்பு)

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற வாக்களிப்பினை அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்பட வேண்டும் என தேர்தல்கள்ஆணைக்குழுயோசனை முன்வைத்துள்ளது.

நேற்று முன்தினம் கூடிய தேர்தல்கள் ஆணைக்குழு, அரசியலமைப்பு திருத்தம் குறித்து நியமிக்கப்பட்டுள்ள குழுவிடம் சில யோசனைகளை முன்வைக்க தீர்மானித்துள்ளது.

இதன்படி பிரஜை ஒருவரின் வாக்களிக்கும் உரிமை நேரடியாக அடிப்படை உரிமையாக அரசியலமைப்பில் உள்ளீர்க்கப்பட வேண்டும்எனயோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசியலமைப்பில் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் மற்றும் பொதுசன வாக்கெடுப்பு மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் வாக்களிப்பினையும் அதில் உள்ளீர்க்க வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு யோசனை முன்வைத்துள்ளது.

அத்துடன் போட்டியிடும் வேட்பாளர், அவரினால் மேற்கொள்ளப்பட்ட செலவு மற்றும் வருமானம் அடங்கிய கோப்பினை தேர்தல் பெறுபேறுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட வேண்டும் என்ற மேலும் ஒரு யோசனையும் அவற்றில் அடங்கியுள்ளது.


பொதுசன வாக்கெடுப்பில் தற்போது ஒரு விடயத்திற்காக மாத்திரமே மக்கள் கருத்து கணிப்பு இடம்பெறுகிறது.

இதன்படி ஏதேனும் ஒரு சட்டத்தை சில செயற்பாடுகள் தொடர்பான விடயதானம் அல்லது பல விடயதானங்களுக்காக மக்கள் கருத்து கணிப்பு கேட்கக்கூடிய வகையில் சரத்தினை திருத்தம் செய்ய வேண்டும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு யோசனை செய்துள்ளது.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் பதவி, பாராளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படும் தவறுகள், தேசிய பட்டியல் பாராளுமன்ற பதவி மற்றும் பெண்கள் பிரதிநிதித்துவம் குறித்த சில யோசனைகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு, அரசியலமைப்பு திருத்தக் குழுவிடம் முன்வைக்க எதிர்பார்த்துள்ளது. (நி-4)

# வீதிச் சமிக்ஞை பொருத்த நடவடிக்கை

(குப்பிழான்)



தெல்லிப்பழைச் சந்தியில் வீதிச் சமிக்ஞை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தெல்லிப்பழைச் சந்திக்கு அருகில் யூனியன் கல்லூரி மற்றும் சந்தியை அண்மித்த பகுதியில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அமைந்துள்ளது. குறித்த சந்தியால் தினமும் ஆயிரக்கணக்கானோர் போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் நிலையில் தெல்லிப்பழைச் சந்தியில் வீதிச் சமிக்ஞை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட உதவிச் செயலாளரும் பிரதேச சபை உறுப்பினருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் வேண்டுகோள் விடுத்தார்.

இதனையடுத்துக் கருத்துத் தெரிவித்த அங்கஜன் இராமநாதன் இது தொடர்பில் எதிர்வரும் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (5-18)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் கிடைக்கும்வரை எமக்கு சுதந்திரம் இல்லை

(பனிக்கன்குளம்)

பெப்ரவரி 04 ஆம் திகதி இலங்கையின் சுதந்திரதினம் ஆனால் காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் உறவுகள் கிடைக்கும் வரைக்கும் எங்களுக்கு சுதந்திரம் இல்லை என காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்கள் சங்கத் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்தார். நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திர தினத்தினை நாங்கள் கரிநாளாக புறக்கணித்து கறுப்புப் பட்டி அணிந்து உணவுத் தவிர்ப்பு போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளோம்.

எதிர்வரும் ஐ.நா. சபையின் அமர்வில் எங்களுக்கான தீர்வு கிடைக்க வேண்டும், தொடர்ச்சியாக எங்கள் உறவுகளை நாங்களே தேடிக்கொண்டிருக்கின்றோம். நான்கு ஆண்டுகளை கடந்த நிலையிலும் வீதியில் இறங்கி தொடர்ச்சியாக போராட்டம் மேற்கொண்டு வருகின்றோம்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கான நீதியினைப் பெற்றுத்தர முடியவில்லை. இருந்தும் நாங்கள் அழுத்தங்களை கொடுக்கின்றோம்.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம்.

உலக நாடுகளில் உள்ள மக்கள் எங்களுக்கான ஆதரவினைத்தர வேண்டும், குரல் கொடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (5-4-281)




கனடா நாட்டின் ரொரன்ரோ மனித நேயக் குரல் அமைப்பின் நிதிப் பங்களிப்பில் கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டன.

## கட்டடம் வாடகைக்குண்டு

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி சந்திரச்சந்திக்கு அருகாமையில் கீழ் தளத்தில் ஒரு கடையும் 1ஆம் மாடியில் 2 கடைகளும் 2ஆம் மாடியில் 2 கடைகளும் சகல வசதிகளுடன் உண்டு.
(தனியார் கல்வி நிலையம், நிறுவனங்கள், களஞ்சியசாலை வியாபார நிலையத்துக்கும் ஏற்றது.)

தொடர்பு:- குரு (5486)

077 468 3354
076 221 2037



## ஓலைச்சுவடி சோதிட நிலையம்

உலகப் புகழ்பெற்ற தமிழ்நாடு வைத்தீஸ்வரன் கோவில் இந்தியாவில் இருந்து ஓலைச்சுவடி மூலம் பார்க்கப்படும். உங்களுடைய எதிர்காலப் பலன்கள், ஆரோக்கியம், கல்வி, திருமண வாழ்க்கை, ஆயுள் தீர்க்கம், உத்தியோகம், வெளிநாட்டுப் பலன்கள், முற்பிறப்பு, இப்பிறப்பில் தடைகள் ஏற்பட்டால் அவைகள் விலக நிவர்த்தி பரிகாரங்கள் மற்றும் எதிர்கால பலன்களைத் தெரிந்து கொள்ளலாம்.
மட்டக்களப்பு, திருகோணமலையில் உள்ளவர்களுக்கு வவுனியாவில் வாசிக்கப்படும். சுபம்

தொடர்புகளுக்கு:- ஓலைச்சுவடி சோதிட நிலையம்
கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில், யாழ்ப்பாணம். (5485)
தொடர்புகளுக்கு. 076 328 7119



## பணிநிலை வேண்டுகை



கரிகணன் (தனியார்) நிறுவனத்தின் விஸ்தரிப்பிற்காகப் பணிநிலை வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

- கணினி தட்டச்சாளர் (COMPUTER TYPIST)
- கணினி வடிவமைப்பாளர் (COMPUTER GRAPHIC DESIGNER)

(C-1317)

முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும்
நேர்முகத்தேர்வு: 01–05 பெப்ரவரி

வாராந்தம் 45 1/2 மணிநேர பணி
பதிப்பகத்தின் மறு பரிமாணம் விடுமுறை நாட்களில் விடுமுறை

இலங்கைத் தொழில்த் திணைக்களத்தின் சட்ட விதி முறைகளுக்கு அமைவாக இயங்கும் வடக்கின் ஒரே அச்சக நிறுவனம்
Harikanan PRINTERS OF THE NORTH
+94 21 222 2717|8
#672B, K.K.S. Road, Jaffna.


# 'தல' தோனியைச் சந்தித்த ரிஷாப்

இந்திய வீரர் ரிஷாப் பன்ட், முன்னாள் அணித் தலைவர் தோனியை சந்தித்தார்.

இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பு துடுப்பாட்ட வீரர் ரிஷாப் பன்ட். சமீபத்தில் முடிந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அதிகபட்சமாக 274 ஓட்டங்கள் குவித்த இவர், சிட்னி டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் 97 ஓட்டங்களை விளாசி, இந்திய அணியை தோல்வி யின் பிடியில் இருந்து மீட்டார்.

தொடர்ந்து அசத்திய இவர், விளாசி வெற்றிக்கு வித்திட்டார்.

இதனையடுத்து இந்திய அணி 2-1 என, போர்டர் - கவாஸ்கர்' கிண்ணத்தை வென்றது.

சமீபத்தில் நாடு திரும்பிய ரிஷாப் பன்ட், இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் தோனி, அவரது மனைவி சாக்சி ஆகியோரை நேரில் சந்தித்தார்.

இதற்கான போட்டோவை தோனியின் மனைவி சாக்சி, தனது இன்ஸ்டாகிராம்' சமூக வலைத் தளத்தில் பதிவிட்டார்.



தோனி, சாக்ஷி, ரிஷாப்

# பார்சிலோனா வெற்றி

கோபா டெல் ரே' கால்பந்து தொடரின் காலிறுதிக்கு மெஸ்சியின் பார்சிலோனா அணி முன்னேறியது.

ஸ்பெயினில், உள்ளூர் கழக அணிகள் பங்கேற்கும் கோபா டெல் ரே' கால்பந்து தொடர் நடக்கிறது. இதன் ரவுண்ட்-16' போட்டியில் பார்சிலோனா, ரே வாலேகனோ அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய பார்சிலோனா அணி 2-1 என்ற கணக் கில் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைந்தது. பார்சிலோனா சார்பில் மெஸ்சி (70வது நிமிடம்), டி ஜோங் (80வது) தலா ஒரு கோலடித்தனர். வாலேகனோ அணிக்கு கார்சியா (63வது நிமிடம்) ஆறுதல் தந்தார்.

மற்றொரு போட்டியில் செவில்லா அணி 3-0 என்ற கோல் கணக்கில் வாலன்சியா அணியை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றது. அல்மேரியா அணி 5-4 என்ற கணக்கில் பெனால்டி ஷூட் அவுட்' முறை யில் ஒசாசுனா அணியை வென்றது.



இப்போட்டியில் ஒரு கோல் அடித்த மெஸி பந்தை லாவகமாக கடத்தும் காட்சி...


## சேல்ஸ்மன் தேவை

யாழ்.நகரில் இயங்கும் எமது ஜவுளி கடைக்கு வியாபாரம் பழக ஆர்வம் உள்ள ஆண்கள் மற்றும் புடவை அனுபவம் உள்ளவர்கள் தேவை. (நேரில் வரவும்) (5484)

சென்னை பெசன் வேல்ட்
63, பெரிய கடை, யாழ்ப்பாணம்.



## வீடு வாடகைக்குத் தேவை

3 பேர் கொண்ட சிறிய குடும்பமொன்றுக்கு யாழ்.நகரை அண்மித்த பிரதேசத்தில் வீடு வாடகைக்கு தேவை. (C-1318)

தொ.இ.
076 792 4565



## வேலைவாய்ப்பு

- எழுத்தாளர் (Content writer)
- படப்பிடிப்பாளர் (Videographer & Editor)

இத்துறைகளில் ஆர்வம் உள்ளவர்கள் மேலதிக தகவல்களுக்கு
077 817 7817 (C-1316)


## மரண அறிவித்தல்



### இரத்தினசபாபதி ரவீஸ்வரன்

பிறப்பு 24✽10✽1969 | இறப்பு 30✽01✽2021

மறவன்புலோ மத்தி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ஐயனார் கோவில் வீதி சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினசபாபதி ரவீஸ்வரன் நேற்று (30.01.2021) சனிக்கிழமை காலமானார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோவில் வீதி, சண்டிலிப்பாய்.
(5483)
தகவல்:- லிங்கேஸ்வரன்

## 31ஆம் நாள் நினைவு நிகழ்வும் நன்றி நவிலலும்




### தம்பிஜயா பவான்

01/01/2021 அன்று கனடாவில் இறைபதமடைந்த அமரர் தம்பிஜயா பவான் அவர்களது 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 31/01/2021 ஞாயிற்றுக்கிழமை கனடாவிலும் 06/02/2021 சனிக்கிழமை மீசாலையில் அவரது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வில் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் அன்னாரது துயரச் செய்தியறிந்து நேரிலும் அலைபேசி மற்றும் முகநூலூடாகவும் மட்டுன்றி மலர்வளையங்கள் எனப் பல்வேறு வழிகளிலும் எமது துயரில் பங்குகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"பிறந்தவர் அனைவரும் இறப்பது நியதி
வாழ்க்கை ஓட்டத்தின் அளவு இறைவனின் தீர்ப்பு"

(C-1311)

கனடா, மீசாலை. நன்றி நவில்வோர்:– குடும்பத்தினர்

# இந்தியாவுடனான நெருங்கிய உறவே விடுதலைப்புலிகளை தோற்கடிக்க உதவியது

## நினைவூட்டினார் லலித் வீரதுங்க



**(கொழும்பு)**

**இறுதிக் கட்டப் போரின் போது இந்தியாவுடனான நெருங்கிய உறவு விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க உதவியது என இலங்கையால் மீண்டும் நினைவுபடுத்தப்பட்டுள்ளது.**

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் லலித் வீரதுங்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்தியாவுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது. இந்த விடயத்தை அவர் நினைவு கூர்ந்தார்.

இந்தியாவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தடுப்பூசிகளைப் பயன்படுத்தி கொவிட்-19 தடுப்பூசித் திட்டத்தை தேசிய தொற்று நோயியல் மருத்துவமனையில் இலங்கை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தது.

இந்நிலையில் இந்நிகழ்வில் கருத்துக்கூறிய அவர், இரு தரப்பினரும் (இந்தியா-இலங்கை) ஒரே பக்கத்தில் இருப்பதை விவாதங்கள் உறுதி செய்துள்ளன என்று குறிப்பிட்டார்.

அத்துடன், வெல்ல முடியாது என்று எல்லோரும் சொன்ன போரை வெல்ல இந்தியா தங்களுக்கு உதவியது என அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கொரோனா வைரஸுக்கு எதிரான போரை வெல்லவும் இலங்கைக்கு இந்தியா இப்போது உதவுகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இலங்கை தடுப்பூசிகளைப் பெறுவதை உறுதிசெய்ய பெரிய அளவில் உதவியதாக வீரதுங்க தெரிவித்தார். (நி-4)

# ஊழல் நிறைந்த நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 94 ஆவது இடம்

(கொழும்பு)

ஊழல் நிறைந்த நாடுகள் பட்டியலில் இலங்கை 94 ஆவது இடத்தை பிடித்துள்ளது.

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் எனும் சர்வதேச கண்காணிப்பு அமைப்பு (ஊழல் உணர்வுக் குறியீடு - 2020) 2020ஆம் ஆண்டின் ஊழல் நிறைந்த நாடுகளின் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது.

இக்கணக்கெடுப்பில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 180 நாடுகளில் இலங்கையானது 38/100 புள்ளிகள் பெற்று 94ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

இதன்படி டென்மார்க், நியூசிலாந்து ஆகிய நாடுகள் மிகக்குறைந்த ஊழலுள்ள நாடுகளாக 88 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளன.

அதேவேளை சிரியா, சோமாலியா, தென் சூடான் ஆகியன முறையே 14,12 மற்றும் 12 புள்ளிகளுடன் கடைசியாக இடம்பெற்றுள்ளன. (நி-4)

# சுகாதார வழிகாட்டல்களை மீறிய நிறுவனங்களுக்கு வழக்கு

(கொழும்பு)

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய செயற்படாத 1,223 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு எதிரான வழக்கு தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதுவரை சுமார் 9,495 நிறுவனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.(நி-4)

# சட்டவிரோத மின்சார இணைப்பில் சிக்கி இரண்டு காட்டு யானைகள் மரணம்

(பொலநறுவை)

பொலநறுவை - மெதிரிகிரிய - தஹம்வெள பகுதியில் சட்டவிரோத மின்சார இணைப்பில் சிக்கி மரணித்த இரண்டு காட்டு யானைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

காட்டு யானைகளை கட்டுப்படுத்துவதற்காக விவசாயிகள் குறித்த பகுதியில் சட்டவிரோத மின்சார இணைப்புகளை பயன்படுத்துகின்றனர். இந்த நிலையில், நேற்று அதிகாலை குறித்த சட்ட விரோத மின்சார கம்பி இணைப்பில் சிக்கி இறந்த நிலையில், இரண்டு காட்டு யானைகளின் சடலங்கள் மீட்கப்பட்டதாக வனஜீவரா சிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத மின்சார இணைப்பை பெற்ற நபரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். (நி-4)


**ICT வகுப்புக்கள்**

A/L,O/L ICT வகுப்புக்கள் தனிப்பட்ட வகுப்புக்களாகவோ குழு வகுப்புக்களாகவோ கொடுக்கப்படும்.
ஆசிரியர்: திரு.S.சத்தியன் (B.Sc) PGDE
இடம்: யாழ்.நகர், சாவகச்சேரி.

**077 271 8498**

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நேர் எதிர்ப்புறமாக உள்ள சதுரக்காணி விற்பனைக்கு.வியாபார ஸ்தலங்களுக்கு உகந்தது. 2 1/4 பரப்பு 25 perches. சுற்றிவர முள்வேலி. பங்குக்கிணறு மற்றும் இரும்புப் படலையுடன் உள்ள காணி அதிக விலை கோருவோருக்கு கொடுக்கப்படும். தரகர் வேண்டாம்

**தொடர்பு:- 077 362 3542**

**வீடு வாடகைக்கு**

உடுப்பிட்டி சந்தியில் இருந்து 500 M தூரத்தில் அச்சதை முதியோர் இல்லத்திற்கு எதிரே உள்ள வீடு வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு:- 077 8030331
0774973708**

**தொடர்மாடிக் குடியிருப்பு வீடு விற்பனைக்கு**

வெள்ளவத்தை 37 லேன் காலி வீதிக்கு அருகாமையில் 12 வருடமாக மிக நல்ல நிலையில் உள்ள 3 அறை. 2 குளியலறை 1200 SQ வீடு மலிவு விலை. 16.5 மில். (Deed and coc works going well) வங்கிக் கடன் செல்ல முடியாது. தரகர் வேண்டாம். S.P. KARAN

**தொடர்பு:- 077 343 4005**

**வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு**
**021 221 7603, 021 567 1532**


## மரண அறிவித்தல்

### திருமதி நிசாந்தன் நிறோஜினி (நிறோ)



தோற்றம்: 23.08.1989
மறைவு: 30.01.2021

யாழ்ப்பாணம் கொட்ட டியைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட நிசாந்தன் நிறோஜினி நேற்று காலமானார்.

அன்னார் பற்குணராஜா (சின்டி) ஜெயந்தி (ஜெயா) ஆகியோரது அன்பு மகளும் செல்லத்துரை- வரதலட்சுமி ஆகியோரது அன்பு மருமகளும் S.நிசாந்தன் (சிம்பு) அவர்களின் அன்பு மனைவியும் சபித்தா (சோபா), காலஞ்சென்ற பிரசன்னா, பிரதீ பராஜ் (பார்த்திபன்), பிரதீபன் (சுன்னாகம்) ஆகியோரது அன்புச் சகோதரியும் ஹரிகரன், ஹஜலக்சனா, ஹம்சிகா, சாருசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கொட்டடி வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் (5469) தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



மலர்வு 1933 - 03 - 05
உதிர்வு 2021 - 01 - 30

### திருமதி குமாரசுவாமி சரஸ்வதி

யாழ்.சரவணை மேற்கு வேலணையை பிறப்பிடமாகவும் கொழும்பு சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசுவாமி சரஸ்வதி அவர்கள் நேற்று (30.01.2021) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை- முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்தம்பி- குமாரசுவாமி அவர்களின் பாசமிகு மனைவியும் தயானந்தன், சதானந்தன், காலஞ்சென்ற சர்வானந்தன் மற்றும் குகநேசனின் அன்புத் தாயாரும் முல்லை, சியாமளாதேவி, திலகவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தவநாயகம், சாந்தலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தஷ்யன், ஜயன், சஜன், சசிகாந், பங்கஜன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சரவணை புன்னம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(5465)

குடும்பத்தினர்
சரவணை மேற்கு, வேலணை
(சின்னமடு பாடசாலை அருகில்)

**தொடர்புகளுக்கு:-**
தயானந்தன் (மகன்) 0047 975 305 60
0047 221 671 04
சதானந்தன் (மகன்) 0094 703 693 667
குகநேசன் (மகன்) 0044 756 389 6360

# பொருத்தமற்ற இடங்களில் வீட்டுத்திட்டங்களை வழங்கக்கூடாது

(சாவகச்சேரி)

**எதிர்காலத்தில் அனர்த்தங்கள் இலகுவில் ஏற்படக்கூடிய இடங்களில் வீட்டுத் திட்டங்களை வழங்கக்கூடாது எனப் பாராளுமன்ற உறுப்பினரும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கல்லுண்டாய் மற்றும் சாவற்கட்டு குடியிருப்பு மக்கள் கடல் நீர் உட்புகுதல் மற்றும் வெள்ள அனர்த்தங்களால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வருவதாக கூட்டத்தில் சுட்டிக்காட்டிய போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனர்த்தங்கள் இலகுவில் ஏற்படக்கூடிய இடங்களில் தான் வீட்டுத்திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இதனால் தொடர்ச்சியாக பிரச்சினைகள் ஏற்படுவதுடன் மக்களும் பாதிக்கப்படுகின்றனர். இவ்வாறான பொருத்தமற்ற இடங்களில் குடியேற்றம் மேற்கொண்டிருக்கக்கூடாது.

இருப்பினும் வீட்டுத்திட்டம் கொடுத்து விட்டோம்.எனவே எவ்வளவு பணம் செலவழித்தாவது அம்மக்கள் நிம்மதியான வாழ்க்கை வாழ வழி வகை செய்ய வேண்டும். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் விரைவாக இக்குடியேற்ற மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டு நிரந்தர தீர்வுத்திட்டம் வழங்கப்படும். எதிர்வரும் காலங்களில் இவ்வாறு பொருத்தமற்ற இடங்களில் வீட்டுத்திட்டங்களுக்கான அனுமதி கொடுக்கக்கூடாது என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-4-30)


# விசேட பூஜைகள்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறையாசி வேண்டி இன்று 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவக்குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயணமும் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின். தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (5-4)



நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் துலா தன்னார்வ அமைப்பு மற்றும் **JK Dreams** ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நேற்று கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

# அச்சுவேலி பகுதியில் 8 கிலோ கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது



(நல்லூர்)

மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் 8 கிலோ கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த பெண்ணின் வீட்டில் சோதனை மேற்கொண்ட போது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (5-4-33)

# இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2002 உயர்தரப் பிரிவின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.

இவ் இரத்ததான முகாமில் குருதிக் கொடையாளர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.(5-4)




# ரயில் மோதி 8 மாடுகள் சாவு சாவகச்சேரியில் சம்பவம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரி-சங்கத்தானைப் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை ரயில் மோதி எட்டுப் பசுமாடுகள் உயிரிழந்துள்ளன.

யாழில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதிப் புகையிரதம் மோதியே உயிரிழந்துள்ளன.

உயிரிழந்த மாடுகளை சாவகச்சேரி நகரசபையினர் அப்புறப்படுத்தியுள்ளனர். (5-4-30)

# யாழில் மகாத்மா காந்தியின் 73 ஆவது நினைவு நிகழ்வு





(நல்லூர்)

மகாத்மா காந்தியின் 73 ஆவது நினைவு அஞ்சலி நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு முன்பாக உள்ள அவரது உருவச் சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த அஞ்சலி நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றது.நிகழ்வில் யாழ் இந்திய துணைத் தூதுவர் கே.பாலச்சந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், யாழ்ப்பாணம் மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (5-4-33)

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான கும்பாபிஷேக தின விசேட பூஜைகளும் சங்காபிஷேகமும் நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் இடம் பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து மாலை 4 மணியளவில் திருவூஞ்சல் இடம்பெற்று அம்பாள் பூந்தண்டிகையில் வீதி வலம்வரும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது என தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அறிவித்துள்ளார். (5-4)

## கட்டாரில் இருந்து 293 தொழிலாளர்கள் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கட்டாருக்கு தொழில் நிமித்தம் சென்றிருந்த 293 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

குறித்த இலங்கையர்கள் விசேட விமானத்தின் மூலம் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

நாடு திரும்பிய அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் கடமை நேர முகாமையாளர் தெரிவித்தார். (நி-4)

## குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றில்இருந்து 879 பேர்குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 56 ஆயிரத்து 277 ஆக அதிகரித்துள்ளது.


மேலும் இலங்கையில் கொரோனா தொற்றினால் இதுவரை 305 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-4)

# பாரத மாதாவின் இதயத்தில் இலங்கைக்கு என்றும் சிறப்பிடம் உண்டு

## தடுப்பூசி வழங்கும் நிகழ்வில் கோபால் பாக்லே

**(கொழும்பு)**

**ஒரு குடும்பம் - அயலகத்திற்கு முதலிடம் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கையில் பாரத இதயத்தில் இலங்கைக்கு என்றும் சிறப்பிடம் உள்ளது. இவ்வாறானதொரு நிலையில் உலகம் வைரஸ் தாக்கத்திலிருந்து மீண்டெழும் நோக்கில் இலங்கையில் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள தடுப்பூசி வழங்கும் திட்டம் நிச்சயம் வெற்றியளிக்கும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.**



இந்திய தடுப்பூசியினை பெற்றுக் கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விமான நிலையத்திற்கு வந்திருந்தமையானது இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவின் உச்ச நிலையை வெளிப்படுத்தியுள்ளது என இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

இந்திய கொவிட் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஐ.டி.எச். வைத்தியசாலையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்த உயர்ஸ்தானிகர் மேலும் கூறுகையில், தடுப்பூசி வழங்குவதன் மூலம் இலங்கை மீண்டும் உலக நாடுகளுடன் தொடர்புகளைப் பேணக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும். இது முழு உலகையும் பாதித்துள்ள வைரஸ் பரவலாகும். எனவே காலம் மிக முக்கியமானது. எவ்வளவு வளங்கள் காணப்பட்டாலும் சுகாதாரம் மற்றும் விஞ்ஞான ரீதியில் முன்னேற்றமடைந்திருந்தாலும் எந்தவொரு நாட்டிற்கும் இந்த வைரஸுடன் போராட முடியவில்லை.

எனவே சர்வதேச தொடர்புகள் தான் இந்த வைரஸுக்கு எதிராகப் போராடுவதற்கான சிறந்த வழிமுறையாகும். அயலகத்திற்கு முதலிடம் என்பதே இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் கொள்கையாகும். அதற்கமைய இந்தியாவின் அயல் நாடுகளில் இலங்கையானது இந்திய மக்களின் மனதில் பிரதான இடம்பிடித்துள்ள நாடு என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என பாக்லே தெரிவித்தார். (நி-4)

# மௌனமாக இருப்பதாக நினைத்துவிட வேண்டாம் பாராளுமன்றில் கேள்வி எழுப்புவோம்



(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளோம் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அதிரடியான மாற்றங்களை ஏற்படுத்தப்போவதாக அறிவித்துவிட்டே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால் மொட்டு கட்சிக்கு வாக்களித்த மக்களே இன்று அரசின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சிக்கின்றனர்.

பொருட்களின் விலைகள் நாளாந்தம் உயர்வடைந்து வருகின்றன. சில வேளை நாமும் அந்த பக்கம் சென்றிருந்தால் இந்நேரம் மக்களின் சாபத்துக்கு உள்ளாக வேண்டி இருந்திருக்கும்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கப்பட்டது. ஜனாதிபதியும் இது குறித்து அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார்.

சம்பள விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பவுள்ளோம்.

ஆயிரம் ரூபா வழங்கப்படும் என அரசாங்கமே அறிவித்தது. எனவே, அதற்கு அழுத்தம் கொடுத்துத்தான் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாம் மௌனமாக இருப்பதாக நினைத்துவிட வேண்டாம். சம்பள விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பொலிஸ் பிரிவினருக்கு இன்று தடுப்பூசி

(கொழும்பு)

இந்தியாவினால் வழங்கப்பட்டுள்ள ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸ், வைத்தியசாலையின் நிர்வாகப்பிரிவினருக்கு வழங்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது, அஸ்ட்ராஜெனெகா கொவிட்-19 தடுப்பூசிகள் வைத்திய பிரிவினருக்கும் இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இன்று காலை 9 மணியளவில் பொலிஸ், வைத்தியசாலையில் நிர்வாகப் பிரிவினருக்கும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி-4)

# நூறு வைத்தியசாலைகளில் தடுப்பூசி வழங்கப்படுகிறது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவின் அஸ்ட்ராஜெனெகா கோவிஷீட் தடுப்பூசி 100 வைத்தியசாலைகளில் வழங்கப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார ஊழியர்கள் மற்றும் முப்படையினருக்கு தடுப்பூசி செலுத்தப்படுவதாக கொவிட் நோய்க் கட்டுப்பாடு மற்றும் ஆரம்ப சுகாதாரம் தொடர்பிலான இராஜாங்க அமைச்சின் செயலாளர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இதற்கு தேவையான தடுப்பூசிகள் பிராந்திய ஔடத களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

அடுத்த 10 நாட்களுக்குள் முதலாவது தொகுதி தடுப்பூசிகளை நிறைவு செய்ய திட்டமிட்டுள்ளதாக விசேட வைத்தியர் அமல் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 5 இலட்சம் தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கை நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. (நி-4)

# பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணையுங்கள்

## ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டு செல்வதற்காக அரச தலைமைகளும் பொது மக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கிராமத்துடனான உரையாடல் விசேட வேலைத்திட்டத்தின் 8 ஆவது திட்டம் மொனராகலை மாவட்டத்தின் தனமல்வில பகுதியில் இடம் பெற்றது.

நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

மேலும் பொதுமக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். (நி-4)

# தடுப்பூசி விவகாரத்தில் சீனா இலங்கை மீது அழுத்தம்

## இந்திய ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவின் கொவிட்-19 தடுப்பூசியான சினோஃபார்ம் தடுப்பூசியை இலங்கையில் அனுமதிக்குமாறு சீன அரசாங்கம் இலங்கையை வற்புறுத்தியதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவினால் 5 இலட்சம் அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் தடுப்பூசிகள் இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

இதனை அடுத்து சீனா 3 இலட்சம் சினோஃபார்ம் தடுப்பூசியை இலங்கைக்கு வழங்க விருப்பதாக அறிவித்தது.

எனினும் கொவிஷீல்ட் தடுப்பூசியை இலங்கையில் அவசர நிலைமையில் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள போதும் சினோஃபார்ம் தடுப்பூசிக்கு இதுவரையில் அவ்வாறான அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் சினோஃபார்ம் தடுப்பூசியை இலங்கையில் அனுமதிக்குமாறு சீனா அழுத்தம் கொடுத்திருப்பதாக இந்தியாவின் த எக்கனமிக்ஸ் ரைம்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இலங்கையில் உள்ள சீனத்தூதரகம் இதுவரையில் எதுவிதமான பதிலையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)



யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சமாசத்தில் பயிற்சி வகுப்புக்களில் பங்கேற்கும் மாணவர்களுக்கு கொவிட் தொற்றைத் தடுக்கும் வகையில் வேதுபிடிக்கும் இயந்திரம் அண்மையில் வழங்கப்பட்டது.

# எதிர்த்துப் போராட ஒன்றிணையுங்கள்

## கைத்தொழில் அமைச்சர் அழைப்பு

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு எதிராக அரசியல் கட்சிகள் ஒன்றுபடவேண்டும் என கைத்தொழில் அமைச்சர் விமல்வீரவன்ச அறைகூவல் விடுத்துள்ளதாக தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்திடம் ஒப்படைப்பது என தீர்மானித்தால் அது குறித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பேச்சுவார்த்தைகளிற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் முன் வரவேண்டும் என அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்திய நிறுவனத்திடம் வழங்குவது தொடர்பில் அரசாங்கம் அடுத்தவாரம் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பித்தால் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய தன் அவசியத்தை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (நி-4)

# எம்முடன் இணையுங்கள்

## ரணிலுக்கு திஸ்ஸ அழைப்பு





(கொழும்பு)

ஐக்கிய மக்கள் கூட்டமைப் பொன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளைத் தம்முடன் இணைந்துகொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையினை மாற்றியமைப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமெனவும் இதனால் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கு தாம் அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போதைய நிலையில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டுமெனவும் அதற்காக ஒவ்வொரு தனிநபரினதும் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# இளையோர் போதைப்பொருளுக்கு அடிமையாவதை தடுக்க விசேட திட்டம்



(கொழும்பு)

இளைய தலைமுறையினர் போதைப்பொருளுக்கு அடிமையாவதை தடுப்பதற்காக விசேட வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

மூன்று பிரிவுகளின் கீழ் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில்கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

எமது இளைய தலைமுறையினர் இந்தப் போதைப்பொருள் அச்சுறுத்தலுக்கு இலக்காகி வருகின்றனர்.

மூன்று பகுதிகளாக இதனை ஒழிக்க எதிர்பார்த்துள்ளோம். அதில் ஒன்று இயன்றளவு நாட்டிற்குள் வரும் போதைப்பொருட்களை தடுக்க எதிர்பார்த்துள்ளோம்.

குறித்த போதைப்பொருட்களில் பெரும்பான்மையானவை ஆப்கானிஸ்தானில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஊடாகத்தான் வருகிறது.

குறித்த கடல் பாதைகளை அறிந்து அந்த கடல் பாதைகளில் கடற்படைக் கப்பல்களை நிறுவி அவற்றை முழுமையாக நிறுத்தவுள்ளோம். இரண்டாவதாக, கேள்வியை குறைத்துக் கொள்ள வேண்டும்.

கேள்விகளை குறைத்துக் கொள்வதற்காக நாளை பாடசாலைகளில்குழுவொன்றை அமைக்கவுள்ளோம். அதனூடாக போதைக்கு அடிமையானவர்கள் மற்றும் போதைப்பொருட்களின் ஆபத்துகள் குறித்த ஆலோசனைகளை வழங்க முடியும்.

மூன்றாவதாக, போதைக்கு அடிமையானவர்களை மீண்டும் ஒருபோதும் சிறையில் அடைக்க மாட்டோம். அவர்கள் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படுவார்கள் என மேலும் தெரிவித்தார். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 110 | 140 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 800 | 1000 |
| தக்காளி | 140 | 150 | 160 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 70 | 80 | 60 |
| கோவா | 100 | 100 | 90 | 120 |
| கரட் | 240 | 250 | 250 | 280 |
| பூசணி | 120 | 150 | 140 | 200 |
| புடோல் | 140 | 200 | 180 | 200 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 120 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 400 | 500 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80-150 | 120 |
| பாகற்காய் | 250 | 300 | 350 | 500 |
| வெண்டிக்காய் | 140 | 150 | 200 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 350 | 350 | 400 | 300 |
| லீக்ஸ் | 150 | 160 | 150 | 200 |
| பீற்றூட் | 160 | 160 | 280 | 240 |
| கறிமிளகாய் | 280 | 300 | 300 | 400 |
| முருங்கைக்காய் | --- | --- | --- | --- |
| போஞ்சி | 260 | 260 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 280 | 300 | --- | 450 |
| கீரை - 1 பிடி | 70 | 60 | 80 | 100 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60-80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 350 | 280 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 60 | 40 |
| வல்லாரை | 30 | 40 | 30 | 30 |
| ஈரப்பலா | --- | 100 | --- | 80 |

# சுதந்திர தினத்தன்று தேசியக் கொடியை பறக்க விடுங்கள்

(கொழும்பு)

இலங்கையின் 73 ஆவது சுதந்திரதினம் பெப்ரவரி 4 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளதை முன்னிட்டு எதிர்வரும் 7 ஆம் திகதி வரை தேசிய கொடியை பறக்க விடுமாறு தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

சகல வீடுகள், வியாபார நிலையங்கள், அரச மற்றும் தனியார் அலுவலகங்கள் மற்றும் வாகனங்களில் இவ்வாறு தேசியக் கொடியைப் பறக்க விடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரச அலுவலகங்கள் அமைந்துள்ள நிறுவனங்கள் அமைந்துள்ள சகல கட்டடங்களையும் பெப்ரவரி 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் மின் விளக்குகளால் அலங்கரிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"செழிப்பான எதிர்காலம் : சௌபாக்கியமான நாடு" என்ற தொனிப்பொருளில் பெப்ரவரி 4 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையில் சுதந்திர தின நிகழ்விற்கான கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-4)

# இராசிபலன்

31.01.2021
தை 18, ஞாயிற்றுக்கிழமை
திருதியை முன்னிரவு 10.25 மணிவரை
பூரம் பின்னிரவு 3.20 மணிவரை
சுபநேரம் 9.36-11.06 மணிவரை
இராகுகாலம் 5.06-6.36 மணிவரை
சந்திராஷ்டமம்: அவிட்டம்

வளவன்


மேஷம்

சுப முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.


ரிஷபம்

சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வாகன சுகமுண்டு, தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


மிதுனம்

பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பொல்லாதவர்கள் உங்களைவிட்டு விலகுவர், உறவினர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், போசன சுகமுண்டு.


கடகம்

குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.


சிம்மம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.


கன்னி

சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும் நாள், மனச் சஞ்சலங்கள் கூடும் நாள்.


துலாம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், செல்வ நிலை உயரும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.


விருச்சிகம்

இனிய சம்பங்கள் நடைபெறும் நாள், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், போசன நன்மையுண்டு.


தனுசு

வீண் பழிகள் அகல விரைந்து முடிவுகள் எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.


மகரம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.


கும்பம்

புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


மீனம்

பழைய பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிப்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

நம்பிக்கையே ஏழையின் உணவு

# மத நம்பிக்கை, கலாசார மரபுகளுக்கு இடமளிக்க வேண்டும்- அமெரிக்கா வலியுறுத்து

(வோஷிங்டன்)

**இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்படும் மரணங்களின்போது ஒவ்வொரு சமூகங்களினதும் மரணங்கள் தொடர்பான மத நம்பிக்கை ம்ற்றும் கலாசார மரபுகளுக்கு இடமளிக்க வேண்டும் என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.**

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார பணியகம், தனது டுவிட்டர் தளத்தினூடாக இலங்கை அரசாங்கத்திடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

குறித்த டுவிட்டர் பக்கத்தில் மேலும் கூறியுள்ளதாவது, "சர்வதேச மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டுதல்களுக்கு அமைய இந்த நடவடிக்கையை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

மேலும் மக்கள் தமது அன்புக்குரியவர்களுக்கு மத நம்பிக்கைகளுக்கு இணங்க விடை கொடுக்கும் உரிமை அவர்களுக்கு இதனூடாக கிடைக்கும்.

ஆகவே ஒவ்வொரு சமூகங்களினதும் மரணங்கள் தொடர்பான மத நம்பிக்கை மற்றும் கலாசார மரபுகளுக்கு இடமளிக்க வேண்டும்" என அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார பணியகம் டுவிட்டர் பதிவில் இலங்கைக்கு வலியுறுத்தியுள்ளது. (நி-4)



வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட ஊறணித் தீர்த்தக்கரையை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்திற்கான அடிக்கல்லை யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கடந்த புதன்கிழமை நாட்டி வைத்தார். நிகழ்வில் வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகள், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்கள், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்-சுபேசன்,மகாலிங்கம்)

# சிறந்த அரசாக சர்வதேச ரீதியில் இலங்கை அங்கீகாரம் பெற்றுள்ளது

(கொழும்பு)

ஜனநாயகம், இறையாண்மை மற்றும் சமூக நோக்குடைய சிறந்த அரசாக சர்வதேச ரீதியில் இலங்கை அங்கீகாரம் பெற்றுள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் மரியா சகரோவால் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"ரஷ்யா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர்ச்சியாக ஆக்கபூர்வமானதாகவே காணப்படுகின்றது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச ரீதியான விவகாரங்களில் இலங்கையுடனான அரசியல் உறவுகளை நாம் உயர் மட்டத்தில் பேணி வருகின்றோம். மேலும் ரஷ்யாவின் தேயிலை இறக்குமதித் துறையில், இலங்கை பாரிய பங் காற்றி வருகின்றது" என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# மேல் மாகாணத்தில் விரைவில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்க திட்டம்

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் முதலாம் தவணை கற்றல் நடவடிக்கைகளை பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கொவிட்-19 வைரஸ் தடுப்பூசியை ஆசிரியர்களுக்கு வழங்க கவனம் செலுத்தப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

மேல்மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 11 ஆம் தர மாணவர்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று முன்தினம் பாடசாலைகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்கு மாணவர்கள் தயாராகும் வகையில் மேல்மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்கள் மிகவும் பொறுப்புடன் சேவையாற்றுகிறார்கள். அதிக நேரம் எடுத்து மாணவர்கள் பரீட்சைக்கு தயார்படுத்தப்படுகிறார்கள்.


மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் முதலாம் தவணை கற்றல் நடவடிக்கை சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் குறித்து பாடசாலை மட்டத்தில் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு பாடசாலை நிர்வாக பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சின் தீர்மானம் வரும் வரை காத்திருக்க வேண்டிய தேவை கிடையாது.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் கல்வித்துறைக்கு ஏற்பட்ட பாரிய சவால்களை சிறந்த முறையில் வெற்றி கொண்டுள்ளோம் என்றார்.

அத்தோடு, கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை திறம்பட கையாளும் நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 10 ஆவது இடம் கிடைக்கப் பெற்றுள்ளது. எம்மை விட செல்வந்த நாடுகள் பாரிய பின்னடைவில் உள்ளன. இவ்விடயம் தொடர்பில் எதிர்த்தரப்பினர் தற்போது கருத்துரைப்பதில்லை. குறுகிய காலத்தில் தற்போதைய நெருக்கடி நிலையை எம்மால் கட்டுப்படுத்த முடியும் என்றார். மேலும், கொவிட்-19 தாக் கத்தினால் கல்வித் துறைக்கு இனி பாதிப்பு ஏற்பட இடமளிக்க முடியாது என மேலும் தெரிவித்தார். (நி-4)

# வடக்கில் தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பம்




வடக்கு மாகாண வைத்தியசாலைகள் ஊடாக மருத்துவ சேவையாளர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கொவிட் -19 தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நேற்று சனிக்கிழமை முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கொவிட் -19 நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் மருத்துவ சேவையாளர்கள் மற்றும் சுகாதாரத் துறையினர்கள் நால்வருக்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆகிய இருவரும் போதனா வைத்தியசாலையில் வைத்து தமக்கான கொவிட் -19 தடுப்பூசி மருந்தை ஏற்றிக்கொண்டனர்.

வடக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கொவிட் -19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மூன்று நாட்களுக்கு முன்னெடுக்கப்படும் இந்தப் பணியில் தவறவிடுவோர் தடுப்பூசி ஏற்றும் பட்டியலில் இருந்து நீக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் 5 ஆயிரத்து 820 மருத்துவ சேவையாளர்கள், சுகாதாரத் துறையினருக்கு கொவிட் -19 தடுப்பூசி மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

படங்கள்:- சிவசாந்தன், ரவிசாந், மகாலிங்கம், சதீஸ், ஜோசப்நயன், வசந்தரூபன், தேவானந்தன், சப்தசாங்கரி, தவசீலன், கிருஸ்ணகுமார்.

## உள்நோக்கத்தோடு தடுப்பூசி வழங்கியிருந்தால்

# அதனை ஏற்றுக்கொள்ள முடியாது

(நெளுக்குளம்)

**இலங்கை துறைமுகத்தை பெற்றுக்கொள்வதற்காகத்தான் இந்தத் தடுப்பூசியை வழங்கியிருந்தால் அதனை நாங்கள் சாதகமாக ஏற்றுக்கொள்ள முடியாது என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விமல் ரட்னாயக்கா தெரிவித்துள்ளார்.**

நேற்று வவுனியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவினால் இலங்கைக்குத் தடுப்பூசி வழங்கியதானது எந்தவித பிரதி உபகாரம் இல்லாமலோ அல்லது எந்தவித உள்நோக்கம் இன்றி வழங்கியிருந்தால் அதனை நாங்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம்.



ஆனால் இலங்கை துறைமுகத்தை பெற்றுக்கொள்வதற்காகத்தான் இந்த தடுப்பூசியை வழங்கியிருந்தால் அதனை நாங்கள் சாதகமாக ஏற்றுக் கொள்ள முடியாது.

அவ்வாறு இருந்தால் இச்செயற்பாட்டை நாங்கள் ஒரு உள்நோக்கம் கொண்டதாகவே பார்க்கிறோம்.

இவ்வாறான செயற்பாடுகளை இந்தியா மேற்கொள்ளக் கூடாது. இதேவேளை இச்செயற்பாட்டிற்கு இலங்கை அரசாங்கமும் உடந்தையாக இருக்கக் கூடாது.

இலங்கையில் எந்தப் பகுதியாக இருந்தாலும் சரி குறிப்பாக அம்பாந்தோட்டையை சீனாவிற்கு வழங்கியமை, அதே போன்று கொழும்பு துறை முகத்தை வழங்குவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகவே நாங்கள் பார்க்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-299)



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாகேந்திரபுரம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் நேற்று முன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் தவநாதன் மற்றும் கண்டாவளை பிரதேச செயலர் பிருந்தகன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(படம்:- தேவானந்தன்)



தொல்புரம் வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் தொல்புரம் பகுதியில் வருமானம் குறைந்த 150 பேருக்கு தலா 1000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் நல்லூர் வேலன் சுவாமிகள் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டன.

## வாகன விபத்துக்களில் 8 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் கடந்த 24 மணி நேரத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

நாட்டில் நேற்று முன்தினம் 5 விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் மூவர் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி கடந்த 24 மணிநேரத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஐவர் மற்றும் பாதசாரிகள் இருவர் உட்பட மேலும் ஒருவர் வாகன விபத்துக்களில் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# ஜெனிவா அமர்வுக்கு முன்னதாக இறுதிப் பேச்சுவார்த்தையில் இலங்கை

(கொழும்பு)

**ஜெனிவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அமர்வுக்கு முன்னதாக மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடன் கடைசி நிமிட பேச்சுவார்த்தையில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இலங்கை தொடர்பாக மனித உரிமைகளுக்கான உயர்தானிகர் மைக்கேல் பச்லெட், வெளியிட்டுள்ள மோசமான அறிக்கை குறித்தும் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் இலங்கையிலுள்ள ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாவது,

"நாங்கள் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்துடன் சில விவாதங்களை நடத்தி வருகிறோம்.

மேலும் அவர் எழுப்பிய விடயங்களில் ஒரு வித உடன்பாட்டை எட்ட முயற்சிக்கிறோம்.

அந்த வகையில் இவ்விடயங்களில் முறையான பதிலை நாங்கள் நிச்சயம் வெளியிடுவோம்" என தெரிவித்துள்ளது. (நி-4)

## பதுளையில் 27 பேர் கைது

(பதுளை)

பதுளை மாநகர பொது சுகாதாரப்பரிசோதகர் குழுவினரால் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு சோதனையில் 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை பிரதான பேருந்து நிலையம், அஞ்சல் அலுவலகம், அரசினர் வைத்தியசாலை போன்ற இடங்களில் பதுளை மாநகர பொது சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே முகக்கவசம் அணியாத 27 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்தகையவர்களுக்கு எதிராக பதுளை நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை பொது சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்டுள்ளனர். (நி-4)

# தடுப்பூசியால் இதுவரை எந்தவித பக்க விளைவுகளும் ஏற்படவில்லை

(கொழும்பு)

இலங்கையில் கொவிட்-19 கட்டுப்படுத்தலுக்கான தடுப்பூசி வழங்கும் செயற்றிட்டத்தை பெப்ரவரி மாதத்தின் இறுதியில் அல்லது மார்ச் மாதத்தின் முதல் வாரத்தில் ஆரம்பிக்க திட்டமிட்டிருந்த போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முயற்சியினால் அதனை ஜனவரிமாதத்திலேயே ஆரம்பிக்க முடிந்துள்ளது என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட கொவிட் தடுப்பூசிகளை வழங்கும் செயற்றிட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அங்கொடை தேசிய தொற்று நோய் வைத்தியசாலையில் (ஐ.டி.எச்.) இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தலைமையில் ஆரம்பமானது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ராஜெனெகா நிறுவனம் என்பன ஒன்றிணைந்து தயாரித்த இந்த தடுப்பூசி தற்போது உலகில் 8 நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. இலங்கையில் பாவிக்கப்படுவது இந்தியாவின் சீரம் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட கொவிட்ஷீல்ட் தடுப்பூசியாகும். இதன் பயன் 62 - 90 சதவீதமாகும் என்று ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளவர்களில் இதுவரையில் யாரும் எவ்வித பக்க விளைவுகளுக்கும் முகங்கொ



டுக்கவில்லை என்பதோடு வைத்தியசாலைகளிலும் அனுமதிக்கப்படவில்லை என்பது விசேட அம்சமாகும். இந்தியாவின் சீரம் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட இந்த தடுப்பூசி பூட்டான், மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம், மியன்மார் மற்றும் ஷீசெல்ஸ் ஆகிய நாடுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது என்றார். (நி-4)

## வங்கியில் கொள்ளையிட்ட நபர் பொலிஸாரால் கைது

(அம்பலாங்கொட)

அம்பலாங்கொட - உஸ் முதுலாவ கிராமிய வங்கியில் கொள்ளையிட்டு தப்பிச் சென்ற விமானப்படை உறுப்பினர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கைக்குண்டு ஒன்றைக் காண்பித்து குறித்த வங்கியின் முகாமையாளரை அச்சுறுத்தி அங்கிருந்த ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையிட்டு சென்றுள்ளார்.

இதனையடுத்து கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டிற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றும் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றும் போலித் துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த நபரை பலப்பிட்டிய நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (நி-4)

# ராஜபக்ஷ அரசு விட்ட தவறே இந்தியா அழுத்தம் பிரயோகிக்க காரணம்

## முஜிபுர் சாடல்



(கொழும்பு)

2010 - 2015 இற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கைக்குள் சீனா ஆதிக்கம் செலுத்துவதற்கான வாய்ப்பினை ராஜபக்ஷக்கள் ஏற்படுத்திக் கொடுத்தமையினாலேயே தற்போது இந்தியாவும் இலங்கை மீது அழுத்தம் பிரயோகிப்பதற்கு ஏதுவான காரணியாக அமைந்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பு கிழக்கு முனைய விவகாரத்திற்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான சாரா என்ற பெண் இந்தியாவில் இருக்கின்றமைக்கும் ஏதேனும் தொடர்புகள் காணப்படுமா? என்ற சந்தேகம் எழுவதாகவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கிழக்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்கவில்லை என்று அரசாங்கம் கூறினாலும் இந்தியாவிலுள்ள அதானி நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் அரசாங்கம் கிழக்கு முனையத்தை தமக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இலங்கையில் சீனா ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான அதிகளவான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது.

இவ்வாறு சீன ஆதிக்கத்திற்கு ராஜபக்ஷக்கள் இடமளித்தமையின் காரணமாக இந்து சமுத்திரத்தில் வலய நாடுகளுடன் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதால் எமக்கும் ஒரு பங்கை வழங்குங்கள் என்று இந்தியா அழுத்தம் பிரயோகிக்கிறது. இந்தியா இலங்கை மீது இவ்வாறு அழுத்தம் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததும் ராஜபக்ஷக்களே.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான சாரா என்ற பெண் இந்தியாவிலிருக்கிறார்.


ஆனால் அரசாங்கம் இதுவரையில் அவரை ஒப்படைக்குமாறு இந்திய அரசாங்கத்திடம் கேட்கவில்லை. கிழக்கு முனைய விவகாரத்தை இதனுடன் தொடர்புபடுத்தி இந்தியாவுடன் ஏதேனும் இரகசிய பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா? என்ற சந்தேகம் எழுகிறது.


அவரை இலங்கையிடம் ஒப்படைக்குமாறு இந்தியாவிடம் கேட்குமாறு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு விடமும் வலியுறுத்தியுள்ளேன் என அவர் தெரிவித்தார். (நி-4)

# நெற் பயிர்களில் ஏற்படும் நெல் எரிபந்த நோய் ஆராய்வதற்கு விசேட குழு

(கண்டாவளை)

**நெற் பயிர்களில் ஏற்படும் நெல் எரிபந்த நோய் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டனர்.**





கிளிநொச்சி மாவட்டத்தில் நெற் பயிர்களில் ஏற்படும் நெல் எரிபந்த நோய் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதற் காக பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜயந்த சேனநாயக்க உள்ளிட்ட குழுவினர் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு கோணாவில் பகுதியில் நெல் எரிபந்த நோயினால் பாதிக்கப்பட்ட வயல்களைப் பார்வையிட்டு பரிசோதனைக்காக நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகிய நெற் கதிர்களின் மாதி ரிகளையும் எடுத்துச் சென்றுள் ளனர்.

கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளரின் முறைப்பாட்டினையடுத்து பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜயந்த சேனநாயக்க மற்றும் அவர் சார்ந்த குழுவினர்கள் கோணாவில் பிரதேசத்திற்குகள விஜயத்தினை மேற்கொண்டு "நெல் எரிபந்த" நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நெல் வயல்களை பார்வையிட்டு நோய் மாதிரிகளையும் தமது ஆராய்ச்சிக்காக எடுத்துச் சென்றுள்ளனர்.

இவர்களுடன் பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், பிரதேச விவசாயப் போதனாசிரியர், பரந்தன் நெல் ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் சிவநேசன் மற்றும் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர். (5-4-316-315)



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 150 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 250 மாணவர்களுக்கான பாடசாலை கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப் பட்டன. கல்லூரியின் 1986 ஆம் ஆண்டு சாதாரண தர பிரிவு மற்றும் 1989 ஆம் ஆண்டு உயர்தர பிரிவுகளில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் குறித்த கற்றல் உபகரணங் கள் வழங்கப்பட்டன.

(படம்-ஜோசப்நயன்)


# யானைத்தந்தங்கள் மற்றும் துப்பாக்கியுடன் இருவர் விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் இரண்டு யானைத் தந்தங்கள் மற்றும் துப்பாக்கியுடன் நேற்று முன்தினம் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

முல்லைத்தீவு முள்ளியவளை, களிக்காடு வனப்பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் காட்டு யானை ஒன்று உயிரிழந்த நிலையில் காணப்பட்டது.

குறித்த யானையினை வன ஜீவராசிகள் திணைக்களத்தின் அதிகாரிகள் பார்வையிட்டபோது குறித்த யானை சுட்டுக் கொல்லப்பட்டமையும்



அதனுடைய இரண்டு தந்தங்களும் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து பல்வேறு தரப்பினரும் குறித்த விடயம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் இராணுவ புலனாய்வு பிரிவினுடைய தகவலுக்கு அமைய முல்லைத்தீவு விசேட குற்றத்தடுப்பு பிரிவினரால் இரண்டு யானைத் தந்தம் மற்றும் சட்டவிரோத துப்பாக்கி ஒன்றுடனும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் கைது செய்யப்பட்டவர்கள் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-4-281)

# பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி மன்னார் விஜயம்

(மன்னார்)

பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான திருப்பீடப் பிரதி நிதி அருட்கலாநிதி பிறையன் உடைக்வே ஆண்டகை மன்னார் மறை மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார்.





நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணியளவில் மன்னார் நகரை வந்தடைந்த பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான திருப்பீடப் பிரதி நிதி அருட்கலாநிதி பிறையன் உடைக்வே ஆண்டகை மன்னார் நகர பகுதியில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச் சொரூபத்தில் ஆசி பெற்றார்.

அதனைத் தொடர்ந்து மன்னாரிற்கு வருகைதந்த பிரதி நிதியை மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் நந்தினி ஸ்ரான்லி டி மேல் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகர முதல்வர் எஸ். ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் ஆகியோர் வரவேற்றனர்.

இதனையடுத்து மன்னார் நகரப் பகுதியில் இருந்து மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் வரை திறந்த வாகனத்தில் பரிசுத்த பாப்பரசரின் இலங்கைக்கான திருப்பீட பிரதி நிதி மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல். பெர்னாண்டோ ஆண்டகை ஆகியோர் அழைத்துச் செல்லப்பட்டனர். இதன்போது பாடசாலை மாணவர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மன்னார் மறை மாவட்ட மக்கள் ஆகியோர் பவனியாக ஆலயத்திற்குச் சென்றனர். மன்னார் செபஸ்தியார் பேரால யத்தில் விசேட திருப்பலி இடம்பெற்றதோடு நற்கருணை ஆசீர் வாதமும் இடம் பெற்றது. (5-4-285)

சிந்திக்காதவன் முட்டாள் ; சிந்திக்கத் துணியா தவன் கோழை ; சிந்திக்க மறுப்பவன் பிடிவாதக் காரன்.
~ டிரம்மண்ட்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெறும் வார்த்தை ஜாலங்களால் திருப்தி அடைந்துவிடாதீர்கள்

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் முதன்மைப்படுத்தப்படுமென்ற ஊகங்கள் பரவலாகப் பேசப்படுகின்றன.

இந்த ஊகங்கள் இம்முறை மட்டுமல்ல கடந்த காலங்களிலும் தெரிவிக்கப்பட்ட போதிலும் நடந்தது என்ன? என்பது நமக்குத் தெரிந்த விடயமே.

ஆக, ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கிறது ஆப்பு என்றெல்லாம் நாம் கற்பனை செய்துவிடக்கூடாது.

பொதுவில் ஆளுந்தரப்புக்கு எதிர்த்தரப்பாக இருப்பவர்கள் அரசாங்கம் மாட்டிக் கொள்ளப் போவதாகப் பிரசாரம் செய்வார்கள். இது அவர்களின் அரசியல் பிழைப்புக்கானது.

தவிர, ஐ.நா மனித உரிமைகள் ஆணையமும் தனது அறிக்கையை கடுமையாகவே வெளியிடும்.

இதற்காக இந்த முறை ஐ.நாவிடம் இருந்து இலங்கை அரசாங்கம் தப்பிவிட முடியாது என்றெல்லாம் நாம் நினைப்போமாக இருந்தால் அது எமக்கே அபத்தமாக அமையும்.

தவிர, இதோ இலங்கை அரசாங்கம் இறுகப் போகிறது. தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப் போகிறது என்பதான ஊடகச் செய்திகள் தமிழ் மக்களை அமைதியடையச் செய்துவிடும்.

இதற்கு மேலாக, அவர்கள் அறிந்த செய்திகளின்படி முடிவுகள் கிடைக்கப் பெறாவிட்டால் வெறுப்பும் விரக்தியும் ஏற்படும் வாய்ப்பு உருவாகும்.

ஆக, ஊகங்களையும் ஊடகங்களின் சொற்பிரயோகங்களையும் மையப்படுத்தி ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் கூட்டத் தொடரில் எமக்கு நீதி கிடைக்கும் என்று நம்பி பேசாதிருப்பதை விடுத்து, எங்களுக்கு நீதி கிடைப்பதற்காக நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்தாக வேண்டும்.

அப்போதுதான் எங்களின் இலக்கு அடையப்படும்.

ஏனெனில் இனம் இனத்தோடு என்பது போல நாடுகளும் நாடுகளோடு சேர்வதையே விரும்புகின்றன.

இந்த வகையில் இலங்கை விடயத்திலும் உலக நாடுகள் இலங்கை அரசாங்கத்தை எச்சரிக்கை செய்வது, நிபந்தனைகளை முன் வைப்பது என்பதோடு தமது கடமையை முடித்துக் கொள்ளும்.

இங்குதான் இலங்கைத் தமிழினம் இன்று வரை அடிமைப்படுத்தப்பட்ட இனமாகத் தன் சொந்த நாட்டில் வாழ்கிறது என்ற உண்மை உரக்கக் சொல்ல வேண்டும்.

ஏலவே விதிக்கப்பட்ட நிபந்தனைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் உடனடித் தீர்வுக்கான ஏற்பாடுகளை உலக நாடுகள் எடுத்தாலன்றி எமக்கு விடிவில்லை என்பதை உரியவாறு எடுத்துக்கூறி இறுதி வரை எங்களின் முயற்சிகள் முன்னெடுக்கப் படுவதுதான் இங்கு மிக முக்கியமானது.

# யாழ்.போதனாவில் மட்டும் 3 ஆயிரம் பேருக்கு தடுப்பூசி

## பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 3 ஆயிரம் பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டவுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சத்திய மூர்த்தி' தெரிவித்தார். நேற்றுக் காலை 9 மணியி லிருந்து வடக்கு மாகாணத்தில் கொரோனா தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தாதியர் பயிற்சிக் கல்லூரியிலும் குறித்த செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார பணியாளர்கள், வடக்கு மாகாண சுகாதர ஜேவைகள் திணைக்கள சுகாதார சேவையாளர்கள் மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் சுகாதார சேவையாளர்கள் உட்பட 3 ஆயிரம் பேருக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் தடுப்பூசி ஏற்றப்பட உள்ளதாக வைத்திய சாலை பணிப்பாளர் தெரிவித்தார்.(நி-33)

# அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாடு பாரிய கடன் நெருக்கடிக்குள் தள்ளப்படும்

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

(கொழும்பு)

செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன்களின் தொகை அதிகரித்துக்கொண்டே செல்வதாகவும், இந்த ஆண்டில் மாத்திரம் அண்ணளவாக 7000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேசக் கடன்களை செலுத்த வேண்டியுள்ளதாக எதிர்க் கட்சி உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் மிக மோசமான கடன் நெருக்கடியில் இலங்கை தள்ளப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வெளிநாடுகளுடன் டொலர்களில் செய்யும் கணக்கு வழக்குக்களை மூன்றுமாத காலத்திற்கு நிறுத்துமாறு சகல வங்கிகளுக்கும் மத்திய வங்கி அறிவித்தல் ஒன்றினை வழங்கியுள்ளது.

ஏனென்றால் வெளிநாடுகளிடம் டொலர்களில் பெற்றுக்கொண்ட கடன்களை செலுத்தவேண்டிய நிலையில் கடந்த ஆண்டில் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்தியாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

எனவே நாட்டிலுள்ள சகல வங்கிகளில் இருந்தும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றுத்தருமாறு மத்தியவங்கி தெரிவித்திருந்தது.

அதனால் 44 மில்லியன் அமெரிக்க டொலர்களையே அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ள முடிந்தது.

எனவே செலுத்த வேண்டிய சர்வதேசக் கடனுக்காக இறக்குமதிக்காக வைத்திருந்த பணத்தில் இந்த கடன்களை செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அரசாங்கம் தள்ளப்பட்டது.

இவ்வாறான பயணத்தை முன்னெடுத்து நாட்டினை முன் னோக்கி கொண்டு செல்ல முடியாது. அரசாங்கத்திற்கு மிக நெருக்கடியான நிலைமையே இன்று காணப்படுகின்றது. ஆனால் அரசாங்கத்தில் உள்ள எவருக்கும் இந்த பிரச்சினைகள் விளங்கவில்லை

எனவே அடுத்த இரண்டு ஆண்டுகளில் மிக மோசமான கடன் நெருக்கடியில் நாம் தள்ளப்படுவோம் எனவும் அவர் தெரிவித்தார். (நி-4)


## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்கல்5மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** இணுவில் கந்தசாமி கோவில், இணுவில் மேற்கு, பாலாவோடை, பத்தனை, தாவடிமானிப்பாய் வீதி, தாவடி இந்துமயானம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** சமணன்குளம் கிராமம், வீரபுரம், சின்னசிப்பிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## அன்பு இருக்குமிடத்தில் உண்ணுங்கள்

❖ கடவுளின் இராச்சியத்தை எதனோடு ஒப்பிடலாம்..? அது கடுகுமணி போன்றது. அது விதைக்கப்படும் போது பூமியிலுள்ள விதைகள் அனைத்திலும் மிக மிகச் சிறியதாயிருக்கிறது. ஆனால், விதைக்கப்படும் பின்போ, அது வளர்ந்தோங்கி சகல பூண்டுகளையும் விடப் பெரியதாகி வானப்பறவைகளை அதன் நிழலின் கீழ் வந்து வசிக்குமளவு பெரும் பெரும் கிளைகளை விடுகிறது.

❖ தீபத்தைக் கொளுத்தி மரக்காலின் கீழ் வைப்பதில்லை. தீபக்காலின் மேல்தான் வைப்பார்கள். அது வீட்டிலுள்ள அனைவருக்கும் வெளிச்சம் தரும். அதுபோல, மனிதர்கள் உங்கள் நற்காரியங்களைக் காணும் பொருட்டு உங்கள் ஒளி அவர்கள் முன் பிரகாசிக்கட்டும். பரமண்டலத்திலுள்ள உங்கள் பிதாவை அவர்கள் போற்றட்டும்.

❖ உங்கள் இருதயங்களிலே கசப்பான பொறாமையும், சச்சரவையும் வைத்திருப்பவர்களானால் நீங்கள் பெருமை கொள்ள வேண்டாம். உண்மைக்கு எதிராகப் புளுகவும் வேண்டாம்.

❖ கொழுத்த எருதுக்கறியைப் பகையோடு உண்பதைவிட அன்பு இருக்குமிடத்தில் வெறும் இலைக்கறியை உண்பது நல்லது.

# தடுப்பூசி தொடர்பில் செல்வந்த நாடுகள் பின்பற்றும் தேசியவாதக் கொள்கை மிகவும் ஆபத்தானது

## உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனீவா)

**கொரோனா வைரஸ் தடுப்பூசி தொடர்பில் செல்வந்த நாடுகள் பின்பற்றும் தேசியவாதக் கொள்கை தொற்று நோய் நீடிப்பதற்கே வழிவகுக்கும் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் எச்சரித்துள்ளார்.**

ஏழை நாடுகளில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் தடுப்பூசிக்காக காத்திருக்கும்போது ஆரோக்கியமான தங்கள் குடிமக்களுக்குக் கூட செல்வந்த நாடுகள் தடுப்பூசி போட முற்படுவது கவலை அளிக்கும் விடயம் என நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை உலக பொருளாதார மன்றத்தின் மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்படும் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளுக்கு ஏற்றுமதிக் கட்டுப்பாட்டை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுத்து வருவது குறித்தே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

பல நாடுகள் தங்கள் சொந்த மக்களுக்கு மட்டுமே தடுப்பூசிகளை வழங்குகின்றன. இது உலகில் பிற இடங்களில் உள்ள மிகவும் பாதிக்கப்படக் கூடிய மக்களை பெரிய ஆபத்தில் தள்ளியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தொற்று நோய் உலகின் ஏற்றத் தாழ்வுகளை அம்பலப்படுத்தியுள்ளது. மற்றும் சுரண்டல்களை வெளிக்காட்டியுள்ளது எனவும் அதானோம் கெப்ரேயஸ் குறிப்பிட்டார்.

தொற்று நோயை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு கருவியாக தடுப்பூசி உள்ளது. தடுப்பூசி விநியோகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் ஆபத்தையே விளைவிக்கும். இது தொற்று நோய் நீடிக்க ஒரு காரணியாக இருக்கும் எனவும் அவர் எச்சரித்தார்.

தடுப்பூசியில் முன்னெடுக்கப்படும் தேசியவாதக் கொள்கை மூலம் சர்வதேச ஒத்துழைப்பு தொடர்பான நம்பிக்கையை நாம் இழக்க நேரிடும். தொற்று நோய் முடிவுக்கு வந்த பின்னர் கூட அதற்கான விலையை நாம் கொடுக்க நேரிடும்.

இந்நிலையில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் வயதானவர்கள் உள்ளிட்ட அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உலகம் முழுவதும் முன்னுரிமைப் அடிப்படையில் தடுப்பூசி போடப்பட வேண்டும். இதற்கான தடுப்பூசிகள் சர்வதேச அளவில் சமமாகப் பகிரப்பட வேண்டும்.


இந்த தொற்றுநோயிலிருந்து வெளியே வர உள்ள ஒரே மூலோபாயம் உலகம் ஒன்றிணைந்து செயற்படுவது தான் எனவும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் அதானோம் வலியுறுத்தினார். (நி-4)

## டில்லியில் இஸ்ரேல் தூதரகம் அருகில் குண்டு வெடிப்பு

(டில்லி)

டில்லியில் உள்ள இஸ்ரேல் தூதரகம் அருகே குறைந்த தீவிரம் கொண்ட குண்டு வெடித்ததில் மூன்று கார்கள் சேதமடைந்துள்ளன.


நகரின் மையப் பகுதியில் உள்ள அவுரங்கசீப் (Aurangzeb) வீதியின் ஓரத்தில் இந்த வெடிப்பு நிகழ்ந்ததாக டில்லி பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தக் குண்டு வெடிப்பு, மாலை ஐந்து மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன் சம்பவ இடத்திற்கு உடனடியாக தீயணைப்புப் படை, ஸ்வாட் மற்றும் தடயவியல் குழுக்கள் விரைந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இதுகுறித்து தீவிர விசாரணை இடம்பெற்று வருவதாகவும் எந்த வகையான பொருள் வெடித்தது என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குண்டு வெடிப்பில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (நி-4)



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் இருக்கும் 126 ஆண்டுகள் பழைமையான சிவன் கோவில் ஒன்று, புதுப்பித்தல் பணிகள் முடிவுற்று பக்தர்கள் வழிபாடு நடத்த திறக்கப் பட்டிருக்கிறது.

## காந்தி நினைவு தினத்தில் உண்ணாவிரதப் போராட்டம்

### விவசாயிகளால் முன்னெடுப்பு



0

விவசாய சட்டங்களை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி காந்தி நினைவு தினமான நேற்று இந்திய விவசாயிகள் ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள சர்ச்சைக்குரிய 3 விவசாய திருத்தச் சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி, டில்லி எல்லைகளில் பஞ்சாப், அரியானா உட்பட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல ஆயிரம் விவசாயிகள் 2 மாதங்களுக்கு மேலாக தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதில் 60 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் குளிர் உட்பட பல்வேறு காரணங்களால் உயிரிழந்துள்ளனர்.


மத்திய அரசுடன் விவசாய சங்க பிரதிநிதிகள் நடத்திய 11 கட்ட பேச்சுவார்த்தைகளும் தோல்வி அடைந்ததால் கடந்த 26 ஆம் திகதி குடியரசு தினத்தன்று, சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்க்க, டில்லியில் விவசாயிகள் பிரமாண்ட டிரக்டர் பேரணியை நடத்தினர்.

இதில் வன்முறை வெடித்ததில் அதில் விவசாயி ஒருவர் உயிரிழந்ததுடன் 300 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்நிலையில், மகாத்மா காந்தியின் 74 ஆவது நினைவு தினமான நேற்று ஒரு நாள் உண்ணாவிரதப் போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபட்டனர். விவசாய சட்டங்கள் திரும்பப் பெறும் வரை தமது போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (நி-4)

## வாய்ப்புக்களை பயன்படுத்தி அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்

### ஐ.நா.பொதுச் செயலர்



(நியூயோர்க்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்டார்.

சீனாவில் தோன்றிய உயிர்க்கொல்லி கொரோனா வைரஸ் ஓராண்டுக்கும் மேலாக உலகை அச்சுறுத்திக் கொண்டு இருக்கிறது. அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி தவித்து வருகின்றன.

வைரஸ் தொற்று வேகமாக பரவி வரும் அதே வேளையில், பல நாடுகளில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணிகளும் மும்முரமாக நடந்து வருகின்றன.

கொரோனா பாதிப்பில் உலக அளவில் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வரும் அமெரிக்காவில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகின்றன.

இந்நிலையில், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரெஸ் கடந்த வியாழக்கிழமை கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்டதை நினைத்து நான் அதிர்ஷ்டமாகவும் மகிழ்ச்சியாகவும் உணர்கிறேன். வாய்ப்புகளைப் பயன்படுத்தி அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டிக்கொள்கிறேன். தடுப்பூசி எல்லா இடங்களிலும் எல்லோருக்கும் கிடைக்கிறதா என்பதை உறுதிப் படுத்த நாங்கள் தீவிரமாக செயற்படுவோம் என பதிவிட்டுள்ளார். (நி-4)

## வடக்கில் நேற்று...

மூர்த்தி கூறியுள்ளார்.

இதன்படி வடக்கில் ஒருவருக்கு மட்டும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும், குறித்த நபர் வவுனியா மாவட்டத்தை சேர்ந்தவர் எனவும் பணிப்பாளர் கூறியுள்ளார். (ம-3,18)

## தடுப்பூசி ஏற்றப்...

ஒவ்வாமை ஏற்படவில்லை என வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி ஏற்றப் பட்ட சிலருக்கு சிறியளவிலான காய்ச்சல் நிலை பதிவாகியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருந்து தெரிவித்த அவர், நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட தடுப்பூசி ஏற்றும் பணிகள் நேற்றைய தினமும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

தடுப்பூசி ஏற்றப்பட்ட சிலருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அது தடுப்பூசி போடப்பட்ட பின்னர் பொதுவாக நடக்கக்கூடிய ஒன்று. தடுப்பூசியால் இது நடக்கவில்லை என்றார்.(ம-3)

## முதலமைச்சர்...

தீர்மானித்துள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உயர்மட்டக்குழு கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவே போட்டியிட வேண்டும் என முன்மொழிந்தபோது எவரும் அந்த தீர்மானத்தை எதிர்க்காததால் அந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ம-3)

## சாவகச்சேரியில்...

காலையாகியும் குறித்த நபர் வீட்டுக்கு வராமையால் அவரது உறவினர்கள் தவறணைக்கு சென்று பார்த்தபோது அவர் சுயநினைவு இழந்து காணப்பட்டதாகவும், உடனடியாக அவரை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வந்தபோதிலும் அவர் ஏற்கெனவே உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் நுணாவில் மேற்கு சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த 39 வயதான நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம-3,30)

## யாழ்.நகர்ப்...

டுள்ள கோவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் போதைப்பொருள் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களைக் கைது செய்வதற்காகவும் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பிரதான நகரங்களில் பொலிஸாரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நகரப் பகுதியிலும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னான்டோ தலைமையில் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றன. (ம-3,33)

## அரசியல் போராட்...

டும் என நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்த வடக்கு, கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் முடிவெடுத்துள்ளன.

மட்டக்களப்பிலிருந்து சீலனும் (சிவயோகநாதம்) கிளிநொச்சியிலிருந்து கலாவும் (கனகரஞ்சினி) இது சம்பந்தமாக எமது ஆதரவைக் கோரியுள்ளனர்.

தமிழர்கள் வெறுமனே பேச்சோடு மட்டும் நின்று விடாமல் அரசியல் போராட்டங்களிலும் ஈடுபட்டு மக்கள் ஆதரவைத் திரட்ட வேண்டியுள்ளது.

போராட்டங்களை யார் பின்னின்று நடத்துகின்றார்கள் என்பதிலும் பார்க்க, யாருக்கு எமது நிலை பற்றித் தெரியப்படுத்தலாம் என்பதையே எமது குறிக்கோளாக வைத்து காய்களை நகர்த்த வேண்டும்.

மக்கள் மனம் வைத்தால் எதனையும் நாம் பெறலாம்.ஆகவே மக்கள் மன எழுச்சியாக நடைபெறவிருக்கும் கவனயீர்ப்புப் போராட்டம் வெற்றிகரமாக இடம்பெற எமது தமிழ் மக்கள் யாவரும் தமது மனமுவந்த ஆதரவை அவர்களுக்கு நல்க வேண்டும் என்று அன்புடன் வேண்டிக் கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 100 அடி...

வலி.வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விகாரை அமைப்பதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்ட நிலையில்,

நிரந்தக் கட்டடம் அமைக்க இடைக்காலத் தடை விதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தையிட்டி பெண்கள் காவலரணுக்கு அருகாமையில் இந்த விகாரை தனியார் காணியில் அமைக்கப்படவுள்ளது.அந்தக் காணி திஸ்ஸ விகாரைக்குரிய காணி என தெரிவிக்கப்பட்டபோதும் அதனுடன் இணைந்து தனியார் காணிகள் விடுவிக்கப்படாமல் பயன்படுத்தப்படுவதாக கூறப்படுகிறது. (ம-3,18,33)

## குருந்தூர்மலை...

ரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, அவரோடு சேர்ந்தவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கொன்றினையும் தொடரவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-3)

## வடக்கில் நேற்று 2997...

டுள்ளது.

மேலும் இதேவேளை 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு மட்டுமே தடுப்பூசி போடப்படும் எனவும் கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் இந்த தடுப்பூசி போட முடியாது.

முதற்கட்ட தடுப்பூசி 60 வயதுக்கு உட்பட்டவர்களுக்கும், இரண்டாம் கட்டம் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் போடப்படவுள்ளது, தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் 3 வாரங்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும், முதற்கட்ட தடுப்பூசிபோட்டபின் 3 வாரத்துக்குப் பின் 2 ஆவது தடுப்பூசி போடப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

## நாடு...

றைய தினம் 32 ஆயிரத்து 539 பேருக்கு கொரோனா தடுப் பூசி போடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இதுவரை 37 ஆயிரத்து 825 பேருக்கு கோவிட் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை 2ஆம் கட்டமாக இந்திய அரசாங்கம் நன்கொடையாக வழங்கவுள்ள கோவிட்-19 தடுப்பூசிகள் பொதுமக்களுக்கு வழங்கப்படும் எனவும், அதற்கிடையில் சீனாவின் மருந்தும் கிடைக்கப் பெறவுள்ளதால் பணிகளை துரிதப் படுத்தியுள்ளதாக, சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் கூறியுள்ளார். (ம-3)

## 8 பேர்...

னாவால் மேலும் 8 பேர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 313 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, மூன்றாவது தொடர்ச்சியான நாளாக நேற்றும் இலங்கையில் கொரோனா தொற்றாளிகளின் எண்ணிக்கை 800ஐ தாண்டியது.

நேற்று மாத்திரம் 848 கொரோனா தொற்றாளிகள் கண்டறியப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து நாட்டின் கொரோனா தொற்றாளிகளின் மொத்த எண்ணிக்கை 63 ஆயிரத்து 293 ஆக உயர்ந்துள்ளது.(ம-3)

## கோட்டா அரசு...

யும் எதிர்ப்பதற்கு ஆளும் பொதுஜன பெரமுன கூட்டணி அரசாங்கத்தை ஆதரிக்கும் பத்து அரசியல் கட்சிகள் ஒருமனதாக முடிவு செய்துள்ளதாக கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுளளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய உரிமையை சமரசம் செய்து அபிவிருத்தி செய்வதற்கும் முதலீடு செய்வதற்கும் அல்லது மாற்றுவதற்கும் எந்தவொரு நடவடிக்கையையும் எதிர்ப்பதற்கு பத்து கட்சிகள் ஒருமனதாக ஒப்புக் கொண்டதாக அமைச்சர் வீரவன்ஸ கூட்டத்திற்கு பின்னர் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.(ம-3)


































## பௌதிகவியல் / PHYSICS

உயர்தர (A/L) மாணவர்களிற்கான பௌதிகவியல்

- சகல அலகுகள்
- கடந்தகால வினாக்கள் (Past papers)

தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். (5449)

**076 157 0107**

## விற்பனைக்கு

NP TF XXXX என்ற தொடர் இலக்கமுடைய TVS மோட்டார் வண்டி விற்பனைக்கு உண்டு. (5480)

**077 818 5017**

## தேவை

கணக்கு, கணனியில் பதிவேற்றம் செய்வதற்கு கணனி அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

யாழ். நகருக்கு அண்மையில் உள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் – C-1308
வலம்புரி,
2 ஆவது ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பிறிண்டேர்ஸ்ற்கு **Graphics Designing** தெரிந்த ஆண், பெண் இருபாலாரும் உடன் தேவை. (5482)

**077 482 1912**

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும் Courier நிறுவனம் ஒன்றிற்கு கிளை முகாமையாளர் / உதவியாளர் தேவை.

E-mail : hr@gtve.com (C-1310)

**076 690 8967**

## மணமகள் தேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமக்களை தெரிவுசெய்ய விரும்பின் தொடர்பு கொள்ளவும். 1981, 1983, 1987, 1990 ஜேர்மன், 1981 கனடா, 1988 லண்டன் மற்றும் ஐரோப்பாவில் உள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. (5478)

**077 023 7639**

WhatsApp : 0094764752219
Viber : 004917643399372

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964 ஆம் ஆண்டு, சிம்மம், உத்தரம் முதலாம் பாதம், கனடா பிரஜா உரிமை உள்ள (இரட்டை பிரஜா உரிமை) விவாகரத்துப் பெற்ற தற்போது யாழில் அரச சேவையில் MBBS Doctor ஆக பணிபுரிபவர்க்கு மணமகள் தேவை. (5464)

**072 619 2526**

## PHYSICS CLASSES

நாளை முதல் ஆரம்பம் 01.02.2021

2020 Repeat - 9.30 a.m - 11.30 a.m
2021 - 5.30 p.m - 7.30 p.m
2022 - 2.30 p.m - 4.30 p.m (5479)

Heat 2021 | Mechanics Repeat | Sound 2022

**076 322 0916**
New Science Universe
No. 52, Stanly Road, Jaffna.

## வேலை வாய்ப்பு

இலங்கையில் 87 வருடங்கள் முதன்மை நிறுவனமாக இயங்கிவரும் ARPICO குழுமத்தின் துணை நிறுவனமான ARPICO INSURANCE PLC நிறுவனத்தின் JAFFNA - NORTH கிளைக்கு பின்வரும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

- குழு முகாமையாளர்
- காப்புறுதி ஆலோசகர்கள்
- சிரேஷ்ட காப்புறுதி ஆலோசகர்கள்

அனுகூலங்கள் : Basic + Allowance, EPF, ETF, Free insurance, Target incentive, Foreign tours.

தகைமைகள் : க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு : தற்போது ஓய்வுபெற்று இன்னொரு தொழிலை எதிர்பார்ப்பவர்களும் விண்ணப்பிக்கலாம். (5467)

S.KOKILAKRISHNAN

**074 012 3495, 076 046 2906**

## வேலை வாய்ப்பு

**Northern Group of Company**

- உங்கள் கிராமங்களிலே தொழில் வாய்ப்பு வழங்கப்படும்.
- தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து நிற்கும் இளைஞர் யுவதிகள்.
- ஓய்வூதியம் பெற்றிருப்பவர்கள் பகுதி நேரம் வேலை செய்ய ஆர்வமுள்ளவர்கள் மற்றும் இல்லத்தரசிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். (C-1315)

உடன் தொடர்பு கொள்ளவும்

**021 790 4574, 077 922 7102**
**077 283 7638**

இல. 648, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## PHYSICS

T.K. KAJAN B.Sc (5459)

**077 653 1177**

## காணி தேவை

கல்லுண்டாய் வீதியில் காக்கை தீவு மீன் சந்தைக்கும் அராலி பாலத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் ஒரு ஏக்கர் அளவுடைய வெற்றுக்காணி உடனடியாகத் தேவை.

( தரகர் தேவையில்லை ) (5406)

**077 129 8250**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால் யாழ். நகரில் IELTS (Academic and General ) A1 UK Exams (வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை ) English Grammar and Spoken English தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும். Guaranteed to 7.5 in IELTS Exams.

**Online Classes** (5405)

Jaffna College Under Graduate Department
( Personal Class available )

Please Contact :

**077 780 3970, 074 007 1970**

## வகுப்புக்கள் நாளை ஆரம்பம்

**K.M.I INSTITUTE** (ஊரெழு அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)

**லோகா கல்வி நிலையம்** (உரும்பிராய்ச் சந்திக்கு அருகாமையில்) (C-1314)

அனைத்து வகுப்பு மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கை நாளை திங்கள் தொடக்கம் ஆரம்பம்.

**077 077 4484**

## IELTS A1

இப்பொழுது மீசாலையில் IELTS A1 ( வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கானது ) அனுபவம்வாய்ந்த (UK Trainee) ஆசிரியரினால் கற்பிக்கப்படுகிறது. (5448)

**Global Knowledge Campus**
A9 Road, Aiya Kadai, Meesalai.
077 972 3202, 077 323 3200

## PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Academic
IELTS General
IELTS Life skills.

#1 rated professional Lecturers
Weekday classess
Weekend Classess
Night Classess
# 100% Student focused.
Registered exam centre (5417)

Especially designed lessons for students who are willing to migrate foreign countries

idp IELTS

Register with us for IELTS Exam@ 29,999/=
074 188 7878-021 223 2250
infopearsoncollege@gmail.com

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, jaffna

## NEW SCIENCE HALL

Kannathiddy Road, Jaffna.

**2021 A/L Day Class**

நேரடி வகுப்பு
Monday to Friday

| | | |
|---|---|---|
| Biology | - | 8.00 - 9.30 a.m |
| Com. Maths | - | 6.45 - 8.00 a.m |
| Chemistry | - | 9.30 - 11.30 a.m |
| Physics | - | 11.30 - 1.30 p.m |

ஆரம்பம் : 01.02.2021

**076 566 3006**

நிகழ்நிலை வகுப்பு
Monday to Friday

| | | |
|---|---|---|
| Biology | - | 8.15 - 9.45 p.m |
| Com. Maths | - | 8.30 - 10.00 p.m |
| Chemistry | - | 5.30 - 7.00 a.m |
| Physics | - | 5.30 - 7.00 p.m |

(C-1307)

( நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. )

**076 569 3006, 077 791 7611**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் வலிகாமம் சைவ வேளாளர் (சைவபோசனம்), 1987 ஆம் ஆண்டு பிறந்த, உத்திராட நட்சத்திரம் 4 ஆம் பாதம், 5 1/2 அடி உயரம், கிரகபாவம் 13 1/2 கொண்ட ஆசிரியர் (M.A சிறப்பு) மணமகனுக்கு சைவபோசனம் அல்லது சைவபோசனமாக இருக்கக்கூடிய அரச உத்தியோகத்தில் இருக்கும் மணமகள் தேவை. (5434)

**077 691 3079, 076 807 3924**

## மணமகள் தேவை

லண்டனில் வசிக்கும் 1985 ஆம் ஆண்டு துலா ராசி சித்திரையில் பிறந்த உயர்குல அழகிய மகனுக்கு லண்டனில் PR உள்ள அன்பான குணம் கொண்ட மணமகள் தேவை. (5420)

**077 138 7590, 077 961 5133**

## வாடகைக்குத் தேவை

திருநெல்வேலி, யாழ். நகர்ப் பகுதிகளில் நல்ல நிலையில் உள்ள கடை வாடகைக்குத் தேவை. (C-1313)

☎- **077 241 4466**

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்

af **பிரெஞ்சு மொழி**



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின் கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம் www.ambafrance-lk.org (5444)

**021 222 8093** புதிய விலாசம் No. 17, Kandy Road, Jaffna.

## அன்னா EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள் (C-1174)

லண்டன் 1000/=
070 3305500
075 3305500

| | | | |
|---|---|---|---|
| 976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு |

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Sri Lanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 294

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 31.01.2021 தொலைபேசி : 021 222 3378



## முதலாவது கொரோனா தடை மருந்து




## ஆர்ப்பரிக்கும் தமிழ் உறவுகள்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஈழத்தின் தலைசிறந்த சிறுகதை எழுத்தாளர் மல்லிகை டொமினிக் ஜீவா அவர்கள் காலமாகிவிட்ட செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம்.

மல்லிகை சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது.

அவர் எழுதிய "நகரத்தின் நிழல்" என்ற சிறுகதை இப்போதும் தரம் 9 மாணவர்களின் பாடப்புத்தகத்தில் உள்ளது.

அவரின் மறைவு எமக்குப் பேரிழப்பாகும். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயனும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

என்ன எப்பவும் முந்தி வாற கங்காணியார் இண்டைக்குப் பிந்திப் போனார். என்ன சங்கதி சாத்திரியார் சதாசிவம் வினவினார்.

**கங்காணி:** அதையேன் கேட்கிறியள். யாழ்ப்பாண மாநகர சபையில சோலை வரி கட்டப் போனனான். அங்க ஒரே சனம். நம்பர் எடுத்துத்தான் சோலைவரி கட்ட வேணும்.

**மூப்பர்:** ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்குள்ள சோலைவரியைச் செலுத்தினால் 10 வீத டிஸ்கவுண்ட் கிடைக்குமல்லோ.

**கங்காணி:** அதாலதான் சனம் முண்டியடிக்குது. ஆனால் இன்றோட ஜனவரி 31 ஆம் திகதியும் முடியப் போகுது. இருந்தும் அங்க ஒவ்வொருநாளும் சனங்கள் தான். நானும் அங்க ஒவ்வொரு நாளும் போய் வாறன். இருந்தும் சனம் குறைந்தபாடா இல்லை. இனி 10 வீதக்கழிவும் கிடைக்கப் போறதில்லை. ஆகையால ஆறுதலாகச் சோலைவரியைச் செலுத்துவம்.

**விதானையார்:** இஞ்சே கங்காணியார் நீங்கள் எல்லாம் இப்படிக் கதைக்கக்கூடாது.


ஜனவரி மாசம் 31 ஆம் திகதி வரையும் இடைவிடாமல் சனங்கள் சோலைவரி செலுத்திக் கொண்டிருக்கினமெண்டால், யாழ்ப்பாண மாநகர சபை நிர்வாகம் தான் பெப்ரவரி மாதம் வரை 10 வீதக் கழிவு வழங்கப்படுமெண்டு அறிவிக்க வேணும். அதுதான் மக்கள் சேவை.

ஜனவரி 31 ஆம் திகதி வரை சோலைவரி செலுத்துறதுக்கு சனங்கள் போகல்ல. அங்க இருக்கிற உத்தியோகத்தர்கள் சனத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவியள் எண்டால் அது வேறகதை.

ஆனால் சோலைவரி கட்ட முடியாமல் சனம் திரும்பிப் போகுது எண்டால் 10 வீதக் கழிவு வழங்குவதை பெப்ரவரி மாதம் முழுமைக்கும் நீடிக்க வேணுமல்லோ.

**வாத்தியார்:** அப்ப எங்கட யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரிட்ட இதை ஒரு கோரிக்கையாக முன்வைப்பம்.

**பண்டிதர்:** சோலை வரிக்கு 10 வீதம் கழிவு வழங்குகிற காலத்தை நீடிக்கும் போது எல்லாரும் சோலை வரியைக் கட்டுவினம்.



அன்று தன் மகவுக்காக அழுத பசுவும்
இன்று தன் பசுவுக்காக அழுத விவசாயியும்

இல்லையெண்டால் பிறகு பார்ப்பம் எண்டு அசமந்தமாக இருந்திடுவினம்.

ஆகையால எங்கட கோரிக்கையை ஏற்றுக் கொள்வது யாழ்ப்பாண மாநகர சபைக்குத்தான் நல்லது.

**மூப்பர்:** இப்படியான விடயங்களை ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களிலும் கதைக்க வேணும்.

**விதானையார்:** மூப்பர் சொல்லுறது சரிதான். பொதுமக்களின்ர பிரச்சினைகளை ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில கதைத்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால் எங்கட மக்கள் எதிர்கொள்கிற பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்து விடும்.

**சிறாப்பர்:** ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் ஒரு நல்ல விடயம் தான். ஆனால் அந்தக்கூட்டம் தொடர் நடவடிக்கை கொண்டதாக இருக்கவேணும்.

**மூப்பர்:** என்ன சிறாப்பர் நீங்கள் சொல்லுறதைப் பார்க்கும் போது ஏதோ சிக்கல் இருக்குது போல.

**சிறாப்பர்:** கடந்த சில தினங்களுக்கு முன்னர் வேலணைப் பிரதேச செயலகத்தில ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடந்தது. அந்தக் கூட்டத்தில கட்டாக்காலி மாடுகளால நெற்பயிர்கள் நாசமாகுது எண்டு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கூறினவியள்.

அதற்குக் கட்டாக்காலி மாடுகளைப் பிடித்தால் அதை வாங்குவதற்கு ஒருவரும் இல்லை. அதால மாடுகளைப் பிடித்துப் பராமரிப்பது கடினமாக உள்ளதெண்டு பதிலளிக்கப்பட்டது. ஆனால் உண்மை அதுவல்ல.

**பண்டிதர்:** என்ன சிறாப்பர் சொல்லுறியள். கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களன்.

**சிறாப்பர்:** கட்டாக்காலி மாடுகளை வாங்கி பண்ணை நடத்துவதற்குத் தீவகத்தைச் சேர்ந்தவர்கள் தயாராக இருக்கினம். ஆனால் அதற்கு வேலணை கால்நடை வைத்தியர் தடையாக இருக்கிறார் என்பதுதான் உண்மை.

அவரைக் கட்டுப்படுத்திறதுக்கு ஒருத்தராலும் முடியல்ல. அதால அந்த உண்மையை மறைத்து பிடிக்கப்படுகிற கட்டாக்காலி மாடுகளை வாங்குவதற்கு ஆட்கள் இல்லை எண்டு சொல்லப்பட்டிருக்குது. இதுதான் உண்மை.

**மூப்பர்:** நானும் அறிந்தனான். தீவகத்தைச் சேர்ந்த ஒருவர் வெளியிடத்தில பண்ணை ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்து தனது பண்ணை தொடர்பில அந்த இடத்து கால்நடை வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்தையும் பெற்று வேலணைக் கால்நடை வைத்தியரிட்ட ஒப்படைத்தவர்.

வேலணை பிரதேச செயலகம் அதற்கு அனுமதி வழங்கிய போதிலும் வேலணைக் கால்நடை வைத்தியர் அந்தக் கோரிக்கையை உதாசீனம் செய்து அதிகார துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

**வாத்தியார்:** அப்ப மூப்பர் இதுபற்றி வடக்கு மாகாணக் கால்நடை சுகாதாரப் பணிப்பாளருக்குச் சொல்லப்பட்டதோ.

**மூப்பர்:** ஐயோ கடவுளே! யாரிட்டச் சொல்லியும் எதுவும் நடக்காது. பசு மாட்டை வாங்கி பண்ணை நடத்துறதுக்கு மறுத்த வேலணை கால்நடை வைத்தியர்; அதேநாள் புங்குடுதீவில உள்ள பசுமாடுகளை இறைச்சிக்குக் கொண்டு போக அனுமதித் திருக்கிறார். இதை என்னால நிரூபிக்க முடியும்.

**சிறாப்பர்:** மூப்பர் அண்ணே! புங்குடுதீவிலுள்ள பசு மாட்டை இறைச்சிக்கு அனுப்பின அன்றைக்கு வேலணை கால்நடை வைத்தியர் லீவாக இருந்தவர். அவருக்குப் பதில் கடமை செய்தவர் ஊர்காவற்றுறை கால்நடை வைத்தியர் என்ற சரியான தகவல்களையும் நாங்கள் இந்த இடத்தில சொல்ல வேணும்.

**பண்டிதர்:** இவ்வளவு தகவல்களையெல்லாம் தெரிந்த நீங்கள் ஏன் உரிய நடவடிக்கை எடுக்கல்ல.

**சிறாப்பர்:** ஏன்? எடுக்கல்ல; தகவல் அறியும் சட்டத்தின் கீழ் புங்குடுதீவில இருந்து வெளியிடத்துக்கு அனுப்பப்பட்ட பசுக்கள் எந்தப் பண்ணையில இருக்குது? அது உறுதி செய்யப்பட்டதா? என்ற விபரங்களைத் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் அறியிற ஏற்பாடுகள் நடக்குது.

இதற்கு மேலாக பசுக்களைக் கொல்லுறதுக்கு எதிரான சட்டத்தின்கீழ், பிரதமர் அலுவலகத்திற்கும் தகவல் கொடுக்கப்பட்டிருக்குது. இனி வழக்குத் தாக்கல் செய்யிறதுதான் பாக்கி.

**மூப்பர்:** இப்படியான கொடுமைகளை விடக்கூடாது. வேலணைப் பிரதேசத்தில கால்நடை வளர்ப்பு எப்படி இருக்குதெண்டு எங்கூட உயர் அதிகாரிகள் ஒருக்கா கவனிக்க வேணும்.

வேலணை பிரதேச செயலகத்தில நடந்த விவசாயக் கூட்டமொன்றில சரவணையைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தன்ர நல்லின பசுமாடு இறந்த கதையைச் சொல்லி அழுதவர்.

பத்து லீற்றர் பால் கறக்கக்கூடிய தன்ர நல்லினப் பசுமாடு நோய்வாய்ப்பட்ட போது, ஒருக்கா வந்து பாருங்க எண்டு வேலணை கால்நடை வைத்தியரைத் தான் கெஞ்சிக் கேட்டதாகவும் ஆனால் அவர் வராத நிலையில அந்தப் பசு இறந்து போனதாகவும் கண்ணீர் விட்டு அழுது முறையீடு செய்தார்.

எங்க இப்படி நடக்கல்ல எண்டு வேலணை பிரதேச செயலக அதிகாரிகள் உட்பட அந்தக் கூட்டத்தில கலந்து கொண்ட ஆரேனும் சொல்லட்டும் பார்க்கலாம்.

**வாத்தியார்:** என்ன செய்யிறது. பசுமாடு இறந்தது பற்றி அந்த விவசாயி அழுதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எண்டால், எப்படி இந்த மண்ணில நீதி நிலைக்கும். தர்மம் வாழும்.

இப்படி வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# இடமாற்றம் படும் பாடு



ஒரு கருத்து ஏற்படுகின்ற போதே அதற்கான எதிர்க் கருத்தும் ஏற்பட்டு விடும்.

கருத்தும் எதிர்க்கருத்தும் சேர்ந்து பயனுறுதிமிக்க கருத்தைப் பிரசவிக்கும் என்பது கேகல் என்ற கிரேக்க நாட்டு அறிஞரின் முடிவு.

இதில் தர்க்கரீதியான உண்மைகளும் இருக்கவே செய்கின்றன.

எனினும் நம் நாட்டைப் பொறுத்தவரை அதிலும் குறிப்பாக, எங்கள் தமிழர் தாயகத்தைப் பொறுத்தவரை முன்வைக்கப்படும் கருத்துக்கான எதிர்க்கருத்து புதிய கருத்தின் உருவாக்கத்தை அடியோடு தகர்த்தி விடுவதுடன் முதலில் எழுந்த கருத்தையும் கருக்கி விடுகிறது.

இதனால் எதனையும் செய்ய முடியாத ஸ்தம்பித நிலைமை எங்கும் எதிலும் ஏற்பட்டு விடுகிறது என்பதுதான் உண்மை.

இதற்கு அரச பணியில் நடைபெறும் இடமாற்றங்கள் நல்லதோர் உதாரணமாகும்.

ஆம், மாவட்ட செயலகங்கள் முதல் பாடசாலைகள் வரையில் இடமாற்றங்கள் என்பது உயர்மட்ட அதிகாரிகளுக்கு உச்சமான தலையிடியையும் பணிசார் வெறுப்பையும் ஏற்படுத்தி வருகின்றது.

எந்தவகையிலும் இடமாற்றம் வழங்கமுடியாது என்ற மிக மோசமான நிலைமை வந்துவிட்ட பின்பு யாரும் எதுவும் செய்ய முடியாது.

அப்படியானால், இடமாற்றத்தை விரும்பாத அல்லது ஏற்றுக்கொள்ளாத நிலைமை ஏற்படுவதற்கான காரணம் என்ன? என்று ஆய்வு செய்வது இங்கு அவசியப்படும்.

இந்த அடிப்படையில் இடமாற்றத்தை மனதார ஏற்றுக் கொள்ளாமல் அதனைப் புறக்கணிப்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருக்கின்ற போதிலும் இடமாற்றக் கொள்கையில்- அதனை அமுல்படுத்துவதில் நியாயத்துவம் இல்லாதபோது, பக்கச்சார்புகளும் செல்வாக்குகளும் மேலோங்கி நிற்கும்போது இடமாற்றம் என்பது சர்ச்சையை ஏற்படுத்தவே செய்கிறது.

இதுதவிர, சமகால சூழ் நிலையில் மனிதவுரிமைச் சட்டங்களும் சமூக வலைத்தளங்களின் வகிபாகமும் சேர்ந்து இடமாற்றம் பெற்றவர் தனது தரப்பு நியாயத்தை வெளிப்படுத்தவும் தனக்கு இழைக்கப்பட்டது அநீதி என்பதை மக்கள் மத்தியில் எடுத்துக்கூறவும் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருப்பதால், இடமாற்றம் என்பது படாதபாடு படுவதைக் காண முடிகிறது.

இதுதவிர, இப்போது இடமாற்ற விடயத்தில் ஒரு புதிய கலாசாரமும் ஏற்பட்டுள்ளது.

அதாவது ஒருவர் இடமாற்றம் பெற்றுச்செல்லும்போது அந்த இடமாற்றத்தைப் பொது மக்கள், பொது அமைப்புக்கள், குறித்த நிறுவனம் சார்ந்த அமைப்புக்கள் கண்டிப்பதும் ஆர்ப்பாட்டம் செய்வதும் உரிய உயர் அதிகாரிகளைச் சந்தித்து இடமாற்றத்தை இரத்துச் செய்யும்படி கேட்பதும் சம்பிரதாயமாகிவிட்டது.

இவ்வாறானதொரு சம்பிரதாயம் அரங்கேறாமல் போனால் இடமாற்றம் பெற்றவருக்கு அந்த இடத்தில் மரியாதை இல்லை என்பதான கருத்தும் உருவாகிவிட்டது.

ஆக, அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என யார் இடமாற்றப்பட்டாலும் அவர்களுக்கான இடமாற்றத்தைக் கண்டிப்பதும் ஆர்ப்பாட்டம் செய்வதும் தவிர்க்கமுடியாத சம்பவங்களாகி விட்டன. இஃது எதிர்காலத்தில் நடைபெறப் போகும் இடமாற்றங்களை மேலும் சிக்கல் படுத்தும் என்பதுதான் உண்மை.

இவ்வாறாக வருடந்தோறும் இடம்பெறக்கூடிய இடமாற்றம் என்பது சிக்கலுக்குரியதாக, எதிர்ப்புக்குரியதாக ஆகும் போது; கஷ்டப் பிரதேசங்களிலும் தூர இடங்களிலும் பணியாற்றுபவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெறுவதென்பது சாத்தியப்படாமலே போகும்.

இத்தகைய நிலைமைகள் புதிய நியமனங்களின்போது சேவை நிலையங்களை வழங்குவதிலும் பெரும் இடர்பாடுகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தும் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

இவை ஒருபுறமிருக்க, இடமாற்றங்களுக்கான எதிர்ப்பு என்பது எங்கே? எப்போது? கிளர்ந்தெழுகிறது எனில், அதிரடியான இடமாற்றங்களின் போதும் சமாந்தரப் பதவிகளில்- சமநேரத்தில் நியமிக்கப்பட்டவர்களில் ஒருசிலரை இடமாற்றம் செய்யும்போது அங்கு நியாயத்துவம் மீறப்படுவதான கருத்துக்கள் எழுகை பெறுகின்றன.

ஆம், இருக்குமிடத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகள், செல்வாக்குச் செலுத்துவதன் காரணமாகவும் இத்தகையவர்கள் தமக்கு மேற்பட்ட உயர் அதிகாரிகளுக்குப் பிழையான தகவல்களைப் பரிமாற்றம் செய்வதாலும் இடமாற்றம் என்பது வஞ்சிக்கப்படுகின்ற ஒரு செயலாகப் பார்க்கப்படுகிறது. இத்தகைய நிலைமைகளும் இடமாற்றத்தைப் படுத்தாப்பாடு படுத்தவே செய்கிறது.

உண்மையில் இடமாற்றம் என்பது யாருக்கு வழங்கப்படுகிறதோ அந்தநபர் தனக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் நியாயமானது என்பதை ஏற்றுக்கொண்டு அதன்வழி செயற்படுவதற்கான சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதாவது இடமாற்றம் என்பது தீர்மானிக்கப்பட்ட நிபந்தனைகளின்கீழ், பரிந்துரைக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில், நடுவு நிலையுடன் பக்கச்சார்பின்றி வழங்கப்படும்போதுதான் இடமாற்றம் என்பது சிக்கல் தராத விடயமாக அமையும்.

அண்மையில் வேலணைப் பிரதேச செயலருக்கும் வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலருக்கும் அதிரடியாக இடமாற்றம் வழங்கப்பட்டது.

அவரின் இடத்திற்கு இவரும் இவரின் இடத்திற்கு அவருமாக இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தாலும் இரண்டு பிரதேச செயலர்களின் இடமாற்றங்களுக்கும் அந்தந்தப் பிரதேச பொது அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளன.

இங்குதான் இடமாற்றம் என்பது நம்மண்ணில் மிகப் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

**விதுரன்**



# சிறுவர் அரங்கம்

## நரியும் திராட்சையும்



ஒரு காட்டில் நரி ஒன்று மிகவும் தாகத்துடன் நடந்து வந்து கொண்டிருந்தது.

அப்போது ஒரு கொடியில் திராட்சைப் பழங்கள் கொத்துக் கொத்தாய் பழுத்திருந்ததை அது பார்த்தது.

நம் தாகத்திற்கு ஏற்றது இந்தத் திராட்சைப் பழங்கள் என எண்ணியது.

ஆனால் பழங்கள் சற்று உயரத்தில் நரிக்கு எட்டாத இடத்தில் இருந்தது.

நரி சில அடிகள் பின்னுக்குச் சென்று வேகமாக ஓடி வந்து குதித்து பழங்களைப் பறிக்க எண்ணியது. ஆனால் வெற்றி கிடைக்கவில்லை. அது போல சிலமுறை செய்தும் அதனால் பழங்களைப் பறிக்க முடியவில்லை.

தன்னால் எட்ட முடியாத தனக்குக் கிடைக்காத அந்த திராட்சைப் பழங்கள் புளிக்கும் என தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தது.

நமக்குக் கிடைக்காத பொருள் ஒன்றின் மீது தவறு கண்டு பிடிக்கும் குணம் கூடாது.

மேலும் நரி தன் மூளையை உபயோகித்து வேறு வழிகளிலும் முயன்றிருந்தால் பழம் அதற்குக் கிடைத்திருக்கும்.

**நீதி: கிடைக்காவிட்டால் குறைகூறுவது சிலருக்கு வழக்கம்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## காதலும் கனவும்

102



இன்னும் வெல்லப் படாத தேசம். கனவை நெருங்கிக் கொண்டிருக்கிறோம் என்கிற மகிழ்ச்சியில் அலெக்சாண்டரின் மனம் துள்ளிக் குதித்தது.

எத்தனை உற்சாகம்! எத்தனை குதூகலம். ஆனால் வீரர்களுக்கு அப்படி எதுவுமே இல்லை.

பொழுது விடிந்தால் போர். பொழுது சாய்ந்தால் பயணம். இப்படியே போய்க் கொண்டிருந்ததால் மனரீதியாக மிகவும் சோர்வடைந்திருந்தார்கள் வீரர்கள்.

அதைக்காட்டிலும் அதிகமாக இருந்தது உடல்சோர்வு. அதை அலெக்சாண்டரால் நன்றாகவே புரிந்து கொள்ள முடிந்தது. அவர்களை எப்படி உற்சாகப்படுத்துவது?

அற்புதமான யோசனை ஒன்று பிடிபட்டது அலெக்சாண்டருக்கு. உடனடியாக என்னுடைய சொத்துக்களை எல்லாம் எடுத்து வந்து ஒரே இடத்தில் குவியுங்கள்.

ஏன்?, எதற்காக? என்று கேள்வி கேட்டுப் பழக்கமில்லை மாசிடோனிய வீரர்களுக்கு.

குறிப்பாக அலெக்சாண்டர் விடயத்தில். எல்லாவற்றையும் குவித்தார்கள். அடுத்ததாக எல்லா வீரர்களுடைய உடைமைகள், சொத்துக்களையும் எடுத்து வந்து குவிக்கச் சொன்னார். அதுவும் நடந்தது.

எல்லாவற்றையும் தீயிற்கு இரையாக்குங்கள். இந்த முறை வீரர்கள் அதிர்ச்சியடைந்தனர். எதற்காக இப்படிச் செய்யச் சொல்கிறார்? ஒன்றுமே புரியவில்லை. ஆனாலும் உத்தரவிட்டது மன்னர்.

அடுத்த நொடி அனைத்துப் பொருட்களுக்கும் நெருப்பு வைக்கப்பட்டது.

சிலர் அதில் ஓர் அர்த்தம் இருக்கும் என்று தங்களுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டார்கள். மேலும் சிலரோ அர்த்தமற்ற செயல் என்று உள்ளுக்குள் புலம்பினார்கள். (தொடரும்)



தமிழினம் புறக்கணிக்கப்பட்ட இனமாக இருக்கிறதே?






நாகேஸ், வடிவேலு நகைச்சுவையில் உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்ன?

**ந.பாலசுந்தரம் — அம்பன்**

**நாகேஸ், வடிவேலு நகைச்சுவையில் உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்ன?**

நாகேஸ் கலை உலகின் மகுடம். அவரைப் போல் ஒரு கலைஞன் இனி மீண்டும் பிறக்கப் போவது இல்லை என்பதே உண்மையானது. அவரின் உடல்மொழி மிகவும் தத்ரூபமானது.

நாகேஸின் நகைச்சுவை பாத்திரங்களின் தாக்கமே வடிவேலு. வடிவேலு தனக்கென ஒரு தனிப் பாணியைப் பின்பற்றி உச்சத்திற்குச் சென்றவர்.

நாகேஸ், வடிவேல் என்ற இரு கலைஞர்களையும் தராசில் வைத்தால் சமமாக தராசு நிற்கும்.

அந்த உச்ச கலைஞர்களின் திறமையினை இருவேறாகப் பிரித்துப் பார்ப்பதை விட்டுவிடுவோம்.

**சுதன் — குப்பிழான்**

**ஐ.நா. கூட்டத் தொடரின் மூலம் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்குமா?**

இம்முறை பிள்ளையார் சுழி தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் விடிவெள்ளியாகக் காட்டியிருக்கிறது என்றே கூறவேண்டும்.

கடந்த நல்லாட்சி அரசு ஐ.நா.தீர்மானத்திற்கு அனுசரணை வழங்கியதே தவிர தமிழருக்கு அதனால் எந்த அனுசரணையும் கிடைக்கவில்லை.

இப்போதைய அரசாங்கம் ஐ.நாவை அடக்க நினைக்கிறது. இலங்கை அரசின் இந்தப் போக்கு, சர்வதேசத்தை அடக்கும் தோரணை. அவ்வளவு நல்லதல்ல.

எது எப்படியோ தமிழர்களுக்கான நீதி கிடைத்தால் அதுபோதும் அவ்வளவே.

**மலர் — உரும்பிராய்**

**காலநிலையா, கொரோனா நிலையா வெற்றி பெறும்?**

கொரோனா கோரத் தாண்டவம் ஆடினாலும் அதை இல்லாதொழிக்கும் காலம் இப்போது வந்துவிட்டது என்பதே உண்மையானது.

ஆனால் காலநிலை மாற்றம் என்பது மனிதனின் மனச்சாட்சியற்ற செயலினால் மாறுவது. அதன் தாக்கமும் அழிவும் மிகப் பாரியதாக இருக்கும். அதுவே உண்மையானது.

இது பலருக்குப் புரியவில்லை. அது தான் வருத்தத்திற்குரியது.

**தர்சன் — தொல்புரம்**

**சைவச் சாப்பாடு சாப்பிடுபவர்களை கொரோனா தாக்காதாமே உண்மையா மாமா?**

அடடா இது என்னடா புதுப் புரளியாக இருக்கு. மாஸ்க் போட்டுக் கொண்டு மூன்று மீற்றர் இடைவெளிவிட்டு நிற்கவே கொரோனா பரவுது. இதென்ன சைவச் சாப்பாடு சாப்பிடுகிறவர்களுக்கு கொரோனா வராது என்கிறார்கள்.

கொரோனாவுக்கு சைவம், அசைவம் என்ற வேறுபாடெல்லாம் தெரியாது தம்பி. அடிக்கடி கையைக் கழுவுறதும் மாஸ்க்கை போட்டிருக்கிறதும் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கிறதும் தான் கொரோனாவைக் கட்டுப்படுத்தும்.

இதெல்லாம் வதந்தி நம்பாதேங்கோ.

**அபிஷேக் — திக்கம்**

**வீண்பேச்சு பேசுவது சரியானதா வியாசரே?**

இப்போது பலரிடம் அதுதான் இருக்கிறது

குறிப்பாக அலுவலகத்திற்கு வந்தால் தாம் வந்த வேலை எதுவோ அதை முடித்துக் கொண்டு செல்வதென்பது மிகவும் குறைவானதே.

குறித்த அலுவலகத்தில் இருப்பவர்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும். ஆனால் வந்தவர்களோ அவர்களின் வேலையைப் பாழாக்கும் விதத்தில் வீண் கதை பேசிக் கொண்டிருப்பார்கள்.

ஏதும் கலந்துரையாடலிலும் இதே நிலை தான். ஒலிவாங்கி கையில் கிடைத்தால் போதும். என்ன பேசுகிறோம் எனத் தெரியாமல் பேசிக் கொண்டே இருப்பது.

சபை அறிந்து நடப்பது தானே நயத்தக்க நாகரிகம்.

**சிவா — புலோலி**

**உள்ளக விசாரணையில் நம்பிக்கை உண்டா வியாசர் வக்கீலே?**

பாடசாலையில் மாணவன் ஒருவன் பிழை செய்துவிட்டான். அதை விசாரித்து நீதி வழங்க வேண்டியவர் அந்தப் பாடசாலையின் அதிபர்.

அதை விடுத்து தவறு செய்த மாணவனின் தாய் தந்தை வந்து அதிபர் அவர்களே எங்கள் பிள்ளை என்ன பிழை செய்தான் என நாங்கள் விசாரணை செய்கிறோம்.

விசாரணை செய்து ஒருவேளை அவன் தவறு செய்திருந்தால் நாங்கள் அவனுக்குத் தண்டனை வழங்குகின்றோம் என்கிறார்கள்.

இப்போது சொல்லுங்கள். அதிபர் செய்யும் விசாரணையா, பெற்றோர் செய்யும் விசாரணையா உண்மையானதாகவும் நேர்மையானதாகவும் இருக்கும்?

**நரேன் — இணுவில்**

**கொரோனா தடுப்பூசி வந்துவிட்டதே இனிப் பயப்படத் தேவையில்லைத் தானே?**

அடப்பாவிகளா! அது எப்படி இருக்கப் போகிறது என்பது தெரியாமல் ஆட்டம் போட ஆரம்பித்து விடாதீர்கள்.

தடுப்பூசி முதல்கட்டமாக சுகாதார, பாதுகாப்புத்துறையினருக்கே வழங்கப்படவுள்ளது.

அதன் பின் அடுத்த கட்டங்களில் தான் ஏனையோருக்குப் பயன்படுத்தப்படும். இது புரியாமல் தடுப்பூசி வந்து விட்டது என கொரோனாவுக்குப் பயப்படாமல் இருந்தால் கொரோனா உங்களுக்கு பாடை கட்டிவிடும் கவனம்.

**சிவம் — வதிரி**

**தமிழினம் புறக்கணிக்கப்பட்ட இனமாக இருக்கிறதே?**

வரலாறுகள் திரிக்கப்பட வேண்டும் என நினைப்பதனால் புறக்கணிக்கப்பட்ட இனமாகவே இருக்கிறது.

இதைப் புரிந்து கொள்ளாத நாம் மேலைத்தேய கலாசாரத்துள் மூழ்கித் திளைக்கின்றோம்.


இதை சரியாகப் பாவிப்பவர்கள் பிடிக்க வேண்டிய எல்லாவற்றையும் பிடித்து அடிக்க வேண்டிய கட்டைகளை அடித்து அளக்க வேண்டியவற்றை அளந்து அதில் முடிக்க வேண்டியவற்றை முடித்து இவை எல்லாவற்றிலும் புனைய வேண்டியவற்றை சிறப்பாகப் புனைந்து சரி செய்து விடுகிறார்கள்.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

# பண்டிதனும் பாமரனும்



பண்டிதன் ஒருவன் பாமரன் படகில்
பயணஞ் செய்தாரே
பாமரன் கதையில் இலக்கணப்
பிழைகள் இருப்பதைக் கண்டாரே

"இலக்கணம் தெரியாத வாழ்க்கையில்
நீயோ இழந்ததைச் சொல்கின்றேன்
வாழ்க்கைப் பயணத்தில் பாதியை இழந்தாய்"
என்றார் பண்டிதரே

பாதித்தூரம் பயணம் செய்கையில்
படகோ சேதமுற
"பண்டிதர் ஐயா நீந்திடத் தெரியுமா"
என்றான் பாமரனும்

நீந்திடத் தெரியாத பண்டிதரைப் பார்த்து
பாமரன் சொல்கிறான்
"வாழ்க்கைப் பயணத்தில் முழுதும் இழந்தீர்"
என்றான் பாமரனே

அறிவு மட்டுமே வாழ்க்கைப் பயணத்தை
முழுமையாக்காது
அறிவும் அனுபவமுமே வாழ்க்கைப் பயணத்தை
முழுமையாக்கிடுமே

எஸ். சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு

# தவிக்கவிடமாட்டோம்

சாந்தா. குகதாசன்

வீட்டின் தலைவன் அப்பா
விசித்திரமானவர் அப்பா
ஆயிரம் சுமைகள் இருந்தாலும்
அமைதி காத்திடுவார் அப்பா

காரிருளில் வேலையால் வரும்பொழுதும்
கொத்துரொட்டியுடன் வருவார்
தூங்கிக் கொண்டிருக்கும் எம்மை
தூக்கி எழுப்பி ஊட்டிவிடுவார்

பாசமென்ற வலையில்
பின்னிப் பிணைந்திடுவார்
குடும்பத்தினர் முன்னே
கண்டிப்பாய் இருந்திடுவார்

என்ன இடர் வந்தாலும்- எம்
உயர்வுக்கு உறுதுணையாக நின்றிடுவார்
தள்ளாத வயதில் நாம் அவரை
தவிக்கவிடமாட்டோம்



# உறவு தூரம்



தொலைந்த நேரம் தூரமாச்சே வாழ்க்கை .
கொஞ்சமதே அலைந்த மனதில்
அசைந்த பொழுது அருகில் இல்லையல்லோ
நிலைத்த உணர்வின் உயிரே இடமோ
நிலைதான் யாரறிவார் மலைத்தும் மரத்தும்
போன பின்னே மர்மம் யாரறிவார்
கலைத்த கதிராய் எதிர் பனித்துளியால்
வாழ்க்கை போகிறதே நிலத்தில் உயிரும்
நிலவாய்க் கனவும் நிழலாய் ஆகிறதே
பறக்கும் உயிரும் பார்க்கும் விழியும்
பாதம் சுருகிறதே இனி நிலைக்கும்
காலம் நீயா நானா வாழ்க்கையாகியதே
அறைக்குள் உறவும் அலைக்குள் நீரும்
சொந்தம் தூரமல்லோ வந்தோம் வாழ்ந்தோம்
சொந்தம் இல்லை பூமி சொல்கிறதே

யாழ்வாகீஷ்

# மௌனத்தின் தேடல் -513



## தாழ் திறவாய்

அடிமை செய்ய விரும்பும் ஆயுதங்களை
அநியாய அரசியலில் அகப்பட்ட சமாதானம்
உடைத்தெழும் என்பது உண்மை என்றால்
அது நம் மண்ணில் மெய்ப்பட வேண்டும்

தேன்நிலா, நல்லூர்

## அதிகாரம் ஒழிக்க

வேற்று நலம் இல்லா
வேடர் இங்கே
வெம்பி தவிக்கும்
பறவையின் முடிவை
அளப்பது போல்
இனவாதம் அளக்கும்
அதிகாரத்தை ஒழிக்க
ஒன்றுபடுவோம்

விடிலக்ஸன்
யா/தும்பளை சி.ம.வி.

## மானிடம் தழைத்தது

ஓய்ந்தன வேட்டுக்கள்
பாய்ந்தன அவநம்பிக்கை
ஓங்கியது சமரசம்
பறந்தன வெண்புறாக்கள்
மலர்ந்தது நட்புறவு
மானிடம் தழைத்தது

எஸ். சிவானந்தராஜா
செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.

## உருக்குலைவேன் மனு

ஒருலகக் கூட்டாட்சி ஒன்றே காணின் இவ்
உலகு போரினிலே உருக்குலைவேன் மனு
உயிர் பறிப்பேன் இனும் நிலப்பறிப்பேன் புது
நீதிநிலை குலைந்த நீச நிலை மாறாதோ
நிம்மதிதான் வாராவோ

கந்தன்மைந்தன்
காவலூர்.

## சாட்சியான புறா

துப்பாக்கி இல்லாத
துவேசம் காட்டாத
பொய்கள் கலக்காத
மதங்களைக் காக்கின்ற
மனிதாபிமான உருவாக
உண்மையின் வடிவாக
சுதந்திரக் காற்றாக
சமாதானப் புறா பறக்கட்டும்

வி.ரேவதி
நெல்லியடி

# மௌனத்தின் தேடல் -514



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## தன்னம்பிக்கையின் தேடல்

முடியாது என்று தளர்ந்து நம்பிக்கை இழந்து
முடங்கிக் கிடக்கும் மனங்கள்– எழுந்து
நிற்பதற்கு தேடத்தான் வேண்டும்
தன்னம்பிக்கை எனும் ஊன்றுகோலை

க.யதுசியா, குப்பிழாள்

## உரிமையின் விடிவுக்காய்

வான வீதியினிலே மேகக்கூட்டங்களிடையே அழகாய்
ஆனந்த ஜாலங்கள் புரிந்திடும் வெண்புறாவே
எதிரியின் துப்பாக்கி முனைதனில் எதிர்ப்பட்டதனால்
உரிமையின் எழுச்சிக்காய் உணர்ச்சியுடனே
துவண்டிடாது துளிர்கின்ற உன் வீரமதனை
கண்ணுற்று என் உள்ளம் பாங்கொலித்து
உரிமையின் எழுச்சிக்காய் பண்பாடுகின்றதே.

ஆ.பாலமதுஜா
யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை

# தீர்க்கப்படுமா தமிழர் பிரச்சினை ?

## ஐ.நாவை நம்பும் தமிழினம்

எதிர்வரும் மார்ச் மாதம் கூடவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத்தொடர் இலங்கை அரசிற்கு தலையிடியை ஏற்படுத்தியுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

இலங்கையில் இறுதிப் போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் என அமெரிக்காவினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அனைத்து உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு இலங்கை அரசிற்கு காலஅவகாசம் வழங்கப் பட்டது.

ஆனால் இலங்கை அரசோ



போர்க்குற்றம் என்ற ஒன்றே நடைபெறவில்லை எனவும் போர் வெற்றி நாயகர்களான படையினரை காட்டிக் கொடுக்கப் போவதில்லை என மிகவும் உறுதியாக இருந்தது.

இதன் விளைவு மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் அமெரிக்காவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவாடலில் பாரிய விரிசலை ஏற்படுத்தி இருந்தது.

அமெரிக்காவின் பரம எதிரி நாடாக நோக்கப்படும் சீனாவுடன் இலங்கை அரசு ஒட்டி இருந்ததும் அமெரிக்காவின் இவ்வாறான கொடுக்குப்பிடிக்குக் காரணமாக அமைந்தது எனலாம்.

சீனத் தூதுவர்கள் இலங்கை வந்து சென்ற அடுத்த நொடியே அமெரிக்க தூதுவர்கள் இலங்கை வருவதும் சீன- அமெரிக்க தூதுவர்கள் டுவிட்டர் பதிவுகளில் விமர்சனங்களை முன்வைப்பதுமாக கடந்த கால செயற்பாடுகள் அமைந்திருந்தன.

அத்துடன் இலங்கை அரசு சீனாவுடன் ஒட்டி இருப்பதை இந்திய அரசும் விரும்பவில்லை.

பூகோள ரீதியாக இலங்கை இந்திய அமைவிடம் ஒன்றிக் காணப்படுவதனால் மிக நீண்ட காலமாக இந்தியா-இலங்கையிடையே அந்நியோன்னிய உறவு நிலை இருந்திருந்தாலும்கூட இலங்கை சீனாவுடன் ஒட்டி உறவாடுவதை இந்தியா விரும்பவில்லை.

சீனாவின் அகலக் கால் இந்தியாவை சுற்றிவளைப்பதை இந்தியா மிகத் தெளிவாக அறிந்திருக்கிறது. சீனாவின் இலங்கையுடனான உறவு அது இந்தியாவின் பாதுகாப்பிற்கு பாரிய தலையிடியை ஏற்படுத்தும் என்பது இந்தியாவின் தீர்க்கமான நிலைப்பாடு.

இருப்பினும் 2009 இல் இறுதி யுத்தத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதற்கு இந்தியா பாரிய பங்காற்றியது என்பதை இலங்கை ஆட்சியாளர்களே பல தடவைகள் கூறியிருந்ததை இந்த இடத்தில் நினைவு படுத்த வேண்டும்.

பயங்கரவாதம் தோற்கடிக்கப்படுகிறது எனும் போர்வையில் பாரிய இன அழிப்பே நடைபெறுகிறது. உடன் சர்வதேசம் தலையிட்டு போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என மனித உரிமைகள் சர்வதேசத்திடம் கேட்டாலும் சர்வதேசத்தின் பதில் மௌனமாகவே இருந்தது.

நாளுக்கு நாள் போரின் கொடூரத்தில் சிக்கி பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உணவு, மருத்துவ வசதிகள் எவையும் இல்லாது சிறுவர், முதியவர்கள், பெண்கள் எனப் பலர் பாதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கைகள் எழுந்தபோதிலும் அவை வெறும் கோரிக்கைகளாகவே முடிந்து போயின.

யுத்தம் முடிவுற்றது, பயங்கரவாதம் கூண்டோடு அழிக்கப் பட்டுவிட்டது என இலங்கை அரசு அறிவித்தது.

இறுதி யுத்தத்தில் 50 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என ஐ.நா.அறிக்கையிட்டது.

ஆனால் இலங்கை ஆட்சியாளர்கள் அதனை அடியோடு மறுத்தனர். இறுதி யுத்தத்தில் ஐயாயிரம் தொடக்கம் ஆறாயிரம் பொதுமக்களே கொல்லப்பட்டனர் என அறிக்கையிட்டனர்.

இறுதிப் போரில் பல போர் மீறல்கள் நடைபெற்றன. அதற்கான சர்வதேச விசாரணை தேவை என்ற கோரிக்கை எழ அதை சரியாகப் பற்றிய அமெரிக்கா இலங்கையை அதனூடே அடக்க முடிவெடுத்தது.

ஐ.நாவின் காயங்களுக்கு மருந்திடும் தீர்மானம் தீர்ந்து போக இலங்கையில் நல்லாட்சி எனும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

அதுவரை நொந்து வெந்து வெதும்பியிருந்த தமிழ் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். தமிழனத்திற்குத் தீர்வு கிடைக்கும் என நம்பினர்.

அந்த நம்பிக்கைக்கு ஐ.நாவின் தீர்மானத்திற்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியதே காரணமாக அமைந்தது.

நல்லாட்சியின் ஐ.நா.தீர்மானத்திற்கான அனுசரணை என்பது வெறும் அனுசரணையாகவே இருந்ததே தவிர அதனால் தமிழ் மக்களுக்கான தீர்வு எவையும் வந்து சேரவில்லை. மாறாக அவை வெறும் காலக்கடத்தியாகவே அமைந்தன.

அத்துடன் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளுக்குப் பதில் உள்ளக விசாரணை எனும் புதிய அணுகுமுறையினை சமர்ப்பித்த போதிலும் அது சுயாதீனமாக இருக்காது எனும் குரல்கள் பலமாக எழுந்து கொண்டே இருந்தன.

நல்லாட்சி அரசின் வீழ்ச்சி, மீண்டும் ராஜபக்ஷக்களின் கைகளில் ஆட்சி வந்தது.

அதன்பின் தமிழ் மக்களுக்கெதிரான செயற்பாடுகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன என்றே கூறவேண்டும்.

ஆட்சியில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் தமிழர்களுக்கெதிரான இனவாதப் பேச்சுக்கள், ஐ.நாவின் பலம் தெரியாது ஐ.நாவை விமர்சிப்பது, இறுமாப்புப் பேச்சு என செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

ஆனால் அவர்களின் வாயை அடக்க ஆட்சியாளர்கள் முற்படவில்லை.

அத்துடன் தமிழர் தாயக நிலங்களைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளும் தமிழர் பூர்வீகங்களை அழித்தொழிக்கும் செயற்பாடுகளும் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றன.

இவ்வாறான நிலையிலேயே ஐ.நாவின் கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாக உள்ள நிலையில் இலங்கை விடயத்தை சர்வதேசம் கையில் எடுத்துள்ளது.

இந்தப் பொறிக்குள் இருந்து தப்பிக் கொள்ள இலங்கை அரசு பல பிரயத்தனங்களைச் செய்து கொண்டுதான் இருக்கிறது.

ஆனாலும் மனித உரிமைகள் பேரவை இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டும்.

இந்த விடயத்தை சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து கையில் எடுத்துச் செயற்பட வேண்டும் என அறிக்கையிட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் பாதிக்கப்பட்ட தமிழினத்திற்கு தீர்வு தேவை. அந்தத்தீர்வு உண்மை, நேர்மை, நடுநிலை எனும் தராசுகளினூடே வேண்டும்.

இதுவே தமிழினத்தின் எதிர்பார்ப்பும்.

**அபிமன்யு**

# மர்மங்கள் பொதிந்த "வொய்னிச்" புத்தகம்

'The Gadfly' நாவலை எழுதியவரான, 'ஏதெல் வொய்னிச்' (Ethel Voynich) எனும் எழுத்தாளர், 27 ஜுலை, 1960 அன்று தனது 96 ஆவது வயதில் இறந்துபோனார். முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே கணவரை இழந்த இவருக்கு, பிள்ளைகளோ உறவினர்களோ யாருமில்லை. அவருடன் கூடவே இருந்து பார்த்துக் கொண்டவர் 'அன்னா நீல்ஸ்' என்பவர். நல்ல வசதியான சீமாட்டியாகவே, 'ஏதெல்' இருந்தார். தான் இறந்த பிறகு, தனது வங்கியின் லொக்கரில் இருப்பதை, முறைப்படி எடுக்கும்படி நீல்ஸிடம் சொல்லியிருந்தார் ஏதெல். அவர் இறந்ததும் பலரின் முன்னே, லொக் கர் திறக்கப்பட்டது. அங்கே காசோ, நகைகளோ எதுவுமிருக்கவில்லை. இருந்தது ஒரு கடிதம் மட்டும்தான்.




கணவர் இறந்த பிறகு, ஏதோவொரு முடிவுடன் ஏதெல் எழுதிவைத்து, முப்பது ஆண்டுகளாக லொக்கரில் பாதுகாக்கப்பட்ட கடிதம். பலரின் முன்னால் அந்தக் கடிதம் படிக்கப்பட்டது. அதிலிருந்த வாக்கியங்கள் இவைதான்: "நான் இறந்த பின்னர், அதைத் திறந்து பார்க்கலாம். ஆனால், நீல்ஸோ அல்லது அவரைப் போன்ற பொறுப்புள்ள ஒருவரோதான் அதைத் திறக்க வேண்டும்."

'தான் இறந்த பின் திறந்து பார்க்கலாம்' என்று ஏதெலால் சுட்டிக்காட்டப்பட்டது, பொக்கிஷ அறையோ, பூட்டி வைத்திருக்கும் அலுமாரியோ அல்ல. அவர் குறிப்பிட்டது ஒரு புத்தகத்தை. புத்தகம் ஒன்றைத் திறந்து பார்ப்பதற்கா வங்கி லொக்கரில் கடிதம் வைப்பார்கள்... அதுவும், இத்தனை ஆண்டுகளாக... அதற்காக மட்டும் தான் லொக்கரைப் பயன்படுத்தினாரா... அப்படியென்றால், அந்தப் புத்தகத்தில் நிச்சயம் விலைமதிக்க முடியாத ஏதோவொரு சிறப்பு இருக்க வேண்டுமல்லவா... அப்படி என்ன சிறப்பு வாய்ந்தது அந்தப் புத்தகம்? இந்தக் கேள்விக்கான பதிலில்தான் இம்முறை நம் மர்மத் தேடல் ஆரம்பமாகிறது. இன்றுவரை உலகம் முழுவதும் என்னவென்று தெரியாமல் திகைத்து நிற்கும் மாபெரும் மர்மத்தை உள்ளடக்கியது அந்த பதில். வழக்கம்போல, அங்கு என்னதான் ஒளிந்திருக்கிறது என்பதைப் பார்த்து வரலாம், வாருங்கள்!


நீங்கள் எத்தனையோ மர்மங்களையும் புதிர்களையும் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், ஒரு புத்தகமே புதிராகவும் மர்மமாகவும் இருப்பதை என்றாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆனால், நிஜத்தில் அப்படியொரு புத்தகம் இருக்கத்தான் செய்கிறது. பல நூற்றாண்டுகளாகத் தன்னுள் மாபெரும் மர்மத்தை உள்ளடக்கியபடி, இன்றுவரை தன்னை வெளிக்காட்டாமல் இருந்து வருகிறது. அந்தப் புத்தகம் பற்றியே இன்று நாம் பார்க்கப் போகிறோம். புத்தகம் என்றாசொன் னேன்? புத்தகம் போல, அச்சு அசலாக, மிக நேர்த்தியான வடிவத்தில் உருவாக்கப்பட்ட, கையெழுத்துப் பிரதி அது. அதன் பெயர், 'வொய்னிச் மேனுஸ் கிரிப்ட்'

இந்தப்புத்தகம் 600 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது. அந்தப் புத்தகத்தை யார் எழுதினார்கள்... எது பற்றி எழுதப்பட்டிருக்கிறது... அப்படி என்ன மர்மம் அதில் இருக்கிறது... எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கிறது? இத்தனை கேள்விகளை அந்தப் புத்தகம் நோக்கி வைத்தாலும், வரும் பதில் என்னவோ 'தெரியாது' எனும் ஒற்றைச் சொல்தான். 'ஒரு புத்தகத்தைப் படித்தால் அது யாரால் எழுதப்பட்டது, எப்போது எழுதப்பட்டது என்று தெரியாமல் இருக்கலாம். ஆனால், அதில் என்ன எழுதியிருக்கிறது, எது பற்றி எழுதப்பட்டிருக்கிறது, எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்றுகூடவா தெரியாமல் போகும்?' என்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். நீங்கள் மட்டுமல்ல எவரும் அப்படித்தான்நினைப்பார்கள். ஆனால், தெரியாது என்று சொன்னது சரியானதே! அந்தப் புத்தகம் பற்றி யாருக்குமே எதுவுமே தெரியவில்லை. என்ன புரியவில்லையா? விளக்கமாகச் சொல்கிறேன்.

முதல் பார்வையில், அந்த அளவு முக்கியத்துவம் கொடுக்க முடியாத புத்தகமாகத் தெரியும், மிகப் பழைமையான புத்தகம்தான் 'வொய்னிச் பிரதி.' ஒரு புத்தகம் எப்படி எழுதப்பட வேண்டுமோ அப்படி, அழகிய எழுத்துகளுடனும், அருமையான படங்களுடனும், பல வர்ணங்களுடனும் காணப்படுகிறது 'வொய்னிச் கையெழுத்துப் பிரதி.' நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய நான்கு வர்ணங்களையும் கொண்டு அழகாக வரையப்பட்ட சித்திரங்கள், அந்தப் புத்தகமெங்கும் நிறைந்திருக்கின்றன. ஆங்கிலத்தில் ஒரு வசனம் ஆரம்பிக் கும்போது, கப்பிட்டல் எழுத்துடன் ஆரம்பிக்குமல்லவா... அதுபோல, ஒவ்வொரு வரியும் கப்பிட்டல் எழுத்துகளுடன் ஆரம்பிக்கிறது. அச்சடித்தது போன்ற கையெழுத்தில், இடமிருந்து வலமாக எழுதப்பட்டிருக்கிறது. எல்லாம் சரிதான். ஆனால், அதில் எழுதப்பட்டிருக்கும் எதையும், யாராலும் படிக்க முடியவில்லை. காரணம், அது எந்த மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்பதே தெரியவில்லை.

இத்தனை ஆயிரம் ஆண்டுகால மனித வரலாற்றில், அப்படியானதொரு எழுத்தை யாரும் எழுதியிருக்கவில்லை. அவை எந்த மொழியினூடாக எழுதப்பட்டிருக்கின்றன என்றும் தெரியவில்லை. உலகிலுள்ள மிகத்திறமை வாய்ந்த மொழியியலாளர்கள், குறியீட்டுக் கண்டுபிடிப்பாளர்கள் அனைவரும் முயன்றும், அது என்ன மொழியென்றோ, அதில் என்ன எழுதியிருக்கிறதென்றோ கண்டுபிடிக்க முடியவில்லை. உலகப் போர்களிலும், வேறு சமயங்களிலும், எதிரிகள் பயன்படுத்தும் குறியீட்டு மொழிகளை விடுவிக்கும் ஆராய்ச்சியாளர்கள் பலர் முயன்றும் முடியவில்லை.

பல ஆயிரம் ஆண்டுகள் பழைமையான எகிப்தின் பிரமிடுகளிலுள்ள சித்திர எழுத்துகளையும், மாயன், சுமேரியத் தொன்மை நாகரிகங்களின் சித்திர எழுத்துகளையும், ஆசியாவின் தொன்மையான எழுத்து வடிவங்களையும் கண்டுபிடித்த மொழியியல் வல்லு நர்களால், இதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதிகம் ஏன், செயற்கை புத்திஜீவியான, **'Artificial Intelligence'** மூலமாகவும் முயற்சி செய்தாயிற்று. முடியவேயில்லை. 2019இல்கூட, இரண்டு அக்கடமிகள் 'நாங்கள் இதைக் கண்டுபிடிக்கிறோம்' என்று முயன்று, தத்துபித்தென்று கண்டு பிடித்துவிட்டோம் என்று அறிக்கையும் கொடுத்தார்கள்.



ஆனால், எல்லாமே ஏமாற்று. எவராலும் இந்த நிமிடம்வரை முடியவில்லை. உலகத்தில் எத்தனையோ மொழிகள் இருக்கின்றன, இருந்திருக்கின்றன. அவற்றில் எந்த மொழியின் எழுத்து களின் சாயலாவது இருக்குமாவென்று பார்த்தார்கள். கொஞ்சம்கூட ஒத்துப் போகவில்லை. ஆனால், அந்த எழுத்துகள் அனைத்தும், பழக்கப்பட்ட எழுத் துகள் போலவே தோன்றுகின்றன. புத்தகத்தில், மொத்தமாக 240 பக்கங்கள் கிடைத்திருக்கின்றன. கிட்டத்தட்ட 30 பக்கங்களை யாரோ நீக்கியிருக்கிறார்கள். 18 அத்தியாயங்களாக அவை பிரிக்கப்பட்டிருக்கின்றன.

58 அட்சரங்களைக்கொண்டு 1,70,000 எழுத்துகள் எழுதப்பட்டிருக்கின்றன. யார் எழுதினார்கள்... ஏன் எழுதினார்கள்? எதுவுமே புரியவில்லை. இப்படியான புத்தகத்தையே, வில்ஃபிரிட் வொய்னிச்சும், ஏதெல் வொய் னிச்சும் பாதுகாத்து, மறைத்துவைத்தி ருந்தார்கள். அதைத்திறந்து பார்ப்பதற்கான அனுமதிக் கடிதமே அந்த லொக்கரில்இருந்தது.

1912 ஆம்ஆண்டு, அமெரிக்கா வைச் சேர்ந்த, 'வில்ஃபிரிட் வொய்னிச்' **(Wilfrid Voynich)** எனும் தொல்பொருள்களை வாங்கி விற்பவர், ரோம் நகரில் இந்த வொய்னிச் பிரதியைக் கண்டெடுத்தார். அவர் மூலம் இந்தப் புத்தகம் உலகெங்கும் அறிமுகமானதால், அதற்கு, 'வொய்னிச் மேனுஸ்கிரிப்ட்' என்று பெயர் கிடைத்தது. பலவித ஆராய்ச்சிகளின் பின்னர் 'கி.பி 1404ஆம் ஆண்டிலிருந்து கி.பி1432ஆம் ஆண்டுக்குள் இந்தப்பிரதிஎழுதப்பட்டிருக்க வேண்டும்' எனக் கணித்திருக்கிறார்கள்.

மாட்டுக் கன்றின் தோல்களால் இதன் பக்கங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டு, பெரிய பக்கமாக விரியக்கூடியவாறும் சில பக்கங்கள் ஒன்று சேர்த்து மடிக்கப்பட்டிருக்கின்றன. அதிகம் பழக்கமில்லாத அபூர்வமான பூக்களும், இலைகளும், நிர்வாணமான பெண்கள் வரிசையாகப் பச்சைத் திரவத்தில் மூழ்கி இருப்பதுமான படங்கள் காணப்படுகின்றன. ஒரு பக்கத்தில், டிராகன் ஒன்று மரத்தின் இலையைப் புசிப்பது போலவும் இருக்கிறது.

கட்டடங்களும் மதிற்சுவர்களும் வரையப்பட்டிருக்கின்றன. வானத்திலுள்ள நட்சத்திரங்கள், நட்சத்திரக் கூட்டங்கள் போன்றவையும் வரையப்பட்டிருக்கின்றன. கணித வடிவங்களும் காணப்படுகின்றன. அத்துடன், பக்கம் பக்கமாக எழுதப்பட்டிருக்கும் எழுத்துகளும் இருக்கின்றன. மொத்தத்தில், இது என்ன வகையான புத்தகம்என்றே கண்டுபிடிக்க முடியாமல் குழம் பிப்போகிறோம். ஒன்றேயொன்று மட்டும் காணக்கூடியதாக இருக்கிறது. அதுகூட ஒரு சந்தேகம்தான்... அதில் காணப்படும் கட்டடங்களின் அமைப்பு, சரியாக அதே காலகட்டத்து ஐரோப்பியக் கட்டடக்கலை வடிவத்துடன்ஒத்துப்போகிறது. அதனால், கணித்த காலம் சரியாக இருக்கிறது என்பது முடிவாகிறது. ஆனால், ஏனைய அனைத்தும் தலைசுற்றும் கதைதான்.

இப்படியொரு பிரதியை உருவாக்க வேண்டுமென்றால், ஆயுட்காலம் முழுவதையும் ஒருவர் செலவழித்தே ஆக வேண்டும். எந்த அர்த்தமும் இல்லா மல் யாராவது இப்படியொரு பிரதியை உருவாக்க மாட்டார்கள். அதனால், இந்தப் புத்தகம் எதையோ நமக்குச் சொல்ல வருகிறது. அது என்னவென்றுதான் தெரியவில்லை! தன்னுள் இத்தனை மர்மங்களையும் உள்ளடக்கியபடி, யேல் பல்கலைக்கழகத்தில் நிம்மதியாக அமர்ந்திருக்கிறது, 'வொய்னிச் கையெழுத்துப் பிரதி.'

# ஒப்பனை முகங்கள்!



விமானத்தில் பயணித்துக் கொண்டிருந்தனர் அந்தத் தம்பதி. சிரித்த முகத்துடனும் கனிவுடனும் உபசரிக்கும் விமான பணிப்பெண்களைக் கண்ட கணவன், "இந்தப் பெண்களைப் பார்... எவ்வளவு அன்போடு உபசரிக்கிறார்கள்?! நீயும் இப்படி இருந்தா எவ்ளோ நல்லா இருக்கும்!" என்றான் மனைவியிடம்.

உடனே மனைவி சொன்னாள் 'அவங்க சிரிக்கிறதுக்கும் அன்பா உபசரிக்கிறதுக்கும் ஐம்பதாயிரம் ரூபா சம்பளம் கொடுக்கிறாங்க. நீங்களும் இதே போல பணம் குடுத்தா, நானும் அன்பா கனிவா உங்களை கவனிச்சுக்கறேன்!"

அவ்வளவுதான்... கப்சிப்பாகி விட்டார் கணவர். பயணம் முடியும் வரை அவர் வாயே திறக்கவில்லை!

இன்றைய உலகில், நாம் பார்க்கிற முகங்கள் பலவும் ஒப்பனை முகங்களே. 'அப்பா' எனும் முக மூடி அணிந்துதான் பிள்ளைகளிடம் பழகுகிறோம். 'அண்ணன்' எனும் முகமூடியுடன்தான், தம்பிகளைத் தட்டிக் கொடுக்கவோ தட்டிக் கேட்கவோ முடிகிறது.

மனைவியிடம் பேசும்போது, 'கணவன்' எனும் முகமூடி தேவை. 'தொழிலாளி' எனும் முகமூடியை அணிந்துகொண்டு, முதலாளிகளிடம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. வேலை முடிந்ததும் வேறு முகமூடியை சட்டென மாற்றிக் கொள்ளத் தெரியாத மனிதர்களே வேதனையை அனுபவிக்கின்றனர்.

ஆக... வாழ்க்கை எனும் நாடக மேடைக்கு முகமூடி அவசியத் தேவையாகிவிட்டது. அந்தந்த நேரத்துக்கு தக்கபடி, உரிய முக்கியத்துவத்தை அளிக்க வேண்டிய கட்டாயம் மனிதர்களுக்கு இருக்கத்தானே செய்கிறது! எனவே, இவற்றுக்குத் தக்கபடி வாழ நாம் பழகிக் கொள்ள வேண்டும்.

அதேநேரம்... முகமூடி அணிந்திருக்கிறோம் என்கிற கவனமும் வேண்டும். இல்லையெனில், முகமூடியே முகமாகிப் போகும். இந்த நிலை ஆபத்தானது!

இவையெல்லாம் ஞானிகளின் எச்சரிக்கை!

நம் உண்மையான முகம் என்பது, கண்ணாடி போல! உள்ளதை உள்ளபடி பிரதிபலிப்பதுதானே கண்ணாடியின் இயல்பு. வாழ்க்கையில் முகமூடிகள் தேவைப்படலாம்.

ஆனால், இன்றைய மனிதர்கள், கண்ணாடியை அழகுபடுத்துவதாக எண்ணிக் கொண்டு, அதன் மீது ஓவியங்களைத் தீட்டுகின்றனர்.

அசையாத ஓவியங்கள் கலைய வேண்டும்; அசையும் ஓவியங்களான மனித முகங்கள் தெரிய வேண்டும்! இதுதான் உண்மையான ஆன்மிக வளர்ச்சி!

ஒருவர், காலையில் எழுந்ததும் கத்தினார் 'கருங்குரங்கு படத்தை யாரடி என் றூம்ல மாட்டினது?' சமையற்கட்டில் இருந்த மனைவி பதில் சொன்னாள் 'நல்லா பாருங்க... அது முகம் பாக்கற கண்ணாடி!'

# உயிர் நண்பன் சுப்பு



-இந்திரபுத்திரன்-

தற்போதைய காலத்தில் நட்பு என்பது வெறும் முகப்புத்தக நட்பாகி விட்டது. நட்பு என்பதற்கு வரைவிலக்கணம் சொல்ல வேண்டும் என்றால் இதிகாச புராணங்களையே கூறிக்கொள்ள முடியும்.

தற்போதைய நட்புகள் சந்தியில் நின்று பம்பல் அடிப்பதுடன் முடிந்து விடுகிறது. ஆனால் நட்பின் தன்மை மிகவும் வேறுபட்டதாகவும் உயிரையே கொடுக்கக் கூடியதாகவும் ஆரம்ப காலங்களில் இருந்தது என்பதே உண்மையானது.

நட்பின் நினைவுகளை அசைபோட்டுப் பார்ப்பது மனதிற்கு மிகவும் உற்சாகத்தைக் கொடுக்கக் கூடியது.

இதுவும் கூட நட்பின் சுவாரஸ்யமான விடயம் ஒன்றே.1960களில் நடந்த விடயம்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயங்கிய காலம் மிகவும் பொற்காலம் என்றே சொல்ல வேண்டும். அநேகமான வீடுகளில் ஒருவராவது அரச வேலை என்ற நிலை, பஞ்சம் என்ற சொல்லுக்கே இடமில்லை.

பகல்-இரவு என இரண்டு பகுதி வேலை நடைபெறும். சீமெந்துப் பக்றரியில பாரிய விசில் ஒன்று மணித்தியாலத்திற்கு ஒருமுறை அடிக்கும்.

அது கிட்டத்தட்ட 5 கிலோ மீற்றர் சுற்றளவிற்குக் கேட்கும். அதனால் அந்தக் காலத்தில் யாரும் மணிக்கூடு பார்க்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை.

அன்றைய இரவு நேர வேலை முடித்த கந்தையாவும் சுப்பிரமணியமும் சூல் பந்தத்துடன் வீடு நோக்கி நடக்கத் தொடங்கினர். வரும் வழியில் இரண்டு சாராயக் கடையில் நேரத்தைச் செலவழித்ததால் நிறைவெறி.

பன்னிரண்டு மணியாகி விட்டது. வரும் வழியில் கள்ளுத் தவறணை ஒன்றிருக்க அதன் கதவைத் தட்டிப் பார்த்தனர். யாரும் திறக்கவில்லை. அடுத்தது என்ன...உடையடா தவறணையை என சுப்புரு சொல்ல ஒரு உதை விட்டார் கந்தையா. திறந்தது கதவு. உள்ளே சென்றவர்கள் இருந்த கள்ளைத் தாராளமாக குடிக்கத் தொடங்கினர்.

நித்திரையில் இருந்த காவலாளி முழிச்சு டோச்சை அடிக்க அது கந்தையாவின் முகத்தில் பட இருவரும் ஓட்டம் எடுத்தனர்.

அடுத்த நாள் அதிகாரிகள் கந்தையா வீட்டு வாசலில் நிற்க தலையைச் சொறிஞ்சு.கொண்டு வந்தார் கந்தையா.

ஏன் கோப்பரேசனை உடைச்சனீங்கள். உம்மோட வந்த மற்ற ஆள் யார் என்று கேட்டதும் இரவு அடித்த மப்பு குறையாத கந்தையா சொன்னார்... "ஆரைக் காட்டிக் கொடுத்தாலும் என்ர உயிர் நண்பன் சுப்பிரமணியத்தைக் காட்டிக் கொடுக்க மாட்டன்" என.

பிறகென்ன கந்தையா அண்ணனையும் இழுத்துக் கொண்டு சுப்பிரமணியத்தின் வீடு நோக்கி புறப்பட்டனர் அதிகாரிகள்.



# சசிகலா விடுதலை
# ஜெ. நினைவிடத் திறப்பு
# டி.டி.வி.தினகரன் சூளுரைப்பு

அண்மைய நாட்களாக அ.தி.மு.கவும் அ.ம.மு.கவும் இணையப் போகிறது என செய்திகள் கசிந்து கொண்டிருந்த நிலையில், தினகரனின் இந்தக் கருத்து தமிழக அரசியல் களத்தில் பல்வேறு விவாதங்களை உருவாக்கியிருக்கிறது.

ஒருபுறம் சொத்துக்குவிப்பு வழக்கில் கடந்த நான்காண்டுகளாக சிறைத் தண்டனை அனுபவித்துவந்த சசிகலா, முறைப்படி விடுதலை செய்யப்பட்டார். கொரோனாத் தொற்றின் காரணமாக அவர் பெங்களூர் விக்டோரியா மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார். மறுபுறம் தமிழகத்தில், மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடத் திறப்புவிழா சென்னை மெரினா கடற்கரையில் பிரமாண்டமாக நடைபெற்றது.



தமிழக அமைச்சர்கள், பல்வேறு மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர். இரண்டு நிகழ்வுகளும் திட்டமிட்டு ஒரே நாளில் நடத்தப்படுகின்றனவா? இல்லை இது எதேச்சையான ஒன்றா? என அரசியல் அரங்கில் பல விவாதங்கள் நடந்துகொண்டிருந்த நிலையில், பல புதிய அரசியல் அணுகுண்டுகளையும் வீசிச் சென்றிருக்கிறார் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர், டி.டி.வி. தினகரன்.

சசிகலாவின் உடல்நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதற்காக, பெங்களூர் விக்டோரியா மருத்துவமனைக்கு வந்தார் தினகரன். அப்போது செய்தியாளர்களைச் சந்தித்த அவரிடம், ஜெ. நினைவிடத் திறப்பு குறித்துக் கேட்க,

"சின்னம்மாவின் விடுதலையை சென்னையிலும் கொண்டாடுகிறார்கள் என்றுதான் நான் பார்க்கிறேன்" என்றார். தொடர்ந்து அவரிடம், அ.தி.மு.க., அ.ம.மு.க இணைப்பு குறித்து பத்திரிகையாளர்கள் கேட்க, "அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதே அ.தி.மு.கவை மீட்டெடுத்து அம்மாவின் உண்மையான ஆட்சியைக் கொடுக்கத்தான். அதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன" என்றார்.

அண்மைய நாட்களாக அ.தி.மு.கவும் அ.ம.மு.கவும் இணையப் போகின்றன எனச் செய்திகள் கசிந்துகொண்டிருந்த நிலையில், தினகரனின் இந்தக் கருத்து அரசியல் களத்தில் பல்வேறு விவாதங்களை உருவாக்கியிருக்கிறது.

இது குறித்து அ.ம.மு.கவின் செய்தித் தொடர்பாளர், வீர.வெற்றி பாண்டியன் கூறும்போது,

"சின்னம்மா விடுதலையாகி விரைவில் தமிழகம் வந்துவிடுவார். மக்களின் கவனமும், ஊடகங்களின் கவனமும் அவரின் மீது விழுந்துவிடும் என்பதால், இராஜதந்திரமாகச் செயற்படுவதாக நினைத்துக்கொண்டு அம்மாவின் நினைவிடத் திறப்புவிழாவை அதே தினத்தில் வைத்தார்கள். ஆனால், கொரோனாப் பாதிப்பின் காரணமாக, சின்னம்மா தமிழகம் வருவது தள்ளிப்போயிருக்கிறது. அதேவேளையில், அவரின் விடுதலைச் செய்தி எங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. இதே நாளில், அம்மாவின் நினைவிடமும் திறக்கப்படுவதை எங்கள் தலைவர் நேர்மறையான ஒரு விடயமாகத்தான் பார்க்கிறார். அதைத்தான் அவர், 'சின்னம்மாவின் விடுதலையைச் சென்னையிலும் கொண்டாடுகிறார்கள்' என்று சொன்னார்.

காரணம், சின்னம்மா, அம்மாவுடன் பல்லாண்டு காலம் கூடவே பயணித்தவர். பல நெருக்கடியான காலகட்டத்தில் உறுதுணையாக நின்றவர். கூடவே, அம்மாவின் இறப்புக்குப் பிறகு, உடலை தகனம் செய்ய இடம் இல்லை. மத்திய அரசிடம் அனுமதி வாங்க வேண்டும், சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் அனுமதி வாங்க வேண்டும் எனப் பல குழப்பமான சூழல் நிலவியது. அந்த நேரத்தில், தலைவரின் நினைவிடம் இருக்கும் இடத்திலேயே இடம் இருக்கிறது; அது தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என சின்னம்மாதான் ஆலோசனை கொடுத்தார்.

அதை அப்போதைய தலைமைச் செயலாளர் ராம்மோகன் ராவ் பாராட்டினார். எடப்பாடி பழனிச்சாமியும் சின்னம்மாவின் புத்திக்கூர்மை குறித்து மேடைகளில் பேசியிருக்கிறார். நினைவிடம் அமைப்பதற்கான இடத் தேர்விலும் சின்னம்மாவின் பங்கு இருக்கிறது. இந்த நிலையில், அம்மாவின் நினைவிடத் திறப்புவிழா நடக்கும்போது, சின்னம்மா சிறையில் கைதியாக இருந்திருந்தால், அவருக்கு அதுவே பெரிய மன உளைச்சலைக் கொடுத்திருக்கும். ஆனால், தற்போது அவர் வெளியில் வந்துவிட்டார். அந்த வகையில், எங்கள் சின்னம்மாவின் விடுதலைச் செய்தியும் நினைவிடத்திறப்பும் ஒரே நாளில் நடந்திருப்பது எங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சிதான். அதேவேளையில், அகில இந்திய அளவில் பல தலைவர்களை அழைத்து இந்தத் திறப்புவிழாவை நடத்தியிருக்கலாம் என்கிற வருத்தம் எங்களுக்கு உண்டு.

அ.ம.மு.க. என்கிற கட்சி ஆரம்பிக்கப்பட்டதே அ.தி.மு.கவை மீட்டெடுக்க வேண்டும், அம்மாவின் உண்மையான ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான். அதற்கான போராட்டங்களைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோம். அ.தி.மு.கவின் பொதுச்செயலாளராகவும் சின்னம்மா இருக்கிறார். அது தொடர்பான வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. கட்சியை மீட்டெடுப்பதற்காகச் சட்ட நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுப்பார்கள். மக்களின் மீதும், உண்மையான அ.தி.மு.க. தொண்டர்களின் மீதும் எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது. இந்த ஆட்சி அதிகாரம் முடிவுக்கு வந்த பிறகு, பெரும்பான்மையான அ.தி.மு.க. நிர்வாகிகளும் சின்னம்மாவின் பக்கம் வந்துவிடுவார்கள்" என்கிறார் அவர்.

தினகரனின் இந்தக் கருத்துகள் குறித்து, அ.தி.மு.கவின் செய்தித் தொடர்பாளர் கோவை செல்வராஜ் கூறும்போது,

"அரசியல் களத்தில் காணாமல் போய்விட்ட ஒருவர் தினகரன். அவர், அ.தி.மு.கவைக் கைப்பற்றுவேன் என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. இன்று விடுதலையாகியிருக்கும் சசிகலாவின் மீது தனிப்பட்ட முறையில் எங்களுக்கு எந்த வெறுப்புமில்லை. ஆனால், அவர்களுக்கும் அ.தி.மு.க. என்கிற கட்சிக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்பதைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அ.தி.மு.கவுக்கு பல துரோகங்களைச் செய்தவர் தினகரன். அவரால் நாங்கள் பல தொல்லைகளை அனுபவித்தோம். அதையும் மீறி, ஆட்சியையும் கட்சியையும் ஒற்றுமையாகக் கட்டிக் காப்பாற்றி வந்திருக்கிறோம்.

ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த சசிகலா குடும்பத்தினர், அம்மாவின் மறைவுக்குப் பிறகு மீண்டும் அ.தி.மு.கவில் அதிகாரம் செலுத்தியதை எங்கள் தொண்டர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தினகரனோ, சசிகலாவோ அ.தி.மு.கவின் உறுப்பினர்களே கிடையாது. அதனால், இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் தினகரனாலும், அந்தக் குடும்பத்தினராலும் அ.தி.மு.கவைத் தொட்டுக்கூடப் பார்க்க முடியாது.

அம்மாவின் நினைவு மண்டபத்தையும், அருங்காட்சியகத்தையும் இந்தத் திகதியில் திறக்க வேண்டும் என்பது. ஒரு மாதத்துக்கு முன்பே எடுக்கப்பட்ட முடிவு. நல்ல முகூர்த்த நாள் என்பது மட்டும்தான் அதற்குக் காரணம்.

ஆனால், சசிகலா இன்றைய திகதியில் விடுதலை செய்யப்படுகிறார் என்கிற விடயம் பத்து நாட்களுக்கு முன்பாகத்தான் தெரியவந்தது. அதனால், இரண்டு சம்பவங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சசிகலாவின் தமிழக வருகையை மடைமாற்ற வேண்டும் என்கிற அவசியம் எங்களுக்கு இல்லை. எங்களின் கவனம் முழுவதும் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.கவை வெற்றிபெறவைத்து, அம்மாவின் ஆட்சியைத் தொடர வேண்டும் என்பதில் மட்டும்தான் இருக்கிறது" என்கிறார்.

"அ.தி.மு.கவுடன் அ.ம.மு.க இணையப்போகிறது என்கிற செய்தி அரசியல் வட்டாரத்தில் அண்மையில் பேசப்பட்டு வந்தது. குருமூர்த்தியும், தி.மு.கவைத் தோற்கடிக்க இருவரும் ஒன்றிணைய வேண்டும் என்கிற கருத்தை முன்வைத்தார்.

தினகரனும் பா.ஜ.க. குறித்து எதுவும் பேசாமல் இருந்தார். சசிகலா விடுதலைக்குப் பிறகு அதற்கான முன்னெடுப்புகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தினகரன் இன்று பேசியிருப்பதை வைத்துப் பார்க்கும்போது, எடப்பாடி சொன்னதுபோல நூறு சதவிகிதம் வாய்ப்பில்லை என்றே தெரிகிறது. 'இணைப்பு வேண்டாம்' என்கிற எடப்பாடியின் கருத்தை பா.ஜ.கவும் ஏற்றுக்கொண்டதாகவே தெரிகிறது.

எடப்பாடி, ஓ.பி.எஸ்.குறித்து அண்மையில் எதுவும் பேசாமல் இருந்த தினகரன், இனிமேல் கடுமையாகப் பேசுவார். பா.ஜ.கவை தற்போது இல்லாவிட்டாலும், தேர்தல் நெருக்கத்தில் விமர்சிப்பார். அ.ம.மு.கவை வலிமைப்படுத்தும் வேலையில் இறங்குவார். அ.தி.மு.கவில் இருக்கும் அதிருப்தியாளர்களைத் தன் பக்கம் இழுப்பார். சசிகலாவின் விடுதலையை சென்னையிலும் கொண்டாடுகிறார்கள் என்று சொன்னதுகூட, தொண்டர்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள், சசிகலா ஆதரவு நிர்வாகிகள் இன்னும் அ.தி.மு.கவில் இருக்கிறார்கள் என்று வெளிப்படுத்துவதற்காகத்தான்.

வருகின்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் போட்டியிடுவோம் என்று தினகரன் இன்னும் சில நாட்களில் அறிவிப்பார். கண்டிப்பாக, கணிசமான வாக்குகளைப் பிரிப்பார். இதுதான் நடக்கும்" என்கிறார் அவர்.

ஜூனியர் விகடன்

# கடல் புறா

## விடுதலைக்கு வழி




காந்தம் என்று அமீர கூறியது அநபாயனையென்றால், அவன் கண்களில் அத்தனை தூரம் புத்தொளியொன்று பிறப்பானேன்? அவன் அந்தச் சீனக் கடலோடியை நோக்குவானேன்? ஏதோ புரிந்ததற்கு அறிகுறியாக அந்தச் சீனக் கடலோடியை நோக்குவானேன்? ஏதோ புரிந்ததற்கு அறிகுறியாக அந்தச் சீனக் கடலோடி தலையை அசைப்பானேன்? என்றெல்லாம் எண்ணிப் பார்த்த இளைய பல்லவன், தான் ஆராய்ந்துணர முடியாத வேறு ஏதோ பலத்த அபிலாஷையொன்று அமீரின் உள்ளத்தில் உலாவுகிறது என்று திட்டமான முடிவுக்கு வந்தான்.

ஆனால் அந்த அபிலாஷை எதுவாயிருக்கக் கூடும் என்பதைப் பற்றி மட்டும் அவனுக்கு விளக்கம் கிடைக்கவில்லையாகையால் அவன் நின்ற நிலையிலேயே அநபாயன் மீது கண்ணைத் திருப்பிக் கண்கள் மூலமே கேள்வியொன்றையும் வீசினான்.

அந்தச் சமயத்தில் அநபாயன் முகத்திலும் சிந்தனை பலமாகப் பரவிக் கிடந்தது. கிட்டத்தட்ட கருணாகர பல்லவன் உள்ளத்தே எழுந்த கேள்விகளைப் போன்ற கேள்விகளே அவன் சிந்தனையிலும் எழுந்துலாவிக் கொண்டிருந்தன. 'காந்தம் என்னை இழுக்கிறது என்று எதைக் குறிப்பிட்டான் அமீர்.

அதைக் கேட்டதும் அகூதா ஏன் தலைய சைத்தான்!' என்பது அவனுக்கு சந்தேகத்தை அளித்ததால், "இனி நீ சொல் கதையை, அமீர்" என்று அகூதா உத்தரவிட்டு அமீர் கதையைத் தொடக்க தொண்டையைக் கனைத்துக் கொண்டதும் அவனைக் கதையைத் தொடக்க விடாமல் தடுத்த அநபாயன் உன்னை இழுக்கும் காந்தம் எது? அமீர் என்று கேள்விக்கணை ஒன்றைத் தொடுத்தான் இடையே.

கதையைத் தொடங்க முயன்ற அமீர், தனது நாவில் உதயமான சொற்களைச் சரேலெனத் தேக்கிக் கொண்டு புத்தொளியில் ஜொலித்த தன் கண்களை அந்த அறையைச் சுற்றிலும் ஒருமுறை ஓடவிட்டு, அநபாயன் கேட்ட கேள்வி அங்கிருந்த ஒவ்வொருவர் முகத்திலிருந்தும் புறப்படுவதைக் கவனித்தான்.

அந்தப் பார்வைகளில் சந்தேகம் துளிர் விடுவதையும் அவன் புரிந்து கொண்டதன்றி அதன் காரணத்தையும் ஓரளவு ஊகித்துக் கொண்டானாதலால் அகூதாவிடம் திரும்பி, இதழ்களில் புன்முறுவலொன்றையும் கொட்டினான். அத்துடன், "நான் சொல்வதை இவர்கள் யாரும் நம்பவில்லை" என்றும் சீனக் கடலோடியிடம் சுட்டிக் காட்டினான்.

அமீரின் சொற்களை ஆமோதிக்கும் வகையில் தலையை அசைத்த அகூதா, "இவர்கள் நம்புவது கஷ்டம். சந்தர்ப்பங்கள் அப்படியிருக்கின்றன. தவிர, இவர்கள் காந்தத்தின் சக்தியை அனுபவிக்காதவர்கள்" என்று பதிலும் சொன்னான். இந்தச் சில வார்த்தைகளை உதிர்த்த அகூதாவின் சொற்களில் அன்பு கனிந்து கிடந்தது. அது அமீரிடம் ஏற்பட்ட அன்பா? அல்லது காந்தம் என்று சொல்கிறார்களே அதன் நினைப்பில் ஏற்பட்ட கனிவா? விடை சொல்ல முடியாத அளவுக்கு அந்தக் கொள்ளைக்காரன் குரலும் குழைந்து கிடந்தது.

காந்தம் எதுவாயிருந்தாலும் அதை நினைத்த மாத்திரத்தில் அந்தக் கொள்ளைக்காரன் குரலில் குழைவையும் கண்களில் பேரொளியையும் வரவழைக்கக்கூடிய சக்தி அதற்கிருந்ததை அறிந்த அநபாயன் மிகவும் வியப்பெய்தினானாகையால், "எங்களுக்குக் காந்தத்தின் அனுபவமில்லாதிருக்கலாம், அனுபவமிருப்பவர்கள் விளக்கலாமல்லவா?" என்று வினவினான்.

அந்த வினாவைக் கேட்டதும் சற்றே சங்கடப்பட்ட அமீர், "விளக்குவது அவசியமா?" என்று வினவினான்.

"மிகவும் அவசியம்" என்று திட்டமாகக் கூறினான் அநபாயன்.

"அநபாயரே! நான் சொன்னதில் நம்பிக்கையில்லையா உங்களுக்கு?" என்று மீண்டும் கேட்டான் அமீர்.

அநபாயன் விழிகள் அமீரின் மீது அன்பு வெள்ளத்தைச் சொரிந்தன. "எங்கள் நிலைமை உனக்கு விளங்கவில்லையா அமீர்? நாங்கள் அரசகுலத்தில் பிறந்தவர்கள் சில சம்பிரதாயங்களுக்கும் நல்லுணர்ச்சிக்கும் அடிமைப்பட்டவர்கள். உன்னை நாசம் செய்து ஆபத்திலிருந்து தப்பு வதை நல்ல ரத்தமுள்ள மன்னர்குலத் தோன்றல் எவன் தான் ஒப்புக்கொள்வான். உன் வாணிபத்தை ஒழித்து உன்னை நாடு கடத்தி நாங்கள் தப்ப இஷ்டப்படவில்லை அமீர். நீ தியாகம் செய்யவில்லையென்று சொல்லுகிறாய் அது உண்மையல்ல. இதை விடப் பெரும் தியாகத்தை உலகத்தில் யாரும் செய்ய முடியாது.

என்னிடம் அன்பினால் இந்தத் தியாகத்தை நீ செய்ய முன் வந்திருக்கிறாய். இதை நீ மறுத்தால் நானோ கருணாகரனோ காஞ்சனா தேவியோ எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? முடியாது ஒரு காலும் முடியாது என்ற அநபாயன் பேச்சிலும் அன்பு வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

அமீரின் பெருவிழிகளில் நீர் மெல்லத் திரண்டது.பின்புறமாகத் தலையைத் திருப்பிப் பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்த அங்கியின் பகுதியை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டான்.பிறகு மீண்டும் திரும்பி அநபாயனை நோக்கிக் கேட்டான்.

நீங்கள் இந்த பாலூர் வராதிருந்து நான் என் குருநாதரை மட்டும் சந்தித்திருந்தால் என்ன நடந்திருக்குமென்று நினைக்கிறீர்கள்? என்று.

என்ன நடந்திருக்கும்? என்று அநபாயனும் பதிலுக்குக் கேட்டான். நான் சொன்னால் நம்பமாட்டீர்கள். என் குருநாதரைக் கேளுங்கள் என்றான் அமீர்.

அகூதாவின் மீது தன் விழிகளைத் திருப்பினான் அநபாயன். அகூதாவின் சிறுவிழிகளில் ஆரம்பத்திலிருந்த புத்தொளியே பரவிக் கிடந்தது. அநபாயன் விழிகளில் தொனித்த கேள்விக்குப் பதில் சொல்லிய அவன் குரலிலும் பெரு த்த உறுதியிருந்தது. அப்பொழுதும் இந்த வாணிபம் விற்கப்பட்டிருக்கும் என்று திட்டமாகக் கூறினான் அகூதா.

ஏன்? என்று குறுக்கிட்டான் இளையபல்லவன்.

காந்தம் இழுத்திருக்கும் இன்னும் அதிக திட்டமாக வந்தது அகூதாவின் பதில். என்ன காந்தம் அது? என்று மறுபடியும் கேட்டான் இளைய பல்லவன்.

அகூதாவின் சொற்கள் நிதானமும் உவகையும் கலந்து ஒலித்தன. கடலெனும் காந்தமா! இளைய பல்லவன் அநபாயன் இருவருமே ஏககாலத்தில் வியப்புடன் கேள்வியை வீசினார்கள்.

அந்தக் கேள்விகள் ஏககாலத்தில் எழுந்ததையோ அவற்றில் விபரிக்க இயலாத வியப்பு தொங்கியிருந்ததையோ சிறிதும் கவனிக்காமல் சொற்களை மட்டும் காதில் வாங்கிக் கொண்ட அந்தச் சீனக் கடலோடி தன் சிறு விழிகளை அவர்கள் மீது அவர்கள் சில விநாடிகள் நிலைக்க விட்டான்.பிறகு அறையில் இரண்டு விநாடிகள் அப்படியும் இப்படியும் உலாவினான்.

கடைசியாக நின்ற தோரணையிலேயே தனக்கருகேயிருந்த மஞ்சத்தின் முகப்பில் கைகளைச் சுற்றி அணைத்து முதுகை லேசாகக் கூனி மற்றவர்களை நோக்கினான்.அவன் கண்களில் பெரும் கனவு படர்ந்தது. கனவைத் தொடர்ந்து உதிர்ந்த வார்த்தைகளிலும் கனவில் பேசும் மனிதன் நிலைமையே நிலவிக் கிடந்தது. ஆம் கடலெனும் காந்தம் தான். சிலர் உங்களைப் பொன் கவர்கிறது. மற்றும் சிலர் உள்ளங்களைப் பெண்களின் விழிகள் கவர்கின்றன.

இவை அனைத்துக்கும் மேலாக ஒரு காந்தம் இருக்கிறது. அது தான் இந்த மாநிலத்தைச் சூழ்ந்திருக்கும் பெரும் கடல். மாலுமிகளின் மனத்தை அது கவர்வது போல் வேறு எதுவும் கவர்வது கிடையாது. நிலையுடனிருக்கும் மண்ணில் வாழ்பவன் மண்மீது வைக்கும் ஆசையை விட நிலையற்றுச் சதா சலனப்படும் கடலின் மீது ஆசை வைக்கிறான் மாலுமி.

அதன் மீது ஆடும் மரக்கலம் மாலுமிக்கு உயிர். நான் சொல்வது உங்களுக்குப்புரியாது. எந்த மனிதனாவது மாலுமியாக வாழ்க்கையைச் சில வருஷங்கள் நடத்திவிட்டால் அவனை மீண்டும் கடலெனும் காந்தம் இழுத்தே செல்லும்.

(தொடரும்)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : படிக்காத மேதை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர் : எம்.எஸ்.ரராஜேஸ்வரி



பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு
பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு
பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு...

கொடுப்பதற்கும்... சிரிப்பதற்கும்
கொடுப்பதற்கும் சிரிப்பதற்கும் படிப்பு வேண்டுமா
கொடுப்பதற்கும் சிரிப்பதற்கும் படிப்பு வேண்டுமா
என்றும் குழந்தையை போல்
வாழ்ந்துவிட்டால் துன்பம் தோன்றுமா
என்றும் குழந்தையை போல்
வாழ்ந்துவிட்டால் துன்பம் தோன்றுமா

பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு
பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு...

வாழை மரம் படித்ததில்லை கனி கொடுக்க மறந்ததா
வான் முகிலும் கற்றதில்லை மழை பொழிய மறந்ததா
சோலையெல்லாம் கற்றதில்லை
நிழல் கொடுக்க மறந்ததா
சுதந்திரமாய் பாடி வரும் குயிலும் பாடம் படித்ததா

பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு
பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு...

கல்வியில்லா கன்றுகளும் தாயை அழைக்கும்
காட்டு கவரி மானும் பெண்களைப்போல்
மானத்தை காக்கும்
கல்வியில்லா கன்றுகளும் தாயை அழைக்கும்
காட்டு கவரி மானும் பெண்களைப்போல்
மானத்தை காக்கும்
பள்ளி சென்று இவைகளெல்லாம் படித்ததில்லையே
நெஞ்சில் பாசத்தோடும் நேசத்தோடும் வாழவில்லையா

பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு
பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு
பழத்தினால் அறிவு பெற்றோர் ஆயிரம் உண்டு....

# வந்து விட்டது செயற்கை இறைச்சி


**'செயற்கை இறைச்சி விற்பனைக்கு சிங்கப்பூர் அரசு அனுமதி'**

கடந்த சில நாட்களாக அசைவ உணவுப் பிரியர்கள் இந்தச் செய்தி குறித்துத்தான் அசை போட்டுக் கொண்டிருக் கின்றனர்.

கண் முன்னே வெட்டி விற் கப்படும் ஆட்டிறைச்சிக்கும் உயிர் கோழிகளுக்கும் உயிர் மீன்களுக்கும் இங்கே தனி மவுசு இருக்கிறது. "பக்கெற்று களில் அடைத்து விற்கப்படும் இறைச்சியே புதியதுதானா, ஒரிஜினலா? என்று கண்டு பிடிக்க முடியாது. இரண்டுக்கு மான சுவை மாறுபடும்" என்பது இங்கு பொதுவான கருத்தாக இருக்கிறது.

அதை ஈடுகட்டுவதற்காக உல கின் பல்வேறு நாடுகளில் மாற்று இறைச்சியை உருவாக் கும் முயற்சி நடந்து கொண்டி ருக்கின்றன. இப்படியான பல முயற்சிகள் நடந்து கொண்டி ருந்தாலும் செயற்கை இறைச் சியை விற்பனை செய்ய சிங்கப் பூர்தான் முதன்முதலில் அனு மதி அளித்திருப்பதாகக் கூறப் படுகிறது.

ஈட் ஜஸ்ட் (Eat Just) எனும் கலிபோர்னிய நிறுவனம்தான் இந்த செயற்கை கோழி இறைச் சியைத் தயாரித்துள்ளது. வில ங்குகளின் தசையில் இருந்து எடுக்கப்படும் செல்களை வைத்து ஆய்வுகூடங்களில் வளர்க்கப்படும் இந்த வகை இறைச்சியானது "வளர்ப்பு இறைச்சி (Cultured meat)" என்று வகைப்படுத்தப்படுகிறது. கோழியின் 'செல்'களைப் பிரித் தெடுத்து, அவற்றுடன் சில சத்துப்பொருட்களைக் கலந்து ஆய்வகத்தில் இந்த செயற்கை இறைச்சி உருவாக்கப்படுகி றதாம்.



இப்படியான சூழலில்தான், ஆய்வகத்தில் உருவாக்கப்பட்ட செயற்கைக் கோழி இறைச் சியை விற்பனை செய்ய சிங்கப் பூர் அரசு அனுமதி வழங்கியி ருக்கிறது. இதை மையப்படுத்தி செயற்கை இறைச்சி எப்படித் தயாராகிறது, அது நல்லது தானா? இந்த இறைச்சி இந்தியாவுக்கு விற்பனைக்கு வருமா? எனப் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

**எப்படி உருவாகும்?**

மக்கள் தொகைப் பெருக்கத் துக்கு ஏற்ப இறைச்சிக்கான தேவை நாளுக்கு நாள் அதி கரித்துக்கொண்டே இருக்கிறது.

**விலங்குகளைக் கொல்ல வேண்டியதில்லை!**

இது குறித்துப் பேசியிருக் கும் 'ஈட் ஜஸ்ட்' நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான ஜோஷ் டெட்ரிக், "ஆயிரக்கணக் கான ஆண்டுகளாக மனிதர் கள் இறைச்சி உண்டு வருகின் றனர். ஒவ்வொரு முறை இறைச்சி உண்ணும் போதும் அதற்காக நாம் விலங்குகளைக் கொல்ல வேண்டியிருக்கிறது.

அதனால்தான் "இறைச்சி சாப்பிடுவது மனிதாபிமானமற்ற செயல்" என விலங்குகள் நல ஆர்வலர்கள் விமர்சிக்கின்ற னர். இனிமேல் அப்படியான விமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

செயற்கையாக உருவாக் கப்படும் இறைச்சிக்கு முதன் முதலாக சிங்கப்பூர் ஒப்புதல் அளித்திருக்கிறது. விரைவில் அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பா நாடுகளிலும் ஒப்புதல் கிடைக்கும்" என்று தெரிவித் துள்ளார்.

"இந்த செயற்கை கோழி இறைச்சியில் உள்ள மூலப் பொருட்களில் நச்சுத்தன்மை இருக்கிறதா? உணவுப் பொருள் தரம் தொடர்பான விதிமுறை களை இந்த இறைச்சி பூர்த்தி செய்கிறதா? என்பனவற்றை யெல்லாம் ஆராய்ந்துளோம். இதன் தயாரிப்பு முறையை ஆய்வு செய்த பிறகுதான், இந்த இறைச்சியை சிங்கப்பூரில் விற்க அனுமதி அளித்துள் ளோம்.

இந்த இறைச்சியானது மனி தர்கள் உட்கொள்ள பாதுகாப்பா னது" என்று சிங்கப்பூர் உணவு முகமை (Singapore Food Agency) அங்கீகரித்திருக்கி றது.

# பற பற சைக்கிளில் பற

சைக்கிள் பயன்பாடு உலகம் முழுவதும் சிறிது சிறிதாக அதி கரித்து வருகிறது. உடல் நலன் சார்ந்த தேவைக்களுக்காகவா வது சைக்கிள் பக்கம் தங்கள் பார்வையைப் பலரும் திருப்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஆனால், 25 ஆண்டுகளு க்கு முன்புவரை சைக்கிள் என்பது ஒவ்வொருவருடைய வாழ்க்கையோடும் பின்னிப் பிணைந்த வாகனமாக இருந்தது. சந்து பொந்துகளில் எல்லாம் விரைந்து செல்லும் வாகனம் சைக்கிள். சைக்கிள்களுக்குச் சிக்னல் எல்லாம் ஒரு பொரு ட்டே அல்ல. மீண்டும் கவனம் பெறத் தொடங்கியிருக்கும் சைக்



கிள் பற்றிச் சில அறியப்படாத தகவல்கள்:

சைக்கிளைப் பயன்படுத்து பவர்களில் 25 சதவீதத்தினர் வீட்டிலிருந்து 2 கி.மீ. தொலை வுக்கே அவற்றை ஓட்டுகிறார் கள். வாரத்துக்கு 3 மணி நேரமோ 30 கிலோ மீற்றரோ சைக்கிள் பயணம் மேற்கொண் டால், இதயம் தொடர்பான நோய் களைத் தள்ளி வைக்கலாம்.

உலகில் சுமார் 100 கோடி சைக்கிள்கள் பயன்படுத்தப்ப டுகின்றன. ஆண்டுதோறும் 10 கோடி சைக்கிள்கள் தயாரிக்கப்ப டுகின்றன.

'பை சைக்கிள்' என்னும் சொல் பிரான்ஸில் 1860 இல் புழக்கத்துக்கு வந்தது.

1962 இல் நவீன சைக்கிள் பயன்பாடு அதிகரிக்கத் தொடங் கியது. குறிப்பிட்ட தொலைவை காரில் கடப்பதற்குத் தேவைப் படும் ஒட்சிசனின் அளவில் பாதியிருந்தால் போதும், அதே தூரத்தை சைக்கிளில் கடந்து விடலாம்.

சைக்கிளில் செல்ல இலங் கையில் பொதுவாக ஹெல்மட் அணியப்படுவதில்லை. ஆனால், அவுஸ்திரேலியாவில் சைக்கி ளுக்கும் ஹெல்மட் கட்டாயம்.

## சூர்யாவுடன் இணையும் சத்யராஜ்




சூர்யா அடுத்ததாக நடிக்க உள்ள படத்தில் நடிகர் சத்யராஜ் முக்கிய கதா பாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார்.தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக வலம்வருபவர் சூர்யா. இவர் அடுத்ததாக பாண்டிராஜ் இயக்கும் படத்தில் நடிக்க உள்ளார். இப்படத்தை சன் பிக்சர்ஸ் சார்பில் கலாநிதி மாறன் தயாரிக்கிறார். இப்படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக இளம் நடிகை பிரியங்கா மோகன் ஒப்பந்தமாகி உள்ளார். டி.இமான் இப்படத்திற்கு இசையமைக்க உள்ளார். இந்நிலையில், நடிகர் சத்யராஜ் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். இப்படத்தின் மூலம் நடிகர் சத்யராஜ், சூர்யாவுடன் முதன்முறையாக இணைந்துள் ளார். சூர்யா 40 படத்தின் ஆரம்பக்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் படப்பிடிப்பு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கே.ஜி.எ.ஃப் 2 ரிலீஸ் திகதி அறிவிப்பு





பிரசாந்த் நீல் இயக்கத்தில் யாஷ் நடிப்பில் உருவாகியிருக்கும் இருக் கும் கே.ஜி.எஃப் 2 படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழுவினர் அதிகார பூர்வமாக அறிவித்து இருக்கிறார்கள்.கே.ஜி.எஃப் படம் மூலம் ரசிகர் களை அதிகம் கவர்ந்தவர் நடிகர் யாஷ். இப்படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய அனைத்து மொழி களிலும் வெளியாகி பெரும் வெற்றிப் பெற்றது. இந்த படத்தை பிரசாந்த் நீல் இயக்கி இருந்தார்.இப்படத்தின் வெற்றியை தொடர்ந்து கே.ஜி.எஃப் 2 உருவாகி வருகிறது. நடிகர் யாஷின் பிறந்தநாளை முன்னிட்டு கே.ஜி.எஃப் 2 படத்தின் டீசர் வெளியிடப்பட்டது. இந்த டீசர் பல பார் வையாளர்களை கடந்து சாத னை படைத்துள்ளது.இந்நிலையில் இந்த படம் ஜூலை 16 ஆம் திகதி வெளியாக இருப்பதாக படக்குழுவினர் அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருக்கிறார்கள்.

## பொலீஸ் வாகனத்தில் அனுஷ்கா



தமிழ்,தெலுங்கு மொழிகளில் நடித்து பிரபல நடிகையாக இருக்கும் அனுஷ்கா, பெண் பொலிஸ் வாகனத்தில் பயணம் செய்து இருக்கிறார்.ஐதராபாத்தில் பெண் பொலிஸ் அதிகாரிகள் மாநாடு நடந்தது. இதில் 750-க்கும் மேற்பட்ட பெண் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர். பெண் பொலிஸார் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. இதில் நடிகை அனுஷ்கா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஒரு பெண் பொலிஸ் ஓட்டிய வாகனத்தில் ஏறி சிறிது தூரம்பயணம் செய்தார்.மாநாட்டில் அனுஷ்கா பேசும்போது, "சினிமா திரையில் எங்களை நட்சத்திரங்களாக காட்டினாலும், இந்த அறையில் உட்கார்ந்திருக்கும் பெண் பொலிஸ் அதிகாரிகளாகிய நீங்கள்தான் உண்மையான நட்சத்திரங்கள். நாங்கள் சினிமா நட்சத்திரங்கள். நீங்கள் நிஜமான நட்சத்திரங்கள். உங்களுடைய கடுமையான முயற்சியாலும் உழைப்பினாலும்தான் நாங்கள் எல்லோரும் பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறோம். உங்களுடைய தியாகங்கள் உயர்வானவை. ஒவ்வொரு பெண்ணும் ஆணுக்கு இணையாக உயர வேண்டும்" என்றார்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## பிரான்சிஸ் வின்சன் டீ போல்

அப்பா!

உம்மை பற்றி நீ கற்றுத் தந்த மொழியில்...
எப்படி எப்படி எல்லாமோ தன் பாசம் உணர்த்தினாள் அம்மா.
ஒரேயொரு அழைத்தலில் எல்லாமே உணர்த்தினாய் நீ.

நீ முன்னால் சொன்னதில்லை,
பிறர் சொல்லித்தான் கேட்டிருக்கிறோம்,
எம்மைப் பற்றிப் பெருமையாக நீ பேசிக் கொண்டிருந்ததை.

அம்மா எத்தனையோ முறை திட்டினாலும் உறைத்ததில்லை,
உடனேயே உறைத்திருக்கிறது என்றேனும் உன் முகம் வாடும்போது.

உன் அப்பா எவ்வளவு அற்புதமானவராக இருந்திருக்கிறார் தெரியுமா என்று
மற்றவர்கள் எம்மிடம் சொல்லும்போது தான் தெரிந்தது,
எத்தனை பேருக்குக் கிடைக்காத அப்பா எமக்கு மட்டுமென நீயானாயென்று.

சிறுவயதில் எம் கரம் பிடித்து நடை பயில சொல்லிக்கொடுத்த நீ,
எம் கரம் பிடித்ததுமுதல், எத்தனை பேர்,
நான் இருக்கிறேன் என்று சொன்னாலும்,
எமக்கு உன்னைப் போல் யார் இருக்க இயலும் அப்பா?

திட்டித் தீர்த்ததும் இல்லை, வேண்டாம் என சொல்லியதுமில்லை,
இருந்தும் ஏதோ ஒன்றினால் கட்டுப்படுத்தியது உன் அன்பு.

வெளிப்படையாக நீ காட்டியதில்லை, உம் பாசத்தை. இருந்தும்...
என்றும் நீ பெற நினைத்ததெல்லாம் நாம் பெறவே நீ உழைத்தாய்.

நான் பிரிந்து இறைவனிடம் செல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது.
நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்.
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே.
அதை ஆண்டவர் எனக்குத் தருவார் என்று பைபிள் வரிகளை எமக்குரைத்து.
நீ இறைவனிடம் சென்றுவிட்டாய். கொடுத்து வைத்தவன் நீ அப்பா.
இறைவனோடு நீ என்றும் வாழ்வாய்.

வானகத் தேவனிடம் உன்னை வழியனுப்ப வந்தவர்களின்
வாழ்த்தொலிகளை கேட்டபோதுதான் எமக்குத் தெரிந்தது,
வாழ்வென்றால் இப்படித்தான் வாழவேண்டும் என்று.

நாம் இன்னும் மறக்கவில்லை நாம் சிரிக்கும்போது நீ புன்னகையானதை.
நாம் அழும்போது நீ கண்ணீரானதை தொட்டிலில் தூங்கினால்
நாம் விழுந்து விடுவோமோ என்பதால்,
உன் தோள் மீது உறங்க வைத்ததை. அகிலமே கூடி எதிர்த்தாலும்
எம்முடன் வரும் ஒருவனும் நீதான். தனிமையில் நாம் தவிக்கும் பொழுது
துணையாய் வரும் ஒருவனும் நீதான். தோல்வியில் சுருளும் பொழுது
தூணாய் வருபவனும் நீதான். நீ இறைவனின் சந்நிதானத்தில்
இன்பமாக வாழ நாம் தினம் இறைவனிடம் வேண்டிடுவோம் அப்பா.

அன்னாரின் இல்லத்தில் இன்று நடைபெறும் மதிய போசன நிகழ்வில்
கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குடும்பத்தினர்

றோஸ் கொட்,
கடற்கரை வீதி, பருத்தித்துறை.

# கம்மின்ஸ் என்னும் கஜினி முகமது உலகின் முதல் தர வீரரான கதை!

பௌலரா, பந்து வீசும் இயந்திர மனிதனா மோசமான ஸ்பெல் என்ற ஒன்றுகூட இவருடைய வாழ்நாளில் வீசியது கிடையாதா? இவர் வீசும் பந்துகளில் பேஸ், ஸ்விங், பவுன்ஸ் என சகலமும் இவரது சொன்ன பேச்சைக் கேட்கிறதே அதெப்படி, பார்னர்ஷிப்களை உடைக்க வேண்டுமென கப்டன் நினைக்கும் போதெல்லாம் பந்து இவரது கைக்குப் போவது ஏன், இந்தியாவிடம் அவுஸ்திரேலியா தொடரையே பறிகொடுத்தாலும் தொடரின் நாயனாக இவர் ஜொலிப்பது எப்படி?! இவையெல்லாம் இந்தத் தலைமுறையின் ஆகச்சிறந்த வேகப்பந்து வீச்சாளரான அவுஸ்திரேலியாவின் கம்மின்ஸைப் பற்றிக் கேட்கப்படும் கேள்விகள்!

மைதானம் பந்துவீச்சிற்கு எந்தவித ஒத்துழைப்பும் தரவில்லை என்றால் கூட, பந்தை கம்மின்ஸிடம் கொடுங்கள். அவர் ஒத்துழைக்க வைப்பார் என்று வர்ணனையாளர்கள் வர்ணித்துக் கொண்டிருக்கிறார்கள். கம்மின்ஸ்தான் இப்போது உலகின் நம்பர் 1 டெஸ்ட் பௌலர்.

2018 இல் இருந்து கம்மின்ஸ் எந்த அளவிற்கு டெஸ்ட் கிரிக்கெட்டில் தாக்கத்தை உண்டாக்கி இருக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள அவரது சாதனைகளை மற்ற போலர்களோடு ஒப்பிட்டுப்பார்ப்பது அவசியம்.


2011 ஆம் ஆண்டு, தென்னாபிரிக்காவுக்கு எதிராக இவர் தனது அறிமுகப் போட்டியைத் தொடக்கிய போது, இவரது வயது வெறும் 18 தான்! தொடக்கப் போட்டியிலேயே இரண்டாவது இன்னிங்ஸில் ஆறு விக்கெட்டுகளை வீழ்த்திய இந்த இளம் புயலின் மீதுதான் அத்தனை கண்களும் இருந்தன! கண்பட்டதால் புண்பட்டதோ என்னவோ, கிட்டத்தட்ட அடுத்த ஆறு ஆண்டுகள் கம்மின்ஸின் வாழ்க்கை, காயங்களோடே நகர்ந்தது.

காயத்திலிருந்து குணமாகித் திரும்புவார், சில ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பார், பல முதல் தரப் போட்டிகளில் தன்னுடைய முதல் தரமான ஆட்டத்தால் நம்பிக்கை அளிப்பார். "ஆஹா! அடுத்ததாக, டெஸ்ட் அணிக்குத் திரும்பப் போகிறேன், கனவு மெய்ப்படப் போகிறது" என அவர் அணிக்குள் நுழையப் போகும் தருணத்தில் இன்னொரு காயம் அவரை முடக்கிப் போட்டு மூலையில் உட்கார வைக்கும்! மறுபடியும் மீண்டு வருதல், தயார்படுத்திக்கொள்ளுதல், கனவுகளைக் கண்களில் நிரப்புதல் எனத் திரும்பவும் எழுந்து நிற்கையில் மறுபடியும் ஒரு காயம் இவரது கனவைக் கலைத்து கண்ணாம்பூச்சி ஆடும், உடைந்து உட்கார வைக்கும்!

ஆனாலும் காலம் எல்லாவற்றையும் ஆற்றும், மாற்றும் என்பதுபோல மீண்டும் வந்தார் கம்மின்ஸ். தனது விடா முயற்சியாலும் கடும் பயிற்சியாலும் தன்னைத்தானே தயார்படுத்திக்கொண்டு மேம்படுத்தப்பட்ட வெர்ஷன் 2.0 ஆக, ஒரு அசாத்திய கம்பேக் கொடுத்தார் கம்மின்ஸ்! 2017 இல் இந்தியாவுக்கு எதிரான போட்டியில், ஸ்டார்க்கின் காயம் காரணமாக அணிக்குள் வந்தவர் மொத்தம் மூன்று இன்னிங்ஸில் எட்டு விக்கெட்டுகளை எடுத்து அசத்த, அணியில் இவருக்கான இடம் தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டது!

அதன்பிறகு, 2018 இல் இருந்து கடந்த மூன்றாண்டுகளில் பௌலர்களுக்கான அத்தனை ஸ்டேட்ஸிலும் தனது பெயரை பட்டியலின் முதல் பெயராய், பதிய வைத்துக்கொண்டிருக்கிறார் கம்மின்ஸ்! அவரது ரீ என்ட்ரிக்குப்பிறகு, 2018 ஆம் ஆண்டிலிருந்து அவுஸ்திரேலியாவுக்காக மொத்தம் 25 போட்டிகளில் விளையாடி இருக்கிறார் கம்மின்ஸ். இதே காலகட்டத்தில் மற்ற வேகப்பந்து வீச்சாளர்களான, ஸ்டார்க் 22 போட்டிகளிலும் ஹேசில்வுட் 20 போட்டிகளிலும் பங்கேற்றிருக்கின்றனர்.

> **க**ம்மின்ஸ் மற்ற பௌலர்கள்போல் 5 விக்கெட் ஹால் எடுக்கும் பௌலர் கிடையாது. அணிக்கு எப்போதும் எல்லாம் தேவைப்படுகிறதோ அப்போது எல்லாம் விக்கெட் எடுத்து எதிரணியின் பார்ட்னர்ஷிப்களை உடைப்பவர். அதனாலேயே அதிகமாக 3 மற்றும் 4 விக்கெட்டுகளை ஒவ்வொரு மட்சிலும் வீழ்த்துவார். கடந்த 3 ஆண்டுகளில் கம்மின்ஸ் அதிகமாக 4 விக்கெட்டுகள் வீழ்த்தியதில் முதலிடத்தில் இருக்கிறார்.



இந்தப் போட்டிகளில் கம்மின்ஸ் வீசியிருக்கும் ஓவர்களின் எண்ணிக்கைதான் ஆச்சர்யப்படுத்துகிறது. இந்த 25 போட்டிகளில் கம்மின்ஸ் வீசியிருக்கும் ஓவர்களின் எண்ணிக்கை 949.2. இவருக்கு அடுத்த இடத்தில் இருக்கும் ஸ்டார்க் வெறும் 744.3 ஓவர்கள்தான் வீசியிருக்கிறார்.

இந்தியாவுக்கு எதிராக நடந்து முடிந்த கடைசித் தொடரில் நான்கு போட்டிகளில் புஜாரா மட்டுமே கம்மின்ஸின் 928 பந்துகளைச் சந்தித்து சாதித்திருந்தார். அவுஸ்திரேலிய பௌலிங் யூனிட் சுமையின் பெரும்பகுதியை கம்மின்ஸே சுமந்திருந்தார்!

அவுஸ்திரேலியா அளவிலும் சரி, சர்வதேச அளவிலும் சரி கம்மின்ஸுக்கு சரிக்குச்சமமாக அதிக ஓவர்கள் வீசியவர் யாருமில்லையா எனக் கேட்டால், நானிருக்கிறேன் என ஸ்டூவர்ட் பிராட் முன்னால் வந்து நிற்கிறார். ஆனால், கம்மின்ஸைவிட ஆறு போட்டிகள் அதிகமாக விளையாடியிருக்கிறார் பிராட்.

சரி எத்தனை ஓவர்களை வீசுவது என்பதுகூட உடல் தகுதியை வைத்து முடிவு செய்யப்படும் விடயமாகப் பார்க்கப்படலாம்! எனவே, பௌலர்களின் தலையாய கடமையான விக்கெட் வீழ்த்தும் திறனை வைத்து இவர்களை ஒப்பிடலாம்! கடந்த 3 ஆண்டுகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவர்கள்...

கம்மின்ஸ் - 25 போட்டிகளில் 128 விக்கெட்டுகள், பிராட் - 31 போட்டிகளில் 119 விக்கெட்டுகள் சவுத்தி - 19 போட்டிகளில் 94 விக்கெட்டுகள்.

இதில் இரண்டாம் இடத்தில் இருக்கும் பிராடை விட அதிகமான விக்கெட்டுகளை, குறைவான போட்டிகளில் எடுத்திருக்கிறார் கம்மின்ஸ்! கடந்த தொடரில் இந்தியாவுக்கு எதிரான முதல் போட்டி கம்மின்ஸின் 31 ஆவது போட்டி! அதில் தனது 150 ஆவது விக்கெட்டாக ஹோலியை வெளியேற்றினார் கம்மின்ஸ்! ஆல் டைம் கிரேட்டாகக் கொண்டாடப்படும் மெக்ராத்தே, தனது 31 ஆவது போட்டியில் 137 விக்கெட்டுகளை மட்டுமே வீழ்த்தி இருந்தார்! அந்த காலகட்டத்தில் மெக்ராத்தின் சராசரி மற்றும் ஸ்ட்ரைக் ரேட், 23.89 மற்றும் 53.8. ஆனால் கம்மின்ஸோ 21.26 மற்றும் 46.3 என்ற எண்களுடன் மெக்ராத்தை மிஞ்சுகிறார். கம்மின்ஸ் எடுத்துள்ள 165 விக்கெட்டுகளில் 72 விக்கெட்டுகள் வெளிநாட்டில் எடுத்ததுதான்.

22 யார்டை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஜெட் வேகத்தில் தன்னுடைய துல்லிய பந்து வீச்சால் பட்ஸ்மேனை மெக்ராத் அச்சமூட்டினாரெனில் அதே 22 யார்டில் ஏவுகணை வேகத்தில் தனது சிவப்புத் தோட்டாவை பாயச் செய்து, பட்ஸ்மேனை, தன்னுடைய திறமையையே சந்தேகிக்க வைத்து வீழ்த்தும் வித்தகர் கம்மின்ஸ்.

அதனால்தான் பௌலிங் ஆவரேஜில் கம்மின்ஸ் முதல் இடத்தில் இருக்கிறார். கம்மின்ஸ் மற்ற பௌலர்கள்போல் 5 விக்கெட் ஹால் எடுக்கும் பௌலர் கிடையாது. அணிக்கு எப்போதும் எல்லாம் தேவைப்படுகிறதோ அப்போது எல்லாம் விக்கெட் எடுத்து எதிரணியின் பார்ட்னர்ஷிப்களை உடைப்பவர். அதனாலேயே அதிகமாக 3 மற்றும் 4 விக்கெட்டுகளை ஒவ்வொரு மட்சிலும் வீழ்த்துவார். கடந்த 3 ஆண்டுகளில் கம்மின்ஸ் அதிகமாக 4 விக்கெட்டுகள் வீழ்த்தியதில் முதலிடத்தில் இருக்கிறார். அதுமட்டுமல்லாமல் அவர் ஆடிய 65 இன்னிங்ஸ்களில் 34 முறைக்கு மேல் 3 அல்லது அதற்கு மேல் விக்கெட் எடுத்து எதிரணி பட்ஸ்மேன்களைத் திணறடித்துக் கொண்டிருக்கிறார்.

முதல் இன்னிங்ஸைவிட ஆட்டத்தின் போக்கையும் வெற்றியையும் மொத்தமாக மாற்றும் இரண்டாவது இன்னிங்ஸின் இரும்பரசனாக இருக்கிறார் கம்மின்ஸ். கடந்த 3 ஆண்டுகளில் இரண்டாவது இன்னிங்ஸில் 59 விக்கெட்களை வீழ்த்தி பௌலிங் ஆவரேஜ் 17.23 என மிரள வைக்கிறார்.

"அவுஸ்திரலியாவின் தலைசிறந்த 3 வேகப்பந்து வீச்சாளர்கள் யார் என்று கேட்டால் மெக்ராத், கம்மின்ஸ், ஜான்சன் என்பேன்" என அவுஸ்திரலிய ஜாம்பவான் ஷேன் வார்னேவே கம்மின்ஸைப் பாராட்டியுள்ளார். காயங்கள் தொடர்ந்து துரத்திய போதும் சிறிதும் மனம் தளராமல் கஜினிமுகமது படையெடுப்பது போல் பல வருடங்கள் தொடர்ந்து காயங்களுடன் படையெடுத்து எதிர்த்துப் போராடி இன்று வென்று காட்டியிருக்கிறார். இரண்டு வருடங்களாக நம்பர் 1 போலராக நீடித்து வரும் கம்மின்ஸின் இதே ஃபார்ம் தொடரும் பட்சத்தில் டெஸ்ட் கிரிக்கெட்டின் உலகம் போற்றும் தலை சிறந்த பௌலராக வருவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

# கிரீஸ் நகரின் கொலோசஸ் சிலை

(24.01.2021 திகதிய தொடர்ச்சி)

இன்னும் ஒரு சிலர் கடலுக்கு நடுவே கலங்கள் அதன் கால்களினூடே பயணிப்பது போல இருந்தது என்று கூட குறிப்பிட்டிருந்தனர். ஆனால் இந்தக் கூற்று உண்மையாக இருக்க வாய்ப்பில்லை என்பது பின்னர் வந்த வரலாற்று ஆசிரியர்களால் நிரூபிக்கப்பட்டது. கி.மு.226 இல் நிகழ்ந்த நில நடுக்கத்தின் போது சிலையின் கால்கள் முறிந்து கீழே விழுந்து விட்டன. சிலையின் உடைந்த பாகங்கள் விழுந்து கிட்டத்தட்ட 800 ஆண்டுகள் அங்கேயே கிடந்தன. பக்கத்து தேசங்களிலிருந்தும் கூட பெருவாரியான மக்கள் உடைந்த பாகங்களைக் கண்காட்சியைப் பார்த்து போல் பார்த்துச் சென்றதாக கிரேக்க வரலாற்று அறிஞர் ஸ்ட்ராபோ குறிப்பிட்டுள்ளார்.

## சிற்பியின் பரிதாப முடிவு

சிலையை வடிவமைத்த சிற்பி சார்ஸ் சிலை முழுமையடைவதற்கு முன் தற்கொலை செய்து கொண்டான். சிலை உருவாகிக் கொண்டிருக்கும் தருணத்தில் கிரேக்கச் சிற்பிகள் சிலர் சிலையின் வடிவமைப்பு, சிற்ப இலக்கணப்படி இல்லை என்று குற்றஞ்சாட்டியதால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டான் என்று ஒரு கருத்து சொல்லப்படுகிறது. சிலை சமைக்க இரு மடங்கு வெண்கலத்துக்கான பணத்தை பெற்றுக்கொண்ட சார்ஸ் குறைவான செலவில் சிலையை உருவாக்கினான்.

அந்த விடயம் மக்களுக்கு தெரிந்துவிட்டதால் பயந்து போய் அந்த முடிவை எடுத்தான் என்றம் இரு வேறு கருத்துக்கள் உலவுகின்றன.

ஆனால் சிலை முடிவடையும் தறுவாயில் அவன் உயிருடன் இல்லை என்பது மட்டும் உண்மை. சிலையின் இறுதிக் கட்டப்பணிகளை அதே லிண்டாஸ் ஊரைச்சேர்ந்த லாச்சஸ் எனும் மற்றொரு சிற்பி தலைமையேற்று முடித்தான்.

லாச்சஸ்சும் சார்ஸ்சும் ஒரே சிற்பப்பள்ளியில் பயிற்சி பெற்றவர்கள்: அன்றைக்கு கிரேக்கம் முழுக்க புகழ்பெற்றிருந்த லிசிபோஸ் எனும் சிற்பியின் சீடர்கள்.

கடலின் நடுவே அந்தச் சிலை அமைக்கப்பட வேண்டும் எனில் மிக நீண்ட காலம் துறைமுகம் மூடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ரோடஸ் தீவின் வருவாய் துறைமுகத்தை நம்பியே இருந்ததால் அதற்குத் தீவு மக்கள் முன்வந்திருக்க மாட்டார்கள். மேலும் பொது மக்கள் எளிதாக வந்து பார்த்துச் செல்லும்படி இருந்ததால் கடலின் நடுவே அந்தச் சிலை அமைக்கப்பட்டிருக்க வாய்ப்பில்லை என்பது உறுதியானது.

கடவுளின் சிலை என்பதால் அந்தப் பாகங்களை எடுத்துச் செல்ல கிரேக்க மக்கள் பயந்தனர். எகிப்து மன்னன் மூன்றாம் தாலமே தனது ஆட்சிக் காலத்தில் சிலையை மீண்டும் நிர்மாணிக்க ஆகும் செலவை தான் ஏற்பதாக அறிவித்தான். ஆனால் என்ன காரணத்தினாலோ ரோடஸ் தீவு மக்கள் ஹெலியாஸ் கடவுளின் கோபத்துக்கு ஆளாக நேரும் என்ற காரணத்தைக்கூறி அந்த அறிவிப்பை நிராகரித்தனர். அதற்குப்பிறகு வந்த பல அரசுகள் சிலையை மறுபடி அதே இடத்தில் வைக்க முயற்சி எடுத்தன. ஆனால் அதற்காகும் நிதித் தேவை முன்னர் வைத்ததற்கு ஆனதைப்போல் பன்மடங்கு ஆகும் என்று கணக்கிடும்போது தெரிய வந்ததால் அம்முயற்சிகளைக் கைவிட்டுவிட்டன.

சிலையின் பிரமாண்டம் மற்றும் அதன் வலிமையை ஒப்புமைப் படுத்தி பல கிரேக்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஷேக்ஸ்பியர் தனது ஜூலியஸ் சீசர் காப்பியத்தில் சீசர் வியந்து கொலோசியம் சிலை பற்றி சிலாகிப்பது போல எழுதியுள்ளார். இன்றைய நவீன கவிதை உலகில் புகழ் பெற்று விளங்கும் சில்வியா ப்ளாத் கூட தனது கவிதை ஒன்றில் கொலோசஸ் பற்றி எழுதியுள்ளார். பின்னாளில் வடிவமைக்கப்பட்ட அமெரிக்காவின் சுதந்திர தேவி சிலை, கொலோவியம் சிலையின் தாக்கத்தில் உருவானது தான். அதனால்தான் சுதந்திரதேவி சிலையின் பீடத்தில் புகழ்பெற்ற எம்மா லாசரசின் "நியூ கொலோசஸ்" என்ற கவிதையின் வரிகளைப் பொறித்து வைத்துள்ளனர்.

கொலோசஸ் சிலையை மீண்டும் நிர்மாணிக்க 1970 ஆம் ஆண்டு ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டது. 100 மில்லியன் டொலர் ஆகக் கூடும் எனத் திட்ட மதிப்பீடு கணக்கிடப்பட்டது. ஆனால் நிதி ஆதாரமின்மையால் அந்தத்திட்டம் தொடக்க நிலையிலேயே கைவிடப்பட்டது.(தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2219

### அக்ஷரா

பெற்றோர் திட்டியதால் கிணற்றில் குதித்த மாணவி – செய்தி



அப்படி பார்த்தா நாங்கெல்லாம் கால் மணி நேரத்துக்கு ஒரு தடவை கடலில குதிக்கனும்...

### துஷாந்தன்

இரண்டே வகை நடுத்தரவர்க்க மனிதர்கள் தான்... ஒன்று கடன் வாங்காமல் சமாளிப்பவர்கள்...



இரண்டு கடன் வாங்கிவிட்டு கடன்காரனை சமாளிப்பவர்கள்...

### லக்சனன்

என் பொண்டாட்டிக்கிட்ட தினமும் ஒரு குழம்பு வைக்காதமா. சாப்பிட முடியல வேற குழம்பு வை என்று சொன்னேன்.



அவள் என்ன கோவத்தல இருந்தாளோ தெரியல. குழம்ப எல்லாம் மாத்தி வைக்க முடியாது. குழம்புக்கு பேர் வேணும்னா நீ மாத்தி வைச்சிக்கன்னு சொல்லிட்டாள்...

### தூயவன்

காய்ச்சல் என்று சொல்லி லீவ் கேக்குறாய் உடம்பு நல்லாத்தானே இருக்கு!



அது மர்மக் காய்ச்சல் ரீச்சர்!

### தமிழ்ச்செல்வி

நாம் சாப்பிடும் ஒவ்வொரு அரிசியிலும் நம் பெயரை எழுதியது இறைவன் அல்ல.



தன் வியர்வையை உரமாக்கி விளைவிக்கிற உழவனே.

### கோமளவள்ளி

காலிலே பாம்பு கடிச்சு ஐந்து நிமிடம் கூட ஆகலையே...எப்படி செத்தாரு?



விஷம் தலைக்கு ஏறாம இருக்க கழுத்தில் இறுக்கமா கட்டிட்டோம் டாக்டர்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 240

# தேங்காய் எண்ணெய், தேங்காய் என்பன ஆபத்தானவையா?

தென்னங்கன்றுகள் நம் மண்ணிலே நன்கு வளரக்கூடியன. தமிழர்களின் கலாசாரப் பாரம்பரியங்களுடன் தென்னை பின்னிப் பிணைந்திருக்கிறது. தோரணம் கட்டுவது, நிறைகும்பம் வைப்பது, இளநீர் வெட்டுவது, தேங்காய் உடைப்பது, தேங்காய் எண்ணெயில் தீபம் ஏற்றுவது, கிடுகு வேலிகள், பந்தல்கள் என இந்தத் தென்னம்பிள்ளைகள் நாம் பெற்ற பிள்ளைகளிலும் பார்க்க எமது கலாசார விழுமியங்களுடன் ஒன்றிப்போய் இருக்கின்றன.

நாம் தேங்காயை எவ்வாறு பாதுகாப்பான முறையிலும் பிரயோசனமான முறையிலும் பாவிக்க முடியும் எனச் சிந்திக்க வேண்டும். ஏனெனில் தென்னம்பிள்ளைகள் நமது பிள்ளைகள்.

தென்னைகளை நன்றி உணர்வுள்ள உயிர்களுக்கு உதாரணமாகச் சொல்லுவார்கள். அவற்றுக்கு நாம் ஊற்றிய நீரைக் காலம் கடந்தேனும் இளநீராக எமக்குத் திருப்பித்தருகின்றது என்று சொல்லுவார்கள். பெற்ற பிள்ளைகளிலும் பார்க்க தென்னம்பிள்ளைகள் நன்றி உணர்ச்சி உடையன என்று கூடச் சொல்லுவார்கள்.



முட்டுக்காய்த் தேங்காய்களில் முற்றிய தேங்காய்களிலும் பார்க்கக் கொழுப்பின் அளவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. அதாவது நன்கு முற்றமுன்னர் பிடுங்கப்படும் தேங்காய்களிலே எண்ணெய்ப்பிடிப்பு மிகவும் குறைவாகக் காணப்படுகிறது. அத்துடன் ஒப்பீட்டளவில் புரதச்சத்து அதிகமாகக் காணப்படுகிறது.

எனவே பிட்டு, மோதகம், சம்பல் போன்றவற்றுக்கு முட்டுக்காய்த் தேங்காய்களைப் பாவிப்பது பாதுகாப்பானதாகும். முட்டுக்காய்த் தேங்காய்களிலிருந்து கிடைக்கும் தேங்காய்ப்பாலின் அளவு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதால் கறி சமைக்கும் பொழுது முட்டுக்காய்த் தேங்காய்த் துருவலை அரைத்து கறியில் சேர்ப்பதன் மூலம் சுவையான பாதுகாப்பான ஊட்டச்சத்துள்ள உணவுகளை நாம் தயாரித்துக் கொள்ள முடியும்.

தேங்காய்களை முட்டுக்காய்ப் பதத்தில் பிடுங்குவதன் மூலம் தென்னைகள் காய்க்கும் வீதத்தை அதிகரிக்கச் செய்ய முடியும். இதன் மூலம் தென்னையிலிருந்து அதி உச்ச பயன்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

சிறிய பரிசோதனை ஒன்றின் மூலம் உண்மையிலேயே முட்டுக்காய்த் தேங்காய்களில் சாதாரண தேங்காய்களிலும் பார்க்க எண்ணெய்ப் பிடிப்புக் குறைவாகத்தான் இருக்கிறதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். சம அளவான ஒரு முட்டுக்காய்த் தேங்காய்ச் சொட்டையும் சாதாரண தேங்காய்ச் சொட்டையும் எடுத்து வெயிலில் நன்கு உலர விடுங்கள்.

அதன் பின் இரண்டு சொட்டுக்களையும் தனித்தனியாகக் கடதாசி ஒன்றில் வைத்து அம்மிக் குளவியினால் நசித்து இரண்டினதும் எண்ணெய்த் தன்மையை ஒப்பிட்டுப்பாருங்கள். முட்டுக்காயில் எண்ணெய்த் தன்மையின் அளவு மிகக் குறைவாக இருப்பதை அவதானிக்கலாம்.

முட்டுக்காய்த் தேங்காய்த் துருவல் இலகுவில் சமிபாடடையக் கூடியதாக இருக்கிறது. இதனால் இதனை நோயாளர்களும் பயன்படுத்தலாம். முட்டுக்காய்த் தேங்காய்களில் கொலஸ்ட்ரோல் இல்லை. தாவர உணவுகளில் பொதுவாக கொலஸ்ட்ரோல் காணப்படுவதில்லை. ஆனால், சிலவகையான தாவர உணவுகள் உடலினுள் சென்று உடலின் கொலஸ்ட்ரோல் கொழுப்பு வீதத்தைக் கூட்டவல்லன. எனவே, கொழுப்பு அதிகமுள்ள தாவர உணவு வகையைக் குறைத்துக் கொள்வது நல்லது.

முட்டுக்காய்த் தேங்காய்களில் இளநீர் அதிகமாக இருக்கும். இது குடிப்பதற்கு ஆரோக்கியமான இயற்கையான ஒரு பானமாகும். செயற்கையாகத் தயாரிக்கப்பட்டு விற்பனையாகும் சோடா வகைகளுடனும் மென்பான வகைகளுடனும் ஒப்பிடும் பொழுது இளநீர் மிகவும் பாதுகாப்பானது. எனவே முட்டுக்காய்த் தேங்காய்களைப் பாவிக்கும் பொழுது ஒரு மேலதிக நன்மையாகக் குடிப்பதற்குப் போதுமான அளவு இளநீரும் கிடைக்கிறது.

எனவே, தேங்காய்களை முற்றமுன் முட்டுக்காய்களாகப் பிடுங்கிப் பயன்படுத்துவதன் மூலம் தென்னையின் பயன்களைப் பெருக்கிக் கொள்வதுடன் எமது உடற் சுகத்தையும் மேம்படுத்திக்கொள்வோம்.

பொரித்து எடுக்கும் உணவு வகைகளை தயாரிப்பதற்கு தேங்காய் எண்ணெய் சிறந்தது.

பொரிப்பதற்கு நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் வகைகள் சிறந்தவை அல்ல. இந்த எண்ணெய் வகைகளை கொதிக்க வைக்கும் பொழுது அவை 'ரான்ஸ்' கொழுப்பாக மாற்றமடைகின்றன. இந்த 'ரான்ஸ்' கொழுப்பு உடல் நலத்துக்கு பாதுகாப்பானது அல்ல.

தேங்காய் எண்ணெயை கொதிக்க வைக்கும் பொழுதும் அது 'ரான்ஸ்' கொழுப்பாக மாற்றமடையாது. இதனால் பொரித்த தேங்காய் எண்ணெயை 2ஆம் முறை பொரிப்பதற்கு பாவிப்பதும் பெரிய பாதிப்பு எதனையும் ஏற்படுத்த மாட்டாது.

பொதுவாக எல்லாவகையான எண்ணெய்களையும் அளவுடன் பாவிப்பது நல்லது. எண்ணெய் சேர்த்து வதக்கி எடுக்கும் சமையலுக்கு நல்லெண்ணெய், ஒலிவ் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் என்பன சிறந்தவை. பொரித்து எடுக்கும் உணவு வகைகளை தயாரிப்பதற்கு தேங்காய் எண்ணெய் சிறந்தது.

Dr.சி.சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்